# திருவையாறு

ஆசிரியர்

சு. இராஜகோபால், எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு
1976

முதற் பதிப்பு. 1976. — 1000 பிரதிகள்
தொ. பொ. ஆ. துறை. வெ. எண். 42

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

ஆசிரியர் :

சு. இராஜகோபால், M.A., Dip. Epgy. & Arch.
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

விலை :

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப் பெற்றது.

6983
PUBLIC LIBRARY MADRAS 23 MAR 1977

# பதிப்புரை

தமிழ் நாட்டில் உள்ள ஏராளமான கலை மலிந்த கோயில்களை வரலாற்றுக் கண்ணுடனும், விஞ்ஞானக் கண்ணுடனும், கலைக்கண்ணுடனும் காண்பதற்கு இன்றைய இளைய சமுதாயத்தினர் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எங்கள் அவா. அப்பொழுதுதான் நமது முழுமையான பண்பாட்டுச் சிறப்பை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். அவ்வாறு எங்கே பார்க்கிறார்கள்! அழகான அக்கோயில்களில் அவற்றின் வரலாற்றை எடுத்துக் கூறும் கல்வெட்டுக்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றைப் படிப்பதற்கு எத்தனை பேருக்குத் தெரியும்! இவ்வளவு பரந்த தமிழ் நாட்டின் வரலாறு முழுவதும் அக்கல்வெட்டுக்களில் நிறைந்திருக்கின்றன. நமது சமயம், சிற்பங்கள், ஓவியங்கள், அரசியல், சமுதாய வரலாறு இவை அனைத்தையும் நம் இளைஞர் சமுதாயம் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அந்த சமுதாயத்தினை உருவாக்க அரசு மேற்கொண்ட முயற்சியே தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் நிறுவியுள்ள கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம். இதில் ஓராண்டு பயிற்சி பெறும் மாணவர்கள் இறுதியில் ஒரு கோயிலை எடுத்துக்கொண்டு விரிவாக வரலாற்று அடிப்படையில் எழுதவேண்டும் அவ்வாறு உருவானதே திரு இராஜகோபால் எழுதியுள்ள நூல். இந்நூல் கல்வெட்டு நிறுவனத்தில் படிக்கும் மாணவர்கள் பயனுள்ள ஆக்கச் செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்நூலே எங்கள் மாணவர்கள் எழுதிய நூல்களில் முதலாவதாக வெளிவருவது. எங்கள் மாணவர்களது நூலை வெளியிடுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

இரா. நாகசாமி

# முன்னுரை

திருவையாறு தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புடன் விளங்கும் கோயில்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற ஊர். இவ்வூரின் மீது தெய்வப் பெரியார்களான அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், ஐயடிகள் காடவர்கோன் முதலியோர் தெய்வப் பாடல்கள் பாடிச் சிறப்பித்துள்ளனர். தமிழகக் கோயிற் கலை பற்றியும், சிற்பக்கலை பற்றியும் அறிய முனைபவர்களுக்குத் திருவையாறு ஒரு வரப்பிரசாதம். தமிழகப் பெருமன்னர்களான இராஜராஜன், இராஜேந்திரன் ஆகியோரின் பட்டத்தரசிகள் இங்கு ஆளுக்கொரு கோயில் எடுத்து அணி சேர்த்துள்ளனர். நுளம்ப நாட்டிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்ட வெற்றிச் சின்னங்களான நுளம்பர் நாட்டுத் தூண்கள் சோழர்களின் பெரும் வெற்றியையும், கலையார்வத்தையும் சிறக்க உணர்த்துபவை. சோழர் வரலாற்றைத் தொகுப்பதில் இவ்வூரில் உள்ள கல்வெட்டுக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. சோழ மன்னர்களில் ஏறக்குறைய எல்லோரும் இவ்வூருக்குச் சிறப்புச் செய்துள்ளனர். தஞ்சை நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் திருவையாற்றைப் புனிதமாகக் கருதிப் போற்றியுள்ளனர். தியாகராஜசுவாமிகள் இங்கு பல ஆண்டு காலம் வாழ்ந்து இசைக்குப் பெருந் தொண்டு புரிந்துள்ளார். இவ்வூரின் பெருமைகள் இன்னும் எத்தனை! எத்தனையோ!!

இவ்வரிய ஊரிலமைந்த கோயில்களைப் பற்றி எழுதும் வாய்ப்பு எனக்கு வாய்த்தது பெரும்பேறுகும். இவ்வரிய ஊரைப் பற்றியும், கோயில்களைப் பற்றியும் நான் முழுக்கவும் முடித்து விட்டேனு என்பது கேள்விக்

குறி தான். எனது அனுபவக் குறைவாலும், கவனக் குறைவாலும் திறமைக்குறைவாலும் விடப்பட்டவைகள் இருக்கலாம். இது எனது முதல் நூல், கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 1973-74-இல் மாணவனுயிருந்த போது இறுதித் தேர்வின் ஒரு பகுதியாக எழுதியதின் நூல்வடிவம். இதில் காணும் குறைகள் திருத்தி, நிறைகள் போற்றி எனக்கு ஊக்கமளிக்க ஆன்றோரை வேண்டுகிறேன்.

கல்லூரிப் படிப்பை முடித்ததும் எங்கு செல்வது, என்ன செய்வது என விழித்துக்கொண்டிருந்த என்னை இங்கு செல், இப்படிச் செய் என்று இத்துறைக்கு வழி திருப்பி, வழி காட்டி, வழி நடத்தி வருபவர்கள் திரு கம்பன் அடிப்பொடி, காரைக்குடி சா. கணேசன் அவர்கள்.

கோயில் என்றால் மணியடிப்பார்கள், தீபம் காட்டுவார்கள், நாமும் சென்று தேங்காய் உடைத்து வழிபட்டு வருவோம், என்ற அளவில் இருந்த என்னை; கோயிலில் உறையும் தெய்வங்கள் இப்படி; கோயிலின் அமைப்பு இப்படி; சுவர்களில் உள்ள கல்வெட்டுக்கள் இப்படி; அவற்றைப் படிப்பது இப்படி; அவற்றில் உள்ள பண்டையச் சமுதாயத அரசியல், பண்பாட்டு வரலாற்றை அறிவது இப்படி; என்று படிப்படியாகப் பாடம் புகட்டி, என்னை ஆளாக்கி, கல்வெட்டாய்வாளனுகைத் தகுதியடையச் செய்து; இந்நூலை எழுதச் செய்து அதை வெளியிட முன் வந்தவர்கள் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள்.

பல விதத்திலும் ஊக்கமும், உறுதியும் தந்து அன்புடன் உதவிகள் பல செய்தவர்கள்; அன்றைய கல்வெட்டாய்வாளர்களும், ஆசிரியர்களுமான இன்றையத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் பதிவு

அலுவலர்கள்; உடன் பயின்றவர்கள்; உடன் பணி யாற்றுபவர்கள் எல்லோரும்.

இந்நூலுக்கானச் செய்திகளைத் திரட்டியபோது திருவையாற்றில் பலவிதத்திலும் செய்திகள் அளித்தும், ஒத்துழைப்பு நல்கியும், பேருதவி புரிந்தவர்கள் கோயில் அலுவலர்கள், ஆசிரியர்கள், பேரூராட்சி ஊழியர்கள், திருவையாற்றுப் பொதுமக்கள் முதலியோர்.

அச்சுக்குப் புதியவனான நான் கொடுத்த சிரமங் களையும் பொருட்படுத்தாது, பொறுமையுடனும், அன்புடனும் இந்நூலை சிறப்பாகவும், அழகாகவும் அச்சாக்கித் தந்தவர்கள் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சுப் பிரிவினர்.

எனது உழைப்பிலும், முன்னேற்றத்திலும் அதிக அக்கறை கொண்டவர்கள் எனது தந்தையும், உறவி னர்களும், நண்பர்களும்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் எனது பணிவான அன்பு நிறைந்த வணக்கமும், நன்றியும்.

சு. இராஜகோபால்

# பொருளடக்கம்

3 MAR 1977 MADRAS

| | |
|---|---|
| **திருவையாறு** | **1—20** |
| நிலவளம் | 1 |
| ஊரும் பெயரும் | 3 |
| ஊரமைப்பு | 6 |
| சமுதாயம் | 7 |
| சிறப்புச் செய்திகள் | 13 |
| **கோயில்கள்** | **21—64** |
| ஐயாறப்பன் கோயில் | 21 |
| ஓலோகமாதேவீஸ்வரம் | 36 |
| தென்கயிலாயம் | 41 |
| திருக்கோபுரங்கள் | 47 |
| மண்டபங்கள் | 51 |
| செப்புத்திருமேனிகள் | 54 |
| ஓவியங்கள் | 58 |
| உதிரிச் சிற்பங்கள் | 62 |
| **வழிபாடும், விழாக்களும்** | **65—74** |
| **கல்வெட்டுச் செய்திகள்** | **75—121** |
| மன்னர்கள் | 77 |
| அரச குடும்பத்தினர் | 84 |
| ஊரும் நாட்டுப் பிரிவும் | 93 |
| கல்வெட்டுக்களில் இறைவன் பெயர் | 96 |
| கொடைகள் | 98 |
| இறைவனுக்குப் பணிசெய்த ஊழியர்கள் | 109 |
| பூசைகள் விழாக்கள் செலவுகள் | 110 |
| ஓடிய வாய்க்கால்களும் நிலவகைகளும் | 112 |
| அளவுகளும் பொருள் மதிப்பும் | 113 |
| சிறப்புச் செய்திகள் | 116 |
| **இலக்கியச் செய்திகள்** | **122—130** |

# பிழைத் திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 17 | மாடி | மாடு |
| 14 | 22 | நிதசால | நிதிசால |
| 19 | 23 | 13 | 15 |
| 23 | 17 | நீராட்டும் | நீரட்டும் |
| 25 | 21 | கி.பி. 18 | கி.பி. 17 |
| 26 | 21 | தடி | உலக்கை |
| 28 | 31 | இதன் | தென் |
| 35 | 19 | கைவிளக்கு | கைவிலங்கு |
| 40 | 25 | பானையையே | யானையையே |
| 42 | 1, 8 | கி.பி. 1143 | கி.பி. 1043 |
| 50 | 20 | கி.பி. 18 | கி.பி. 17 |
| 65 | 24 | பட்டியவிலிருந்து | பட்டியலிலிருந்து |
| 68 | F.N | அச்சுதப்பராயர் | அச்சுதராயர் |
| 87 | 11 | Colms | Cōlās |
| | 22 | கண்டன | கண்டன் |
| | 28 | டையைபறைநடத்திச் | படையை நடத்திச் |
| 115 | F.N | 1536 | 1376 |

# திருவையாறு

## நிலவளம்

தஞ்சைக்குச் சற்று வடமேற்கே 7 கல் தொலைவில் திருவையாறு அமைந்துள்ளது. பூகோளப்படத்தில் இதன் இடத்தை வடக்கு அட்சரேகை 10° 51′ என்றும், கிழக்குத் தீர்க்கரேகை 70° 10′ என்றும் குறிப்பர்.[1]

இயற்கை அமைப்பில் 'டெல்டா' பிரதேசம் என்று சொல்லப்படுகின்ற, ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியான வண்டல் மண் வளமுடைய நிலப்பரப்பில் திருவையாறு அமைந்துள்ளது. இது அமைந்துள்ள பகுதியைக் காவிரியின் டெல்டாப் பிரதேசம் என்று கூறுவர். திருவையாற்றைச் சார்ந்த நிலங்கள் அனைத்தும் நன்செய் நிலமாகவே உள்ளன. புன்செய் நிலமே கிடையாது என்று சொல்லலாம்.

இங்கு வாழும் மக்களின் தொழில் விவசாயமும் அதன் சார்புடைய தொழில்களுமே ஆகும். நெல், வாழை முதலியன பயிர்ப்பொருள்கள். பயறு வகைகளும் தாளடியில் விளைவிக்கப் படுகின்றன. தென்னை, மா, கமுகு முதலியன அடர்ந்த தோப்பு களாக எங்கும் விளங்குகின்றன. இப்பகுதியில் மூன்று போகம் விளைச்சல் தரும் நிலங்களும் உண்டு. எல்லா நிலங்களும் ஆற்றுப்பாசனம் உடையவை. நல்ல நிலத்தில் நல்ல நெல் வகை ஏக்கருக்கு 110 கலம் வரையில் விளைச்சல் தருகின்றது.

கால்நடைகள் மிகுந்து காணப்படுகின்றன. பால், தயிர், காய்கறிகள் முதலியவை செழித்துள்ளன. சுருங்கச் சொன்னால் திருவையாறு உணவில் தன்னிறைவு அடைந்து பிற வெளி மாவட்டங்களுக்கு உதவி வருகின்ற ஓர் ஊராகும்.

இவ்வூரின் இயற்கை வளம் இலக்கியங்களில் சிறக்கப் பேசப்படுகின்றது.

---

1. 'A Manual of the District of Tanjore' T. Venkasami Row-1883.

### திருஞானசம்பந்தர்

'தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே'[2] என்றும்,
'குன்றெலாம் குயில் கூவக் கொழும்பிரச
மலர் பாய்ந்து வாசமல்கு
தென்றலாரடி வருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே'[3] என்றும்,
'செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல் படியுந் திருவையாறே'[4] என்றும் பாடுகின்றார்.

### திருநாவுக்கரசர்

'மொட்டிடு கமலப் பொய்கை திருவையாறு'[5]
'மடுக்களில் வாளை பாயுந் திருவையாறு'[6]
'நறவமார் பொழில்கள் சூழ்ந்த திருவையாறு'[7]
'மல்லிகை மலருஞ்சோலைத் திருவையாறு'[8]

என்று பலவிதமாகத் திருவையாற்றின் இயற்கை வளத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

### சுந்தரர்

'கரவிலருவி கமுகுண்ணத்
தெங்கங் குலைக்கீழ் கருப்பாலை
அரவந் திரைக் காவிரிக் கோட்டத்
தையாறுடைய அடிகளோ'[9] என்றும்,
'விதிர்த்து மேக மழை பொழிய
வெள்ளம் பரந்து நுரை சிதறி

---

2. தேவாரம் அடங்கன் முறை பாடல் 1397
3. தேவாரம் அடங்கன் முறை பாடல் 1400
4. ,, பாடல் 1401
5. ,, பாடல் 4544
6. to 8 ,, பாடல்கள் 4546-4548
9. ,, பாடல் 8005

அதிர்க்குந் திரைக் காவிரிக் கோட்டத்
தையாறுடைய அடிகளோ’[10] என்றும்

திருவையாற்றின் நிலவளம் பேசுகின்றார். இன்றும் திருவையாறு செல்பவர்கள் அதன் இயற்கை வளத்தையும், சிறப்பையும் கண்டு மகிழாது இருக்கமுடியாது.

## ஊரும் பெயரும்

தமிழகத்தில் பண்டு அழகிய பெயர்களுடன் விளங்கிய ஊர்கள் பல இன்று தொடர்பில்லாத புதுப்பெயர்களைப் பெற்று விளங்குகின்றன. மாமல்லை, மாமல்லபுரம் என்ற அழகிய பெயர் மகாபலிபுரம் என்று மாறி விட்டது. ராஜராஜீசுரம் என்ற பெயர் தாராசுரம் என்று மருவிவிட்டது. அச்சிறுப்பாக்கம், அச்சரப்பாக்கமாகி விட்டது. திருத்தவத்துறை ஏனே லால்குடி என்று பெயர் பெற்று விட்டது. அறைஅணிநல்லூர், அரகண்ட நல்லூராகி விளங்குகிறது. இப்படி எத்தனையோ உதாரணங்கள் சொல்லலாம். ஆனால் திருவையாறு என்ற பெயர் இன்றும் திருவையாறு என்றே வழங்குகின்றது.

கல்வெட்டுக்கள் திருவையாறு என்றே குறிப்பிடுகின்றன. இவ்வூர் வடமொழியில் உள்ள சில புராணங்களில் பஞ்சநதம் என்றும் பெயர்பெற்று விளங்குகின்றது. இம்மொழிபெயர்ப் பின் உட்கருத்து ஐந்து நதிகளை உடைய ஊர் என்பதே. இவ்வூருக்குத் திருவையாறு என்று பெயர் ஏற்பட்டது எவ்வாறு என்பதை இங்கு நோக்குவோம்.

‘ஐயாறு’ என்றால் காவிரிக் கரையிலுள்ள அழகிய ஊர் என்றுதான் பொருள் என்று உயர்திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் தனது நூலில்[1] உறுதியாகக் கூறுகின்றார். அவர் ஐந்து ஆறுகள் என்று மற்றவர்கள் கருத்தை ஒப்புக்கொள்ளவில்லை; அல்லது அதை விவாதிக்கவில்லை.

---

10. தேவாரம் அடங்கன் முறை பாடல் 8013
1. ‘வேங்கடம் முதல் குமரிவரை’ 1961.

ஐந்து ஆறுகள் எவை எவை என்பதிலும் சிறுவேறு பாடுகள் உள்ளன. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள் வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவேரி ஆகியவை ஐந்து ஆறுகள் என்று மக்கள் குறிப்பிட்டதாய்க் குறிக்கிறார். கி.பி. 1883ல் வெளியாகிய A Manual of the District Tanjore என்ற நூலில் திருவையாறு பெயர்க் காரணம் குறிப்பிடுகின்ற இடத்தில் ஐந்து ஆறுகளாக வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி, கொள்ளிடம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இங்கு, வடவாறு விடப்பட்டு கொள்ளிடம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

மேலும், இன்று குடமுருட்டியாற்றின் தென்கரையில் உள்ள 'கண்டியூர்' என்ற ஊரைச் சைவக்குரவர்கள் 'காவிரித் தென்கரை கண்டியூர்'[3] என்றே பாடியுள்ளனர். குடமுருட்டி ஆறு அன்று ஓடியிருந்தால் அவர்கள் குடமுருட்டித் தென் கரையில் உள்ள கண்டியூர் என்று பாடியிருக்க வாய்ப்பு உண்டு. ஐயாறு என்று பெயர் வழங்கிய காலத்தில் ஓடாத குடமுருட்டி ஆற்றை இன்று ஐந்து ஆறுகளில் ஒன்றாக கணக்கிட வாய்ப்பில்லை என்றே சொல்லவேண்டும்.

'வெட்டாறு' என்று விளங்கும் பெயராலேயே அது வெட்டப்பட்ட ஆறு என்பது தெளிவாகிறது. அது எப்பொழுது வெட்டப்பட்டது என்பது தெரியவில்லை. அது 'ஐயாறு' என்ற பெயர் வழங்கத் தொடங்கியதின் பிறகு வெட்டப்பட்டிருந்தால் ஐந்து ஆறுகள் கணக்கிலிருந்து அதுவும் விடுபட்டு விடுகின்றது. எனவே ஐந்து ஆறுகள் எவை எவை என்பது தெளிவில்லை.

திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் திருவையாற்றைக் குறிக்கின்றபோது அதன் வடமொழிப் பெயரான பஞ்சநதம் என்பதனைக் குறிப்பிட்டு அதற்கு அடிக்குறிப்பில் 'பஞ்சநதிகள் பாயும் பிரதேசத்தைப் பஞ்சாப் என்றழைப்பர் வடநாட்டார். ஐயாறு

3. இரண்டாம் திருமுறை, தருமபுர ஆதீனவெளியீடு எண் 317, 1954

என்ற தமிழ்ப் பெயரும் அப்பொருளையே தரும்'[4] என்று குறிப்பிடுகின்றார். ஆனால் இவர் ஐந்து நதிகள் எவை எவை என்று குறிப்பிடவில்லை.

'ஐயாறு' என்ற ஊரின் பெயர், ஐயாறன் என்ற இறைவனது பெயரையே பெற்றது என்ற கருத்தும் உண்டு. இறைவன் கங்கையைத் தலையில் சூடியிருப்பதால் அழகிய ஆற்றினை உடையவன் என்று பெயர் பெற்றான்.

ஐயாறப்பன் கோயிலின் தென்புறம் உள்ள 'தென் கயிலாயம்' என்ற கோயிலில் ஒரு பாடல் கல்வெட்டு உள்ளது. இது வானவன் மாராயன் என்பவன் 'பஞ்சநதிவாணன்' திருவுருவை மீட்டதாகக் குறிக்கின்றது. இக்கல்வெட்டு சுமார் கி. பி. 1025-ஐச் சேர்ந்தது. இறைவனது பெயர் பஞ்சநதி வாணன் என்பதில் 'ஐந்துநதிகள்' குறிப்பிடப்படுகின்றனவே யன்றி 'அழகிய ஆறு சூடியவன்' என்ற கருத்துக் குறிப்பிடப் படாதது நோக்கத்தக்கது.

தமிழகத்தில் உள்ள ஊர்ப்பெயர்களைக் கூர்ந்து கவனித்தால் இறைவனுக்கு ஊர்ப்பெயரும், ஊருக்கு இறைவனது பெயரும் வருவதை நன்கறியலாம். அதோடு நிலத்தின் அடிப்படையிலும் ஊரின் பெயர்கள் வழங்குகின்றன. வயல்கள் சூழ்ந்த பகுதி நத்தம் என்றும், குன்றின் அருகில் அமைந்த ஊர் குன்றம், கோடு என்றும், ஆற்றோரம், கடலோரம் அமைந்த ஊர்கள் துறை என்றும் நில அமைப்பைக் கருத்தில் கொண்டு வழங்கப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டால் திருவையாறு ஐந்து ஆறுகள் அமைந்த நிலப்பகுதியில் ஒரு குறிப்பிடத்தக்க ஊராக விளங்கியதால் 'திருவையாறு' எனப் பெயர்பெற்றது என்று ஏற்றுக்கொள்ள இடமிருக்கின்றது. காவிரியின் கரையில் எத்தனையோ தலங்களிருக்க திருவையாறு 'காவிரிக்கோட்டம்'[5] எனச் சிறப்பாக அழைக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

4. தமிழகம்–ஊரும்பேரும்–நான்காம் பதிப்பு; பக்கம் 179
ரா. பி. சேதுப்பிள்ளை 1968

5. தேவாரம் அடங்கன்முறை, பாடல் 8107

இவ்விதம் திருவையாறு என்று பன்நெடுங்காலமாக வழங்கிவந்த இப்பெயர் ஆங்கிலேயர் செல்வாக்கு பெற்ற காலத்தில் 'திருவாதி' என்று மருவி வழங்கப்பட்டது. இக் கோயிலில் உள்ள பிற்காலக் கல்வெட்டுகள் (சுமார் 100 ஆண்டு களுக்கு முற்பட்டவை) இவ்விதமே குறிப்பிடுகின்றன. 'திருவியார்' என்றும் 'திரு வைய்யார்' என்றும் அழைக்கப்பட்டதும் உண்டு.

## ஊரமைப்பு

திருவையாறு காவிரியின் வட கரையில் அமைந்துள்ளது. இந்த ஊர் கோயிலை மையமாகக் கொண்டு அமைந்த ஊராகும். இவ்வூர் நான்கு பெரும் வழிகள் சந்திக்குமிடமாகவுள்ளது. இதன் கிழக்குநோக்கி செல்லும் சாலை கும்பகோணத்திற்கும்; தெற்கு நோக்கிச் செல்லும் சாலை தஞ்சைக்கும்; மேற்கு நோக்கிச் செல்லும் சாலை கல்லணைக்கும்; வடக்கு நோக்கிச் செல்லும் சாலை கொள்ளிடம், திருமானூருக்கும் செல்ல அமைந்துள்ளன.

இவ்வூரில் பஞ்சாயத்து, காவல் நிலையம், தினச்சந்தை, நீதிமன்றங்கள், பள்ளிகள், மருத்துவ நிலையங்கள் முதலியன உள்ளன. ஊரிலுள்ள வீடுகளில் பெரும்பாலும் கிணறு, தோட்டம் முதலியவை உள்ளன. ஊரில் வீடுகள் அளவிற்கு சத்திரங்கள் உள்ளன என்றுகொண்டால் மிகையாகாது. கடைத்தெரு கோயிலை ஒட்டியே அமைந்துள்ளது.

கல்யாணபுரம், காருகுடி, தில்லைஸ்தானம், அம்மாகிராமம் போன்ற ஊர்கள் இதன் எல்லையில் அமைந்த ஊர்களாகும்.

இவ்வூர் பேரூராட்சியால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. 5-5-1886-ல் பேரூராட்சி அமைக்கப்பட்டு கி. பி, 1939—1941 ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களது நிருவாகத்தில் செயல்பட்டு 13-8-73 முதல் தேர்வு நிலை பஞ்சாயத்து யூனியனாக இருந்து வருகிறது. இதன் உறுப்பினர்கள் தலைவர், பெண் உறுப்பினர் உட்பட 10 பேர் ஆவர்.

இவ்வூராட்சியின் பரப்பு 3.25 சதுர கிலோமீட்டர் ஆகும். இதன் ஜனத்தொகை 1961-ஆம் ஆண்டு 11,110 ஆக இருந்தது. 1971-ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 12,867 ஆக உயர்ந்துள்ளது.

இப்பேரூராட்சியின் ஆண்டு வருமானம் ரூ. 1,80,000 ஆகும். பராமரிப்புச்செலவுக்காக ரூ. 1,75,800 செலவிடப்படுகிறது.

இவ்வூர் நீர் வளமும், பசுமையும் சூழ்ந்தது. ஆகையால் கொசுத் தொல்லை அதிகமாகவுண்டு. யானைக்கால் வியாதியுடையவர் எண்ணிக்கை அதிகம். கொசுத் தொல்லையை ஒழிக்க ஆண்டுதோறும் 15,000 ரூபாய் வரை செலவிடப்படுகிறது.

7,000 சிறுர்களில் 6,250 பேர் பள்ளிசென்று பயிலுகின்றனர். சுருக்கமாகச் சொன்னுல், இவ்வூர் இயற்கை எழிலுடன் அமைதியான சமுதாயத்தைப் பெற்ற ஓர் ஊர் ஆகும்.

## சமுதாயம்

ஒரு சமுதாயத்தைப் பற்றிச் சொல்லப்போனுல் நாம் சொல்ல வேண்டியவையும், திரட்ட வேண்டியவையும் கணக்கில் அடங்காது. அதுவும் திருவையாறு போன்ற பன்னெடுங்கால வரலாற்று, சமயச் சிறப்புமிக்க ஓர் ஊரைக் குறிப்பிடுவதென்ருல் பொறுப்பும் அதிகமாகும்.

### விவசாயம்

திருவையாற்றின் ஜனத்தொகை இன்று சுமார் 13,000 இருக்கும். மக்களில் பெரும்பகுதியினர் விவசாயிகள். விவசாயமின்றி வேறு தொழில் இல்லை என்றே சொல்லலாம். கடைகள் வைத்திருப்பவர்களிலும் பெரும் பகுதியினர் விவசாயிகளாகவே உள்ளனர். விவசாயச் சிறப்பு பெற்ற இடமாதலால் பொங்கல் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மாட்டுப் பொங்கலன்று இறைவனே 'பாரிவேட்டை' என்ற பெயரில் மாடு விரட்டிச் செல்கின்ருன். இங்கு, சமய வழிபாட்டில், சமுதாய

த்தின் பங்கு மிகுந்திருக்கும் நிலையை நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

### உழவுப் பாட்டு

ஏர் உழும்போது பாடுகின்ற பழக்கம் எங்குமுண்டு. இங்குக் கிடைத்த ஒரு பாடல் : [1]

"எட்டு ஏர் கட்டியவுகோ
எடத்தில் ஓர் யானைகட்டி
யானை கட்டும் சங்கிலியை
யார் எடுப்பார் வையகத்தில்
பிள்ளையார் தேரோட
பெருமாள் கொடிபறக்கும்
கோணக்கொம்பு மாடுகட்டி
கும்ப கர்ண வயல் உழுது"

தமிழக வளம் கூறுமிடங்களில் சோழநாடு சோறுடைத்து என்பதும்; அன்று யானைகள் கட்டி போரடித்தனர் என்பதும் குறிப்பிடப்படும் வழக்குகளே.

"கோணக் கொம்பு மாடிகட்டி
கும்பகர்ண வயல் உழுது"

அதனால் வரும் செழிப்பில் மிதக்க,

"பிள்ளையார் தேரோட
பெருமாள் கொடி பறக்கும்".

இக் கருத்து உழவில்லையேல் சமயச் செழிப்பு இல்லை என்பதை நினைவுறுத்தாமல் இல்லை. இந்நிலையில் 1000 வருடங்களுக்கு முந்தைய கல்வெட்டுச் செய்திகளில் குறிப்பிடப்படும் அளவு சமயச் செழிப்பு இன்று இல்லாமையையும் உணர்கிறோம்.

---

1. பாடல் வழங்கியவர் ஐயாறப்பன் கோயிலில் பணிபுரியும் பருத்திக்குடி துரைசாமி மூப்பனார்.

ஏழு கலம்

உழவர்கள் போரடிக்கும் போது ஒருவழக்கினைப் பின்பற்று வதாகத்தெரிகிறது. Madras District Gazetteers Tanjore Vol. I (1906) இதனைக் குறிப்பிடும்பொழுது 'கால் நடை வழிபாடு' என்று குறிப்பிடுகிறது. இப்பழக்கம் இன்றும் வழக்கில் உள்ளது. இதற்கு 'ஏழு-கலம்' என்று பெயர் சொல் கின்றனர்.

இதன்படி போரடிக்குமிடத்தில்ஒரு இடைச் சிறுவன் வயிற்றில் நெல்லைக்கட்டி முன்னால் எருதுகள் சுற்றிவர அதன் பின்னால் இவனது கால்களைப் பிடித்து இழுத்து வருவார்கள். ஒருவர் கூடையில் நெல்வைத்துக்கொண்டு நான்கு பக்கமும் இறைத்து வருவார். கடைசியில் அந்த இடையர் பையனுக்கு அவன் வயிற்றில் கட்டிய நெல் சேரும். இப்பழக்கம் எதற்கு என்று தெரியவில்லை.

விவசாயத்திற்கு மழை இன்றியமையாததால் மழை பெய்ய வேண்டும் என்பதற்காக ஒரு வழக்கத்தைப் பின்பற்றுகின்றனர். மழை வராத காலங்களில், அவ்வூர் வெட்டியான் ஒரு மண் பொம்மையைச் செய்து நாலு சக்கர உருளைமீது வைத்து இழுத்துச் செல்வான். கடைதோறும் அவனுக்குக் காசு கொடுக்கப்படும். வழிதோறும் அவன் மழை வரவில்லையே என்று ஒப்பாரிப் பாடல்கள் பாடிச் செல்வான்.

சமயம்

திருவையாற்றில் விவசாயத்தை அடுத்து நமக்குத் தெரிவது சமயம். திருவையாற்றைக் காசியோடு ஒப்பிட்டு, இது 'காசிக்கு வீசம் அதிகம்' என்று கூறுகின்றனர்.

காசி என்றதும் நினைவிற்கு வருவது இறந்தவர்களுக்கு இறுதிச் சடங்குகளை அப்புண்ணிய தலத்தில் செய்வதாகும். திருவையாற்றிற்கு இறந்தவர்களது அஸ்தியைக் கரைக்க நாள் தோறும் எங்கிருந்தாவது மக்கள் வந்தவண்ணம் இருக்கின்றனர். அவர்களை அடையாளம் கண்டுகொண்டு பேருந்து நிலையத்தி

லேயே சூழ்ந்து கொள்கின்ற சோதிடப் பிராமணர்களை நாம் மறக்க முடியாது. இவர்கள் 'பஞ்சாங்கக்கார ஐயர்' என்று மக்களால் அழைக்கப்படுகின்றனர்.

ஆற்றின் மணற் பரப்பில் அஸ்திகரைக்க வந்தவர்களை அமர்த்தி, மனிதப் படம் ஒன்று வரைந்து அவர்கள் கொண்டு வந்த தலைப் பகுதியைத் தலையிலும் கால்பகுதியைக் காலிலும் (படத்தில்) வைத்து புண்ணிய நீராட்டி, மந்திரங்கள் சொல்லி அங்கு எஞ்சியவற்றை மூட்டை கட்டி அவர்களைத் தோளில் சுமக்கச் செய்து நீருள்ள இடத்தில் (ஆற்றில்) கரைக்கச் செய்கின்ற காட்சி, எண்ணற்ற பிற ஊர் மக்கள் திருவை யாற்றைப் புனிதமாகக் கருதுவதைக் காட்டுகின்றது.

திருவையாற்றுக் கோயிலையே இந்த சமுதாயம் சார்ந்தி ருக்கிறதென்று சொன்னால் அது மிகையாகாது. இங்கு நிகழும் திருவிழாக்களும் ஆண்டுதோறும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளும் இல்லையெனில் இவ்வூரில் இவ்வளவு மக்கள் தொகை இருக்க வாய்ப்பில்லை.

## திருமணம்

ஊரின் மக்கள் தொகையில் பெரும்பங்கு வகிக்கும் பிராம ணர்களைப் போலவே 'மூப்பனார்' என்ற வகுப்பினரும் சம பங்கு வகிக்கின்றனர். இவர்களது தொழில் விவசாயம்தான். இவர் கள் மணமுறை பற்றி அறியமுடிந்தது, இவர்கள் ஜாதகம், பெயர் பொருத்தம் பார்த்துத் தாய்தந்தையர் முடிவுப்படி, மண மக்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். திருமணம் மணமகன் வீட்டில் நிகழ்கிறது. திருமணத்திற்கு 3 அல்லது 5 நாட்களுக்கு முன் முகூர்த்தக்கால் நடுதல் என்ற நிகழ்ச்சி நிகழ்கிறது. மணவறை யில் வண்ணான் பாவாடை என்று துணி ஒன்று மேலே கட்டப் படுகின்றது. மணவறை அருகில் அம்மி, குழவி வைக்கப்படு கின்றன. இருபுறமும் இரண்டு குத்து விளக்குகள் வைக்கப் பட்டிருக்கும். அம்மிமேல் 4 மரக்கால் நெல் பிடிக்கும் பானை ஒன்று வைக்கப்பட்டு அதில் மஞ்சள்நீர் வைக்கப்பட்டு அதனுள் எழுத்தாணி ஒன்றும், பனைஓலை ஒன்றும் போடப்பட்டிருக்கும்.

பானைக்கு அழகிய வண்ணக்கோலமுமிடுவர். மணவறை முன்பாக அரசாணி என்ற, மூன்று ஜோடி மண்பொம்மைகள், ஒன்றன் மீது ஒன்ருக அடுக்கப்பட்டு முப்புறமும் மூங்கில் வைத்துக் கட்டப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கும். அதன்மேலே லெட்சுமி உருவமும் வைக்கப்பட்டிருக்கும்.

குயவன் புதிதாகச் செய்து கொண்டு வந்த ஐந்து குந்தாணிகள் (முளைப்பாலிகை) மணவறை முன்னதாக வைக்கப் படும். முன்தினங்களில் ஊறி முளைவிட்ட நவதானியங்கள் அவற்றில் இருக்கும்.

திருமாங்கல்யம் மணமகன் வீட்டார் செலவில் தயாரிக்கப் பட்டதாக இருக்கும். மஞ்சள் கயிறும் நடுவில் தங்கத்தாலியும் இருக்கும். மற்றவர் உதவியின்றி மாப்பிள்ளையே திருமாங்கல்யம் பூட்டுவார். பிறகு மணமக்கள் அரசாணியையும் மணவறை யையும் சுற்றி வந்து அம்மிமீது வைக்கப்பட்ட அரசாணிப் பானையில் கைவிட்டு மணமகன் எழுத்தாணியையும், மணமகள் ஓலையையும் எடுக்கவேண்டும். இந்நிலையில் மணமக்கள் கேலிக் குள்ளாவார்கள். பெண்ணுக்குப் பட்டம் கட்டுவது, மாப்பிள்ளை க்கு மோதிரம் இடுவது என்ற நிகழ்ச்சிகள் நிகழும். உறவினர், நண்பர்கள் மோதிரம், பட்டம் கட்டுவர். பலர் மணமக்கள் அணிந்துள்ள மோதிரம், பட்டம் இவற்றைத் தொட்டு அதற் குரிய ஓரளவு பணத்தைக் கொடுத்து விடுகின்றனர். 'கூழ்பூசுதல்' என்ற நிகழ்ச்சியில் உறவினர்கள் வெல்லமும், வாழைப்பழமும் கலந்த கூழினை மணமக்கள் வாயில் பூசி மணமக்களை வேடிக்கை செய்வர்.

பிறகு ஆற்றுக்குக் குளிக்கச் செல்வர். பெண் அரசாணி பொம்மை மீது இருந்த கலசத்தை இடுப்பில் சுமந்துவர முகூர்த் தக்கால் ஒரு குழியில் வைக்கப்பட்டு அதற்கு அக்கல நீரை ஊற்றுவாள். முகூர்த்தக்கால் நொய்யல் மரத்தண்டாக இருக்கும். மணமக்கள் பல்லாங்குழி விளையாடுவர். சில சமயங்களில் பல்லாங்குழிக் காய்கள் காசுகளாகவே இருக்கும். மண மக்கள்

'மூன்று வழி' போய் வருவர். நெய்ச்சோறு சாப்பிடுவர். திருமண வைபவம் முடிவுறும்.

பொங்கல் சீர், தீபாவளிச் சீர் முதலியவை கொடுப்பர். பணமாக 10 வராகன் திருமணத்தின் போது கொடுப்பதுமுண்டு. இது 35 ரூபாய்க்குச் சமம்.[2]

தேவேந்திரப்பள்ளர்

இவர்களது திருமணங்களில் பிராமணர் ஓமம் வளர்ப்பதுண்டு, வண்ணான், நாவிதன் முதலியவர்கள் வந்து சடங்குகள் செய்வதுண்டு. இவர்களது மணவறையின் இரு புறமும் பானைகள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கப்பட்டு கோல மிடப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். இவை அரசாணிப் பானை எனப்படுகிறது. இவற்றில் அரிசி, நெல், உப்பு, வெல்லம், மிளகாய், வெங்காயம் போன்றவை கலந்து வைக்கப்பட்டிருக்கும். புளி இருப்பதில்லை. புளி ஆகாது என்ற கருத்து அவர்களிடம் இருந்து வருகிறது. மணவறையில் குத்து விளக்குகள் இருக்கும்.

மாப்பிள்ளை வெளியூராக இருந்தால் பெண்ணின் ஊருக்கு வந்து வேறு வீட்டில் தங்கித் திருமணத்திற்கு பெண் வீட்டிற்கு வருவார். மாப்பிள்ளை முன்பு குதிரை ஏறி வருவாராம். இன்று கார்களில் அழைத்து வருகின்றனர்.

திருமண நிகழ்ச்சிகளில் மணமக்கள் ஒரு பாத்திரத்திலிருந்து மோதிரம் எடுக்கின்றனர். திருமணம் முடிந்ததும் மஞ்சள் நீராடுகின்றனர். மணமக்களை ஊர்வலம் அழைத்து வரும்போது நண்பர்கள் பானங்கள் கொடுக்கின்றனர். குறும்புக்கார உறவினர்கள் இலையில் பலகாரங்களைப் படைத்து மணமக்கள் அதைத் தொடவரும் போது தெரியாது இலையில் கட்டி வைத்திருக்கும் நூலை இழுக்க, இலை இடம் நகர்ந்து விடுவதும் மணமக்கள் கேலிக்கு ஆளாவதும் உண்டு. திருமணத்தில் உறவினர்,

---

2. செய்திகள் அளித்தவர் கருத்தான் செட்டியார் சத்திரத்தில் காவலராகப் பணிபுரியும் 'மூப்பனார்'.

நண்பர்கள் மொய்ப்பணம் எழுதுவதுண்டு இவை மணமக்கள் குடும்பத்தாருக்கே சேரும். பத்திரிக்கைகள் அச்சிடுவதுண்டு. தாம்பூலப்பை, கல்யாணப்பை கொடுப்பர். இவற்றில் தேங்காய், வாழைப்பழம், வெற்றிலே, பாக்கு, ஆரஞ்சு. பலாச்சுளே முதலியன வைக்கப்பட்டிக்கும்.

திருவையாறில் மூப்பனர், தேவந்திரப்பள்ளர் தவிர மற்ற சமூகத்தினரும் வாழ்கின்றனர். இவர்களது மணநிகழ்ச்சிகள் பற்றி மட்டுமே அறிய இயன்றதால் இவை மட்டுமே இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

## சிறப்புச் செய்திகள்

### இசை

திருவையாறு என்றதுமே ஆருகப் பெருகிவழிகின்ற இசை எல்லோரது நினேவிலும் வரக்கூடிய ஒன்று. திருவை யாற்றைப் பாடுகின்ற ஞானசம்பந்தர்.

'காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினர் வீதித்
தேந்தாமென்றரங் கேறிச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே[1]

என்று குறிப்பிடுகின்ருர்.

கி. பி. 7-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தர் காலத்திலேயே திருவையாற்றுப் பெண்கள் இசையை முறை யோடு இசைத்து நடனமாடினர் என்ருல் இன்றும் திருவை யாற்றில் இசை சிறப்புப் பெற்றிருப்பதில் வியப்பில்லே.

இன்று திருவையாற்றில் இசைக் கல்லூரி ஒன்று நிகழ்ந்து வருகிறது. இங்கு வீணே, வாய்ப்பாட்டு முதலியவை கற்றுத்

1. தேவாரம் அடங்கன்முறை முதல்பாகம் - பாடல். 1399

தருகின்றனர். இது தவிர நாதஸ்வர, தவுல் பள்ளி ஒன்றும் நடைபெற்று வருகிறது.

தியாகையர்[2]

திருவையாற்றைப் பற்றி அதுவும் இசையைப் பற்றிச் சொல்கின்றபோது இருநூறு ஆண்டுகளுக்கு முன் இசைக்கடலாய் விளங்கி, இன்றளவும் விழாக் கண்டு வரும் தியாகையரைப் பற்றிச் சொல்லாது இருக்க இயலாது.

இவர் விஜய நகரர் காலத்தில் தமிழகத்தில் குடியேறிய தெலுங்கு மொழி பேசுபவர்களின் குடி வழி வந்தவர். 4-5-1767-இல் திருவாரூரில் பிறந்தார். பெற்றோரோடு பிழைப் பிற்காகத் திருவையாறு குடியேறினர். இவரது தந்தை 'ராமப்ரம்மம்', ராமாயணப் ப்ரவசனம் செய்வதில் சிறப்புடையவர். தஞ்சை மன்னன் துளசிங்க மகாராஜாவால் ஆதரிக்கப்பட்டுத் திருவயைாறு மஞ்சன வீதியில் வீடு பெற்று வாழ்ந்து வந்தார். சிறு வயது முதலே இசையில் ஆர்வம் கொண்டு, ஆடம்பரம் விரும்பாது வாழ்ந்து வந்த தியாகையருக்கு இசையில் தேர்ச்சி பெற திருவையாறு நல்ல சூழ்நிலையை நல்கியது. தியாகையர் இயற்றிய கீர்த்தனைகள் எண்ணிக்கையில் வால்மீகியோடு ஒப்பிடப்படுகின்றன.

இவரைச் சரபோஜி மன்னன் ஒரு தடவை சபையில் வந்து பாட அழைத்ததாகவும், மன்னன் கொடுத்து அனுப்பிய பொன், பட்டாடைகளை மறுத்து இவர் 'நிதசால ஸுகமா' என்ற கீர்த்தனையைப் பாடினார் என்றும் கூறப்படுகிறது. ஐயாபாகவதர், வாலாஜாபேட்டை வேங்கட ரமணபாகவதர், மானம்புச்சாவடி வேங்கடசுப்பையா, உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர், சுந்தரபாகவதர், ஸோஜிரி சீதாராமய்யர், வீணைக் குப்பையர், நங்கவரம் நீலகண்டையர், லால்குடி கணேசையர், தஞ்சை ராமய்யா, வேங்கடசலபதி பாகவதர் போன்றவர்கள்

2. 'ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் சரித்திரம்' S. K. சீதாதேவி செல்லமய்யர், கானாம்ருத ப்ரசுரம், சென்னை–28.

இவரது சிஷ்யர்களாவர் முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியவர்கள் இவர் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த இசை வல்லுநர்கள் ஆவர்.

இவர் திருவையாற்றில் 6-1-1847-இல் சமாதி கொண்டார். சிறந்த ராமபக்தர். இவரது கீர்த்தனைகள் தெலுங்கில் அமைந்தவை. இவை 'தியாகராஜ கானாம்ருதம்' என்ற தலைப்பில் ஐந்து ரத்தினங்களாக வெளியிடும் முயற்சியில், இதுவரை சில வெளிவந்து விட்டன.

*தியாகையர் சமாதி*

திருவையாற்றிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் காவிரியின் வடகரையில் இவருக்கு இன்று சமாதி உள்ளது. முதலில் இங்கு இருந்த சமாதியும், துளசி மாடமும் பிறகு அபிவிருத்தி செய்யப்பட்டு இன்று சிறப்புடைக் கோவிலாக்கப் பட்டுள்ளன. இக்கோயிலுள் அவரது கீர்த்தனைகள் தெலுங்கிலும், தமிழிலும் பொறிக்கப்பட்டு சுவர் முழுவதும் சலவைக் கற்களாக விளங்குகின்றன. இக்கோயிலின் முன்புறம் வால்மீகி மண்டபம் அமைந்துள்ளது.

வால்மீகி மண்டபத்தில் நாரதர், தும்புரு, வால்மீகி, லவன், குசன், க்காமதேனு, விநாயகர், சோமாஸ்கந்தர், கற்பக விநாயகர், சரஸ்வதி, இலக்குமி, இராம பட்டாபிஷேகக் காட்சி, ஸ்ரீராம ஆஞ்சநேய ஆலிங்கனகாட்சி, அனுமன், சீதை ஆகியவை சிற்பங்களாக வடிக்கப்பட்டு விளங்குகின்றன. இச்சிற்பங்கள் மைசூர் கலைப்பாணியில் உள்ளவை. 20-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவற்றை மைசூரைச் சேர்ந்த மகேந்திர ஸ்தபதி என்பார் உருவாக்கியுள்ளார்.

தியாகையர் சமாதியின் நேரெதிரே, பங்களூர் நாகரத்தினம்மாள் சமாதி கொண்டுள்ளார். இவர் தனது உடைமைகள் வாழ்நாள் முழுவதையும் தியாகையர் வழிபாட்டில் அர்ப்பணித்தவர்.

தியாகையர் வசித்த இல்லம் இன்றும் திருவையாறு திருமஞ்சன வீதியில் பாதுகாக்கப்பட்டு ஞாபகச் சின்னமாக விளங்கி வருகின்றது.

### தியாகையர் உற்சவம்

மார்கழி மாதத்தில் நான்கு நாட்கள் இவருக்கு விழாக் கொண்டாடப்படுகிறது. அக்காலங்களில் திருவையாற்றில் மக்கள் நெருக்கம் அதிகமாக இருக்கும். திருவையாறு விழாக்கோலம் பூண்டு விளங்கும்.

முதல்நாள் உற்சவத்தன்று தியாகையர் ஆலயத்தில் ஆராதனை வழிபாடுகள் நிகழ்கின்றன. இரண்டாம் நாள் பஞ்சமி திதி அன்று பதினைன்கு பிராமணர்கள் தியாகையர் இல்லத்தில் சடங்குகள் செய்கின்றனர். இவர்களுக்கு ஆடைகள், பாத்திரங்கள் வழங்கப்படுகின்றன. மூன்றும் நாள் வீட்டிலிருந்து சமாதிக்குத் தீர்த்தம் எடுத்துச் செல்லப்பட்டு அபிஷேகம் செய்யப் படுகின்றது. அன்றைய தினம் தியாகையரின் உருவப்படம் பல்லக்கில் அலங்கரிக்கப்பட்டு நான்கு வீதிகளிலும் வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றது. மேளக் கச்சேரிகள் சிறப்பாக நிகழ்கின்றன.

ஆராதனை அன்று (முதல் நாள்) ஏழைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது. நாற்பத்தைந்து மூட்டை வரையில் அரிசி செலவாகின்றது. கல்யாணமகால் சத்திரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட அறிஞர் தங்குவதற்கும் உண்பதற்கும் வசதிகள் செய்யப் படுகின்றன. வருடம் ரூ. 60,000 வரை வரவு, செலவாகிறது. விழாக்களும், பூசையும் நிகழ, பங்களூர் நாகரத்தினம் மாள் டிரஸ்டும், உற்சவ சபையும் பெரும் பணிபுரிந்து வருகின்றன. மேலும் செலவுகளுக்கு நிலம், கட்டிடங்களின் வாடகை, நன்கொடை முதலியவற்றின் மூலமும் வருவாய் கிடைக்கின்றது.

### கல்வி

தியாகையருக்கு அடுத்து இவ்வூரில் திகழ்கின்ற அரசர் கல்லூரியைச் சொல்லவேண்டும். இக்கல்லூரி, கல்யாண மகால்

சத்திரத்தில் நிகழ்கிறது. சரபோஜி மன்னனால் விடப்பட்டுச் சென்ற சத்திரஉடைமைகள் இன்று அரசாங்கத்தால் நிர்வகிக் கப்பட்டு வருகின்றன. அரசர் கல்லூரியில் தமிழ்ப்புலவர், சமஸ்கிருத சிரோன்மணி, இசை, நாதஸ்வரம், தவுல் ஆகிய பிரிவுகள் உள்ளன. தமிழ்ப் புலவர் படிப்புக்குச் சுமார் 250 மாணவர்களும், வடமொழிப் படிப்புக்குச் சுமார் 20 மாணவர்களும் இசைத்துறையில் 50 மாணவிகளும், நாதஸ்வரம் தவுல் பள்ளியில் 30 மாணவர்களும் பயில்கின்றனர். அனைத்திற்கும் நான்கு வருட காலங்கள் கல்வி புகட்டப்படுகிறது. சுமார் 200 மாணவ, மாணவிகளுக்கு விடுதி வசதி உள்ளது. 80 மாணவர்கள் சத்திரம் ட்ரஸ்டினரால் உதவிச் சம்பளம் பெறுகின்றனர். தமிழகத்தில் சிறந்த பணியாற்றும் கல்வி நிறுவனங்களில் இதுவும் ஒன்று.

இவ்வூரில் நிகழ்கின்ற உயர்நிலைப்பள்ளி தஞ்சை மாவட்ட பள்ளிகளில் சிறந்த ஒன்று. இங்கு 2,000-க்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் பயில்கின்றனர். 1886-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ஆம் தேதி 'சென்ட்ரல் ஹைஸ்கூல்' என்ற பெயரில் T. S. சீனிவாசராவ் என்ற திருவையாற்றுப் பிரமுகரால் தோற்றுவிக் கப்பட்டது. தற்போது T. K. லட்சுமி நரசிம்மன் அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

### வேதபாடசாலைகள்

திருவையாற்றிற்கே தனிச் சிறப்புத் தருகின்றவையாக இங்கு வேதபாடசாலைகள் அமைந்துள்ளன. இங்கு மூன்று வேதபாடசாலைகள் உள்ளன. ஒன்று ஓடத் தெருவில் அமைந் துள்ளது. இது செட்டி நாட்டுச் சிறுவயல் செட்டியார் குடும்பத்தி னரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மற்றொன்று அம்மாள் அக்கிரஹாரத்தில் அரசினரால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இங்கு இருக், சாம வேதங்கள், ஆகமம், காவியம் முதலியவை கற்றுத் தரப்படுகின்றன. 1842-இல் எண்டோமெண்ட் கமிட்டி யாரால் நிர்வகிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று அரசினரால் நிர்வகிக்கப்படுகிறது. இவை தவிர முத்து கணபாத்திகள்

என்பவராலும் ஒரு பாடசாலை தனிப்பட்ட முறையில் நடத்தப் பட்டு வருகின்றது.

*சத்திரங்கள்*

இங்கு எண்ணற்ற சத்திரங்கள் உள்ளன. இவற்றில் பல இன்று வாடகைக்கும், குடியிருப்புக்கும் விடப்பட்டுள்ளன.

### ஓடத்துறை தெருவிலுள்ள சத்திரங்கள்

| | | |
|---|---|---|
| வரதப்ப ஐயர் சத்திரம் | — | தஞ்சையைச் சேர்ந்த ஒரு பிராமணரால் நடத்தப்படுகிறது |
| சீதா சத்திரம் | — | திருவையாறு மராட்டியர் ஒருவரால் நடத்தப்படுகிறது |
| அம்மணிபாய் சத்திரம் | — | துவாதசி அன்று பிராமணர்கள் உபசரிக் கப்படுகின்றனர். |
| துவாதசிக் கட்டளைச் சத்திரம் | — | துவாதசி அன்று பிராமணர்கள் உண் பிக்கப்படுகின்றனர். |
| சி. நா. அன்ன சத்திரம் | — | காரைக்குடி செட்டியார்களால் தினமும் இரண்டு வேளை பிராமணர்களுக்கும் தேசாந்திரிகளுக்கும் அன்னம் வழங்கப் படுகிறது. |
| வேதபாடசாலை | — | சிறுவயல் நாட்டுக் கோட்டைச் செட்டி யாரால் நிர்வகிக்கப்படுகிறது. |

### புதிய மண்டபத்தெரு

| | | |
|---|---|---|
| வெங்கடம்மாள் சத்திரம் | — | திருவையாற்றைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுகின்றது. |
| ஐப்பசி மாத கட்டளைச் சத்திரம் | — | திருவையாற்று ராயர் ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. ஐப்பசி மாதம் 30 நாளும் பிராமணர்களுக்கு உணவளிக்கப்படுகிறது. |

63 மூவர் மடம் — தஞ்சையைச் சேர்ந்தவரால் நிர்வகிக்கப் படுகிறது.

அமாவாசை மண்டபம் — ஒவ்வொரு நாயன்மாரின் குருபூஜைக்கும் அன்னதானம் நிகழ்கிறது.

பள்ளிச் சந்தில், துவாதசிக் கட்டளைச் சத்திரம் கோபால்சாமி செட்டியாரால் நிர்வாகிக்கப்படுகிறது. திருமஞ்சனத் தெருவில் 6 சத்திரங்களும், செவ்வாய்கிழமைப் படித்துறையில் மராட்டியர் சத்திரம் ஒன்றும், சுவாமி சந்நதியில் மூன்று சத்திரங்களும், பாவாசாமி அக்கிரகாரத்தில் 6 சத்திரங்களும் மேலவீதியில் ஆசாரியார் சத்திரமும் உள்ளன.

மேலும் பச்சையப்ப முதலியார் சத்திரம், கல்யாண மகால் சத்திரம் முதலியனவும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் இன்று அரசாங்க அலுவலகமும், கல்லூரி, மருத்துவமனைகளும் நிகழ்கின்றன.

பழைய கட்டடங்கள்

திருவையாற்றில் தஞ்சை மராட்டியர் காலத்திய கட்டடங்கள் பல உள்ளன. திருவையாற்றுக்கு வர காவிரியைக் கடக்கும் பாலம் தஞ்சை மராட்டிய மன்னன் சிவாஜியால் 1846-47-இல் கட்டப்பட்டது. அங்குள்ள கல்வெட்டு இதனை உணர்த்தும். ஆற்றோரமுள்ள புறக்கூண்டும் அதை ஒட்டியுள்ள அரண்மனையும் தஞ்சை மன்னர்களுடையவை. அவை இன்று தனியாருக்கு விற்கப்பட்டுள்ளன. 15 மண்டப தெருவில் உள்ள 13 மண்டபங்களும் தஞ்சை மன்னர்களால் 15 வேத பிராமணர்களுக்கு வழங்கப்பட்டவை. அவை இன்று காவிரியை நோக்கி ஒரே வரிசையில் அமைந்துள்ளன. சி. நா. அன்னசத்திரமும் தஞ்சை மன்னர்களுடையதே ஆகும். 110 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயரால் தனியாருக்கு இச்சத்திரக் கட்டிடம் விற்கப்பட்டது. இன்று இச்சத்திரத்தில் உள்ள பெரிய கூடங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்தக்கூடியவை. கல்யாணமகால் சத்திரம் மிகப் பெரிய ஒன்று. இதன் பின்புறம் காவிரிக்கரையாகவே அமைந்து

தஞ்சையிலிருந்து வருபவர்களுக்கு எடுப்பான தோற்றத்துடன் காட்சி தருகின்றது.

இவ்வூர்க்கட்டிடங்கள் அனைத்தும் உத்திரம் எதுவும் இல்லாமல் கூடம் கூடமாகக் (Terraced roofs) கட்டப்பட்டவை. அவை அன்றைய கட்டிடக் கலைஞர்களின் திறமையையும், சிறப்பையும் பறை சாற்றுவன.[3]

இங்கு ஒரு காலத்தில் சிறந்த மரச் சிற்பத் தச்சர்கள், சுதை வேலை செய்பவர்கள், பொய்க்கால் குதிரை ஆட்டக் கலைஞர்கள் இருந்திருக்கின்றனர். இன்று இக்கலையில் சிறந்தவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

---

3. 'Tiruvadi builders had reputation for their terraced roofs' Madras Dist. Gazetters Tanjore. 1906. vol. I page. 129.

# கோயில்கள்

திருவையாற்றில் பஞ்சநதீஸ்வரசுவாமி கோயில் எனப் படுகின்ற ஐயாறப்பன் கோயில் முதன்மையானது. இக்கோயிலி னுள் தனித்தனியாக மூன்று கோயில்கள், தமிழக வரலாற்றுப் பண்பாட்டுக் கலைச் சிறப்புடன் விளங்குகின்றன. அவை ஐயா றப்பன்கோயில், தென்கயிலாயம், வடகயிலாயம் ஆகியவை யாகும். இம்மூன்று கோயில்களையும் ஒன்றுசேர்த்து ஒரு பெரிய மதில் உள்ளது. இந்த மதிலுக்குள் அடங்கிய நிலத்தின் மொத்தப் பரப்பு சுமார் 14·75 ஏக்கர்களாகும்.[1] அதாவது தஞ்சைப்பெருவு டையார் கோயிலைவிட இரண்டு மடங்கு பரப்பளவுடையதாகும். இப்பெரிய கோயிலினுள் அடங்கிய மூன்று கோயில்களையும் ஒன்றன்பின் ஒன்றாகக் காண்போம்.

## ஐயாறப்பன் கோயில்

ஐயாறப்பன் கோயிலைச்சுற்றி நான்கு திருச்சுற்றுகள் உள்ளன. இதன் நான்காவது திருச்சுற்றில்தான் தென்கயி லாயம், வடகயிலாயம் ஆகிய கோயில்கள் உள்ளன. இந்த நான்காவது திருச்சுற்றுத் தவிர ஏனைய மூன்று திருச்சுற்றுகளுக் குள் பல வெவ்வேறு காலப்பகுதிகளில் ஏற்பட்ட அமைப்புகளும், சேர்க்கைகளும், கோயில்களும் நிறைந்துள்ளன. இவை அனைத் திலும் ஐயாறப்பன் கோயிலே காலத்தால் முற்பட்டதாகும்.

### அமைப்பு

ஐயாறப்பன் கோயில் விமானம், அர்த்த மண்டபம், முன் மண்டபம் ஆகிய அமைப்புக்களைக் கொண்டு கிழக்கு நோக்கி

1. Census of India vol. IX Tamilnadu–Part XI D, vol. VII (iii) pp. 800.

விளங்கும் ஒரு எடுப்பான சிறிய கற்கோயில். கருவறையும் அர்த்தமண்டபமும் கோயில் எடுக்கப்பட்டகாலத்தில் இருந்த படியே உள்ளன. முன்மண்டபத்தின் உள்பகுதியில் அமைந்த தூண்களும், விதானமும் அகற்றப்பட்டு, சுமார் கி. பி. 15, 16-ஆம் நூற்றுண்டில் உயரமாக்கப்பட்டுள்ளன. உயரமாக்கப் பட்டபோது இம்முன்மண்டபத்தின் சுவர்கள் அப்படியே வைத் துக்கொள்ளப்பட்டுள்ளன.

அதிட்டானப்பகுதி கீழிருந்து மேலாக உபானம், பத்ம ஜகதி, பத்மவரிகளுடன் கூடிய விருத்த குமுதம், யாளிவரி ஆகிய அங்கங்களுடன் மிக அழகாகவும், எடுப்பாகவும் அமைந்துள்ளது. சோழர் காலக்கட்டிடக்கலை பற்றி ஆய்வுகள் செய்த Douglas Barrett அவர்கள் ஐயாறப்பன் கோயில் அதிட்டான அமைப்பை C. 3 என்ற பட்டியலில் சேர்த்துள்ளார்கள்.[2] இந்தப் பட்டியலில் கி. பி. 866-940 காலத்திற்குள் கட்டப்பட்டகோயில்களில் கீழை யூர், திருச்செந்துறை, வாலிகண்டபுரம், திருநாமநல்லூர், அல்லூர் ஆகிய கோயில்களும் கி. பி. 940-970க்குள் கட்டப் பட்டுள்ளகோயில்களில் கொடும்பாளூர் மூவர் கோயிலும் அடங்குகின்றன.

சுவர்ப் பகுதி பல கால்வரிகளையும், தேவகோஷ்டங்களையும் பெற்று அமைந்துள்ளது. தேவகோஷ்டங்கள் யாளி வரிக்கு மேலாக அமைந்துள்ளன. பிரஸ்தரப்பகுதியில் (கூரை) பூதவரி, கபோதம், யாளி வரி ஆகியவை அமைந்துள்ளன. கபோதத்தின் கீழ்முனையில் வரிசையாகச் சிறு வட்டங்கள் அழகு செய்கின்றன. அழகிய மணி இழைத்தது போன்ற வேலைப்பாடுடைய கூடுகள் (கூதம்) கபோதத்தை அழகு செய்கின்றன. இவை திருப்பங் களில் இரண்டிரண்டாக அமைக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் உள்ள பூதவரியில் பூதங்கள் பல்வேறு கோணங்களில் சித்தரிக் கப்பட்டுள்ளன.

---

2. Early chola Architecture and sculpture-1974 Douglas Barrett pp. 57-58.

விமானம் ஒரு தளம் உடைய வேஸர சிகர விமானமாகும். விமானத்தின் நான்கு மூலேகளில் கூடமும் பக்கப் பகுதிகளில் சாலேகளும் உள்ளன. இதன் கழுத்துப் பகுதியில் (கிரீவம்) கீழ்ப் புறம் சோமாஸ்கந்தரும், தென்புறம் தக்ஷிணுமூர்த்தியும், மேற் புறம் திருமாலும், வடபுறம் நான்முகனும் உள்ளனர். ஆனுல் விமானம் முழுவதும் அண்மையில் நிகழ்ந்த கும்பாபிஷேகத்தின் விளேவாகச் சுதைவேலேப்பாடுகள் மாற்றப்பட்டு பழமை புலப் படாமல் செய்யப்பட்டுவிட்டது. Douglas Barrett அவர்கள் இதன் அமைப்பை C3 என்ற பட்டியலில் சேர்த்துள்ளார். இதில் கீழையூர், கண்டியூர், திருப்பூந்துருத்தி, கொடும்பாளூர், கோனேரி ராஜபுரம். திருவக்கரை, உலகாபுரம் போன்ற இருபத்தாறு ஊர்க்கோயில்கள் அடங்குகின்றன.

அர்த்த மண்டபத்தினுள் அமைந்த நான்கு தூண்கள் கோயில் எடுக்கப்பட்ட காலத்திலேயே நிறுத்தப்பட்டவை. அர்த்த மண்டப வாயிலின் நிலேயில் உள்ள கொடிகள் மிகுந்த வேலேப்பாடுடன் அழகாக விளங்குகின்றன. நிலேயின் நடுவில் இலக்குமியும் நீராட்டும் யானேகளும் மிகச்சிறிய அள வில் செதுக்கப்பட்டுள்ளன. இதை அடுத்து இருபுறமும் உள்ள சிறுசிறு கொடிவட்டங்களில் ஆடல், பாடல், இசை வாத்தியக் காட்சிகள் காட்டப்பட்டுள்ளன.

சிற்பங்கள்

ஐயாறப்பஞக உள்ள சிவலிங்கத்தைச் சுயம்புலிங்கம் என்று சொல்கின்றனர். இது புற்றுமண்ணுல் ஆகியது என்றும் கூறுகின் றனர். இது மாமல்லபுரக் கடற்கரைக் கோயில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் ஆகியவற்றில் உள்ள சிற்பங்களேப்போல மணற் கல்லால் (Sand stone) செய்யப்பட்டதாக இருக்கவேண் டும். எனவேதான் இது மிகுந்த அளவில் பொரிந்து காணப் படுகின்றது.

துவாரபாலகர்கள் கோயில் கட்டப்பட்ட காலத்திலேயே அமைக்கப்பட்டவையாகும். இவையும் மணற்கற்களால் செதுக் கப்பட்டதாகத் தெரிகிறது. இவையும் பொரிந்துபோன நிலே

யில் காணப்படுகின்றன. வடக்குப்புறம் உள்ள துவாரபாலகர் இடதுகாலை நேராகவும் வலதுகாலை சிறிது மடக்கி, வலது முழங்கையைக் கதை மீது வைத்து, இடதுகையை விஸ்மயமுத்திரை காட்டி, மிகச்சாதாரண நிலையில் அமைக்கப்பட்டுள்ளார். மார்பருகில் முடிச்சிடப்பட்ட உபவீதம், காதுகளில் பத்திரகுண்டலங்கள், கரண்ட மகுடம், தோள்வளை, கல்லிழைத்த உதரபந்தனம், இடைக்கச்சை, கால்களில் சிலம்புகள் ஆகியவை அணி செய்கின்றன. தென்புறம் உள்ள துவாரபாலகர் வலதுகரத்தால் தர்ஜனி முத்திரை காட்டி, இடக்கரத்தைக் கதையின் மீது ஊன்றி, ஜடாமுடிதாங்கி, விளங்குகிறார். வடபுறத்துவாரபாலகரைவிட இது அதிக சிதைவில்லாமல் உள்ளது.

மேற்புறத் தேவகோட்டத்தில் உள்ளரிஷபவாகன அர்த்தநாரி சிற்பமும் கோயில் எடுக்கப்பட்ட காலத்திலேயே அமைக்கப்பட்டதாகும். இது மிகவும் சிதைந்து பிற்காலச் சுதைவேலையால் நிறைவுபெற்று விளங்குகிறது. இதில் இடப்பாகத்தில் பெண்பாகம் காட்டப்படுவதற்கு மாறாக வலப்பகுதியில் பெண் பாகம் காட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற மற்றொரு சிலையைத் திருவேதிக்குடியில் காணலாம். மற்றும் தென், வட தேவகோஷ்டங்களில் உள்ள தக்ஷிணாமூர்த்தி, நான்முகன் சிலைகள் கி. பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் வைக்கப்பட்டவை.

காலம்

ஐயாறப்பன் கோயில் எப்பொழுது வழிபாட்டிற்கு வந்தது என்பதை நம்மால் கணிக்க இயலாது. ஆனால் தற்பொழுதுள்ள அதன் கட்டிட அமைப்பு எக்காலத்தியது என்று ஒருவாறு கணிக்க இயலும். சோழர்காலக் கலைப்பாணியை ஆய்வு செய்த திரு S. R. பாலசுப்பிரமணியம் அவர்கள் இக்கோயிலின் கட்டிட அமைப்பு, சிற்ப அமைப்பு, கல்வெட்டுக்களைக் கருத்தில்கொண்டு இக்கோயில் ஆதித்தசோழன் காலத்தியது (கி.பி. 871-907) என்று குறிப்பிடுகின்றார்கள்.[3] திரு Douglas

3. Early chola Art-Part I-1966 pp. 149-152.

Barrett அவர்கள் பொதுவாக ஆதித்தன்-முதலாம் பராந்தகன் காலத்தியது என்று குறிப்பிடுகின்ருர்கள். ஆனுல் இவர்கள் ஆய்வு செய்த காலத்தில் இக்கோயிலில் தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனின் கல்வெட்டு இருந்தது இவர்களுக்குத் தெரியாது. அண்மையில் இது தற்செயலாக அங்கிருப்பது தெரியவந்தது.

தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் என்பவன் யார்? என்பதில் இரண்டு கருத்துக்கள் உள்ளன. ஒன்று இவன் மூன்ரும் நந்திவர்மன் (கி.பி. 860) என்பது; அதாவது ஆதித்தசோழன் காலத்திற்கு முற்பட்டவன். மற்ருென்று இவன் கி. பி. 10-ஆம் நூற்ருண்டில் விளங்கிய ஒரு நந்திவர்மன் என்பது. தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் மூன்ரும் நந்திவர்மன் எனில் ஐயாறப்பன் கோயில் ஆதித்தசோழனுல் கட்டப்பட்டதல்ல. இல்லை ஆதித்தசோழனுல் கட்டப்பட்டது என்பது உறுதி எனில் இந்த தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் கி. பி. 10-ஆம் நூற்ருண்டில் விளங்கிய நான்காம் நந்திவர்மன் என்பது உறுதியாகிறது. எது எப்படியிருந்தபோதிலும் ஐயாறப்பன் கோயில் கி. பி. 9-ஆம் நூற்ருண்டின் இடைப்பகுதிக்குச்சற்று முன்னதாகக் கட்டப்பட்டது என்று கருதலாம்.

முதல் திருச்சுற்று

இதனை முதல்திருச்சுற்று மாளிகை என்பதே பொருந்தும். இது கி. பி. 18-ஆம் நூற்ருண்டில் மருதூரைச் சேர்ந்த ஆனையப்பபிள்ளை, வைத்தியநாத அண்ணன் ஆகியோரால் எடுக்கப்பட்டதாகும். இத்திருச்சுற்று மாளிகையை எடுப்பதற்குப் புதிய கற்கள் பயன்படுத்தப்படாது, திருவையாற்றுக் கோயிலினுள் இடிந்து சிதைந்து போன ஒரு 12-ஆம் நூற்ருண்டுக் கோயிலின் கற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த திருச்சுற்று மாளிகை ஐயாறப்பன் கோயிலை ஒட்டி மிக நெருக்கமாக எடுக்கப்பட்டு உள்ளது. இடையில் திருச்சுற்று இல்லாமையால், ஐயாறப்பன் கோயிலின் எடுப்பான தோற்றம் அறவே மறைந்து விட்டது.

## சிற்பங்கள்

இத்திருச்சுற்றில் அருமையான கி. பி. 10-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த சப்தமாதர் சிற்பங்கள் உள்ளன. இவை ஒரே பலகைக் கல்லில் செதுக்கப்பட்டவை. வராகியின் வலது தோள்பட்டை அளவில் இது இரண்டாக உடைந்து விட்டது. சப்தமாதர்கள் அவரவர்களுக்குறிய கொடிகளுடனும், படைக்கலன் களுடனும் தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளனர்.

1. பிராமி — மூன்று முகங்கள், நான்கு கரங்கள், பின்னிருகரங்களில் அக்கமாலே, கெண்டி, வலது புறத்தில் கொடி.
2. மகேஸ்வரி — ஜடா மகுடம், நான்கு கரங்கள், பின்னிருகரங்களில் மழு, மான் கொடி கம்பத்தில் ரிஷபம்.
3. கௌமாரி — கரண்ட மகுடம், நான்கு கரங்கள், பின்னிருகரங்களில் வஜ்ரம், அக்கமாலே கொடிக் கம்பத்தில் மயில்.
4. வைஷ்ணவி — கிரீடம், பின்னிருகரங்களில் சக்கரம், சங்கு, கொடிக்கம்பத்தில் அமர்ந்து வணங்கிய கருடன்.
5. வாராகி — பன்றி முகம், பின்னிருகரங்களில் கலப்பை, தடி, கொடிக்கம்பத்தில் சிங்கம்.
6. இந்திராணி — பின்னிருகரங்களில் அங்குசம், வஜ்ரம், கொடிக்கம்பத்தில் யானே.
7. சாமுண்டா — விரிந்த சடை, தலேயில் கபாலம், பின்னிருகரங்களில் சூலம், கபாலம், காதுகளில் பிரேத, கபாலகுண்டங்கள், மார்புக் கச்சை, பாம்பு, கபாலம், உபவீத கொடிக் கம்பத்தில் ஆந்தை.

சப்தமாதர்களுக்கு முன்னும் பின்னும் வீரபத்திரர், விநாயகர் சிற்பங்கள் தெளிவில்லாமல் உள்ளன. இதனை அடுத்து கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டில் வடிக்கப்பட்ட 63 நாயன்மார்களது சிலைகள் உள்ளன. அதனை அடுத்து நல்ல கூழாங்கற்கள், லிங்கமாக வைக்கப்பட்டுள்ளன. திருச்சுற்று மாளிகை மேற்புறச் சுவற்றில் உமாமாகேஸ்வரர் சிற்பம் உள்ளது. இது அழகான சிற்பம்; கி. பி. 16, 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். இதன் பிரபை அல்லது திருவாசியின் அமைப்பு ஓங்கார வடிவத்தில் உள்ளது. அடுத்து ஒரு பெரிய தக்ஷிணாமூர்த்தி சிற்பம் உள்ளது. இது ஐயாறப்பன் கோயிலின் தென் கோஷ்டத்தில் உள்ளது போன்ற அமைப்புள்ளது. காலின் கீழ் ஆமை காட்டப்பட்டுள்ளது. இது கி. பி. 16, 17-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். ஐயாறப்பன் கோயிலின் வட கோஷ்டத்தில் உள்ள நான்முகனுக்கு எதிராக ஒரு சண்டிகேஸ்வரர் சிலை தனியாக உள்ளது. இது கி. பி. 12-ஆம் நூற்றாண்டுச் சிற்பமாகும். திருச்சுற்று மாளிகையின் வட புறச் சுவரில் தற்காலத்திய ஆடவல்லான், ராஜராஜேஸ்வரியின் சிற்பங்களும் உள்ளன. மேற்புறச் சுவரில் மருதூர் ஆனையப்பப் பிள்ளை, வைத்தியநாத அண்ணன் ஆகியோரது சிற்பங்களும் கல்வெட்டும், மற்றும் ஒரு அரசன், அரசி சிற்பங்களும் உள்ளன. இத்திருச்சுற்றில் பக்தர்கள் வலம் வருவதில்லை. வலம் வரக் கூடாது என்பது ஐதீகம் என்று கருதுகின்றனர். ஐயாறப்பன் கோயில் வட, தென்புற அர்த்த மண்டபச் சுவர்களை ஒட்டி இத்திருச்சுற்றில் இரண்டு அறைகள் பிற்காலத்தில் எடுத்துள்ளனர்.

## இரண்டாம் திருச்சுற்று

உண்மையில் இந்த திருச்சுற்றுதான் முதல்த் திருச்சுற்றாக அமைக்கப்பட்டதாகும். இத்திருச்சுற்றில் உள்ள திருச்சுற்று மாளிகைக்கும், ஐயாறப்பன் கோயிலுக்கும் இடையில் உள்ள சண்டிகேஸ்வரர் கோயிலைத் தவிர மற்றனைத்தையும் நீக்கி விட்டு எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தால் அதுவே கி. பி. 13-ஆம் நூற்றாண்டு வரையில் இருந்த ஐயாறப்பன்

கோயிலின் அமைப்பாகும். கி. பி. 14-ஆம் நூற்றூண்டிற்குப் பிறகு ஏற்பட்ட இடைச் சேர்க்கைகளே சோமாஸ்கந்தர் மண்டபம், முக்தி மண்டபம், மகாலெட்சுமி கோயில், நடராஜர் மண்டபம், அதன் முன் உள்ள ஒரு வழிபாட்டில் இல்லாத சிவாலயம் ஆகியவையாகும்.

சோமாஸ்கந்தர் மண்டபம்

ஐயாறப்பன் கோயிலின் தென்புறத்தில் இம்மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் சுமார் 4' உயர அதிட்டானத்தையும், 16 தூண்களையும், தென்புறத்தில் 2 அறைகளையும் கொண்டுள்ளது. வெளிப் பகுதியில் அமைந்து இருக்கும் தூண்களின் அடிப்பகுதி சிங்கங்களுடனும், வேலைப்பாட்டுடனும் விளங்குகின்றன. இம்மண்டபத்தின் ஓரப்பகுதிகள் இரும்புக் கம்பிகள் கொண்டு அடைக்கப்பட்டு இதனுள் சோமாஸ்கந்தர், பிக்ஷாடனர், மற்றும் பல செப்புத் திருமேனிகள் வைக்கப் பட்டுள்ளன. இம்மண்டபம் சுமார் கி. பி. 13, 14-ஆம் நூற்றூண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்.

முக்தி மண்டபம்

சோமாஸ்கந்தர் மண்டபத்தின் பின் பகுதியில் இம் மண்டபம் அமைந்துள்ளது. இதை ஜப்பேஸ்வர மண்டபமென்றும் வழங்குகின்றனர். இங்கு மாலை நேரங்களில் பக்தர்கள் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்யும் காட்சி பரவசமூட்டக் கூடியது. இது போன்று முக்தி மண்டபங்கள் காசி, நாகை, திருவையாற்றில் மட்டுமே உள்ளன என்ற கருத்து பக்தர்களிடம் நிலவுகிறது. இம்மண்டபத்தில் விநாயகர், நவகிரகங்கள், சில லிங்கங்கள், ஒரு சகஸ்ரலிங்கம், லிங்கோத்பவர் ஆகிய சிற்பங்கள் உள்ளன. இவை காலத்தால் பிற்பட்டவை.

நவக்கிரகங்களின் அருகில் உள்ள ஒரு வேலைப்பாடுடைய தூண் கவனத்திற்குரியது. இது நுளம்பர் கலைப்பாணியுடன் கி. பி. 10-ஆம் நூற்றூண்டில் வடிக்கப்பட்டு நுளம்பபாடியிலிருந்து கொண்டுவரப்பட்டதாகும். இது போன்ற தூண்கள் இதன்

கயிலாயத்தில் உள்ளன, இது இங்கு எவ்விதம் வந்தது என்பது புலப்படவில்லை. இது பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் சுவற்றுடன் வைத்துப் பூசப்பட்டு விளங்குகிறது.

*சண்டிகேஸ்வரர் கோயில்*

இக்கோயில் பற்றி திரு S. R. பாலசுப்பிரமணியம், Douglas Barrett ஆகிய இருவருமே குறிப்பிடவில்லை. இது ஒரு நல்ல கற்றளியாகும். ஐயாறப்பன் கோயில் எடுக்கப்பட்ட காலத்திலேயோ அல்லது சற்று பின்னாலோ இக்கற்றளி எடுக்கப் பட்டிருக்கவேண்டும். அதாவது இதுவும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் எடுக்கப்பட்டதாகும். இக்கோயிலில் கல்வெட்டுக் கள் இல்லை. இங்கு இருக்கவேண்டிய சண்டிகேஸ்வரரும் இல்லை. காலத்தால் பிற்பட்ட சிலை ஒன்றுள்ளது.

இதன் அதிட்டானப்பகுதி உபானம், பத்மஜகதி, பத்மவரி யுடன் கூடிய விருத்தகுமுதம், யாளிவரி ஆகியவற்றுடனும், பிரஸ்தரப்பகுதி பூதவரி, கபோதம், யாளிவரி ஆகியவற்றுடனும் உள்ளன. விமானம் ஒருதளமுடைய வேஸரசிகரமுடன் விளங்கு கின்றது. தளத்தின் நான்கு மூலைகளில் கூட அமைப்புகளும், பக்கங்களில் சாலை அமைப்புகளும் உள்ளன. அண்மையில் நடந்த கும்பாபிஷேகத்தின் விளைவாக இங்கு பலவாறாக சுதைவேலை களும், வண்ணவேலைகளும் செய்யப்பட்டு பழமையின் அழகு தெரியாது மறைக்கப்பட்டு விட்டது.

*திருச்சுற்றுமாளிகை*

இது திருமாளிகைப்பத்தி என்று அழைக்கப்படுகின்றது. இத்திருச்சுற்றுமாளிகை இரண்டு தளங்களை உடையது, இது கிழக்குப் பகுதியில் ஒரு கோபுரத்துடன் அமைந்துள்ளது. இதன் அதிட்டானப்பகுதி கிழக்கு, தெற்குப் பகுதிகளில் பத்மம், ஜகதி படை, முப்பட்டைக் குமுதம், பட்டிகை என்ற அமைப்பிலும், மேற்கு, வடககுப் பகுதிகளில் பத்மம், ஜகதிப்படை, முப்பட்டைக் குமுதம், பட்டிகை, யாளிவரி என்ற அமைப்பிலும் அமைந்துள்ளது. கீழ்தளத்தில் உள்ள தூண்கள் வேலைப்பாட்டுடனும், மேல்தளத் தில் வேலைப்பாடு இல்லாமலும் உள்ளன. கீழ்தளத்தூண்கள்

கீழிருந்து மேலாக, நான்குபட்டை, எட்டுப்பட்டை, கலசம், குடம், பலகை, போதிகை ஆகிய அமைப்புகளுடன் உள் ளன. கலச அமைப்பின் வாய்ப்பகுதியில் எட்டுபட்டைகளில் உள்ள சிறு சிறு கட்டங்களில் மிக நுண்ணிய சிற்பங்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு கதையை விளக்கும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளன. சுண்ணும்பு அடிக்கப்பட்டு பல இடங் களில் காட்சிகள் தெரியாமலும் உள்ளன.

திருச்சுற்று மாளிகையின் தென்மேற்குப் பகுதியில் மேல் தளத்திற்குச்செல்ல படிகள் உள்ளன. மேற்குப் பகுதியில் தனுசு சுப்பிரமணியர், காசிவிஸ்வநாதர் கோயில்கள் உள்ளன. இவை பிற்காலத்தவை. தனுசுசுப்பிரமணியர் அசப்பில் இராமர் போலவே வில்பிடித்து விளங்குகின்றுர். இப்பகுதியில் பள்ளி யறை, பரிவட்டங்கள் உலர்த்தும் அறை முதலியவை சுவரைத் தடுத்துப் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திருச்சுற்று மாளிகை வடபகுதியில் தென்புறத்தைப் போல் இரண்டு மடங்கு அகலத்தில் உள்ளது. பல இடங் கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. சில இடங்களில் புதிய தூண் கள் பழைய அமைப்பில் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன. திருச்சுற்றுமாளிகை யாரால் எடுக்கப்பட்டது என்பது தெரிய வில்லே. இதன் காலம் கி. பி. 11-ஆம் நூற்றுண்டாகலாம். இதன் மதில் சீர்குலேந்ததால் கி. பி. 1381இல் பாண்டிய குலாசனி வளநாட்டு கச்சிவீரப்பெருமாள் மகன் இதை சீர்திருத்தினுன் என்று கல்வெட்டு மூலம் அறிகின்ரும்.[4]

## மகாலெக்ஷ்மி கோயில், நடராஜமண்டபம்

மகாலெக்ஷ்மி கோயில் 17, 18 ஆம் நூற்றுண்டில் சேர்க்கப் பட்ட இடைச் சேர்க்கை. இதனுள் மகாலெக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய

4 552 of S. I. I. Vol. V

கற்சிற்பங்கள் உள்ளன. இக்கோயிலின் வெளியே அமைந்த திறந்த மண்டபம் சண்டிகேஸ்வரர் ஆலயத்துடன் சேர்ந்துள்ளது. இம்மண்டபத்தில் ஒரு கொற்றவையின் சிலை உள்ளது. இது கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கவேண்டும்.

நடராஜர் மண்டபம் திருச்சுற்றுமாளிகையின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இங்கு நடராஜர், சிவகாமி, மகாலெக்ஷ்மி செப்புத் திருமேனிகள் உள்ளன. நடராஜர், சிவகாமி செப்புத் திருமேனிகளை கி.பி. 12, 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் கருதலாம். இம்மண்டபம் திருச்சுற்று மாளிகையைச் சேர்த்து எடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள தூண்கள் சோமாஸ்கந்தர் மண்டபத்தில் உள்ளது போன்றவை. திருச்சுற்று மாளிகையில் கி. பி. 13, 14, ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பைரவர் சிலைகள் இரண்டுள்ளன. இதனை அடுத்து லிங்கங்கள் உள்ளன. நடராஜர் மண்டபத்தையும், ஐயாறப்பன் கோயிலின் வெளி மண்டப வடசுவரையும் ஒட்டி இரண்டு அறைகள் பிற்காலத்தில் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வறைகளில் இரண்டு அடியவர்களின் சிற்பங்கள் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றுக் கோபுர வாயிலின் வடபுறத்தில் அதிகாரநந்திகேஸ்வரர் தன்தேவியுடன் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளார். இச்சிலை கி. பி. 16, 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்.

மூன்றும் திருச்சுற்று

இத்திருச்சுற்றில் ஓலோக்கமண்டபம், களஞ்சியம், நந்தி, பலிபீடம், கொடிக்கம்பம், உக்கிராணம், மடைப்பள்ளி ஆகியவை உள்ளன. இத்திருச்சுற்றில் உள்ள திருச்சுற்றுமதில் கீழ்புறமும், தென்புறமும் கோபுரங்களைக் கொண்டு இரண்டு வாயில்களுடன் உள்ளது. வடபுறம் ஒரு வாயில் இருந்து, பிறகு அடைக்கப்பட்டதற்கான தடையங்கள் உள்ளன. கீழ்புறம் உள்ளகோபுரம் விக்கிரமசோழனல் எடுக்கப்பட்டது. தென்புறம் உள்ள கோபுரம் 17, 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இத்திருச்சுற்றில் உள்ள ஓலோக்கமண்டபத்தில் நூல் நிலையம், வாகனங்கள், கோயில் அலுவலகங்கள், மேலும் சில

அறைகள் உள்ளன. இம்மண்டபத்தில் ஸப்ததல உற்சவத்தின் அன்று ஏழு ஊர் இறைவரும் காட்சி தருகின்றனர். இம் மண்டபம் கி. பி 14, 15-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது.

*நான்காம் திருச்சுற்று*

இத்திருச்சுற்றினுள் இரண்டு பெரிய தென்னந்தோப்புகள், அம்மன்கோயில், தென்கயிலாயம், வடகயிலாயம், நூற்றுக் கால்மண்டபம், சூரிய புஷ்கரணி தீர்த்தம், காசிவிஸ்வநாதர் கோயில் ஆகியவை அமைந்துள்ளன. இடையிடையே பல மதில் சுவர்கள் எடுக்கப்பட்டு தென்னந் தோப்புகள், நூற்றுக்கால் மண்டபம், அம்மன்கோயில் தென்கயிலாயம், வடகயிலாயம் ஆகியவை தனித் தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மூன்றும் திருச்சுற்றில் உள்ள விக்கிரமசோழன் கோபுரத்தை விட்டு வெளிவந்ததும் பச்சையப்ப முதலியார் மண்டபம் உள்ளது. இங்கு சகம் 1764இல் (கி. பி. 1842இல்) பொறிக்கப்பட்ட கல்வெட்டில் பச்சையப்ப முதலியார் தர்மம் பற்றிய விபரங்கள் உள்ளன. இம்மண்டபத் தூண்களில் சில உருவச்சிலைகள் உள்ளன. அவை பச்சையப்ப முதலியரும், அவரது குடும்பத்தினருமாக இருக்கலாம்.

நாலாம் திருச்சுற்றின் தென்கிழக்கு மூலையில் சூரிய புஷ்கரணி என்ற குளம் உள்ளது. இதற்கு ஒரு புறம் மட்டுமே படிகள் உள்ளன. குளத்தின் நடுவில் ஒரு சிறிய மண்டபம் உள்ளது. இக்குளத்தின் அருகில் காசி விஸ்வநாதர் ஆலயம் உள்ளது. அண்மையில் நிகழ்ந்த கும்பாபிஷேகத்தின் போது கூட இதற்கு எவ்வித திருப்பணியும் செய்யப்படவில்லை. இது அவ்வளவு வழிபாட்டுச் சிறப்புடைய கோயிலாகத் தென்படவில்லை. இதன் அதிட்டானமும், சுவர் பகுதியும் கல்லால் ஆகியவை. விமானம் சுதை, செங்கற்களால் ஆகியது. காலம் கி. பி. 17, 18-ஆம் நூற்றுண்டாகலாம்.

இக்கோயிலை அடுத்துள்ளது தெற்குகோபுரம். இக் கோபுரத்தில் உள்ள இருதுவாரபாலகர்கள் ஆட்கொண்டார், உய்யக்கொண்டார், என வழிபடப்படுகின்றனர். ஆட்

கொண்டாரின் எதிராகத் தெருவில் ஒரு பெரிய அக்கினி குண்டம் உள்ளது. இதில் எந்நேரமும் புகை கிளம்பிக்கொண்டே இருக்கும் வண்ணம் பக்தர்கள் குங்கிலியத்தைப் போட்டு எரித்த வண்ணம் உள்ளார்கள். சதரிசன் என்ற சிறுவன் ஐயாறப்பனை வழிபட்டு வந்ததாகவும் அவனது உயிரைக் காலன் கொண்டுசெல்ல முயன்ற போது இறைவன் ஆட்கொண்டாரை அனுப்பித் தடுத்ததாகவும், காலனை மன்னித்து இறைவனின் திருத்தலத்தில் புகை தெரியும் தூர அளவிற்குப் பக்தர்கள் உயிரைப் பிரிக்கக்கூடாது என்று ஆணையிட்டதாகவும் இங்கு புராணம் உள்ளது.[5] ஆட்கொண்டாராகிய துவாரபாலகரின் அருகில் ஓலமிட்டவிநாயர் என்று ஒரு விநாயகர் உள்ளார். சேரமான் பெருமாள் நாயனுருடன் சுந்தரமூர்த்தி அடிகள் திருவையாறு வந்தபோது காவேரி ஆற்றில் பெருவெள்ளம் ஓட சுந்தரர் 'ஐயாறடிகளோ' என்று விளித்தபோது இவ்விநாயகர் பதில் குரல் கொடுத்தார் என்பது புராணம்.[6] இவ்விநாயகர் உருவம் 16, 17-ஆம் நூற்றுண்டுக் கலைப்பாணியில் உள்ளது.

இந்த நாலாம் திருச்சுற்றில் நான்குமூலைகளிலும் நான்கு விநாயகர் கோயில்கள் கிழக்கும், மேற்கும் பார்த்தவண்ணம் உள்ளன. இத்திருச்சுற்றின் தென்புறம் உள்ள தென்னந்தோப்பில் ஒரு கோயிலின் இடிபாடுகளைக்காணலாம். இவை 12, 13-ஆம் நூற்றுண்டுக்கு முன் இருந்த ஒரு அம்மன் கோயிலின் இடிபாடுகளாகும். இக்கோயிலின் தேவி திருக்காமகோட்டத்து நாச்சியார் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறுர். ஆனுல் இன்று இங்கு கோயில் இல்லை. இடிந்துபோன கோயிலின் கற்களும் பெரும்பகுதி இல்லை. இவை அனைத்தும் நாலாம் திருச்சுற்றின் மதிலுக்கும், முதல் திருச்சுற்று மாளிகைக்கும், 17, 18-ஆம் நூற்றுண்டில் மருதூர் சகோதரர்களால் செய்யப்பட்ட திருப்பணியின்போது, சென்றுவிட்டன. இங்கிருந்த சிலைகளாக மகாலெட்சுமி கோயில் அருகில் உள்ள துர்க்கையையும், முதல்

---

5-7 திருவையாற்றுத் தலவரலாறு பக்கம் 10, 13
தருமபுர ஆதீன வெளியீடு 43

கீழைத் திருக்கோபுரத்தில் உள்ள முருகன், லிங்கோத்பவர் போன்ற சிற்பங்களையும் கருதலாம். இன்று இடிந்துள்ள இந்த இடிபாட்டில் மரங்கள் வளர்ந்துள்ளன. எஞ்சிய கற்கள் உடைத்துப் பொடியாக்கப்பட்டு மற்றத் தேவைகளுக்குப் பயன்படுத்தப் பட்டுவருகின்றன. இந்தத் தென்னந்தோப்பில் பசுமடம் அமைந்துள்ளது. இதனருகில் யானைகட்ட ஒருகொட்டகையும் அதனுள் 'ஐயாறன்' என்ற ஒரு யானையும் வளர்க்கப்படுகின்றது.

அம்மன்கோயில்

நாலாம் திருச்சுற்றில் வடகிழக்குத் திசையில் இக்கோயில் உள்ளது. இவ்வம்மனின் பெயர் அறம் வளர்த்த நாயகி, தர்ம சம்வர்த்தினி என்பவையாகும். இக்கோயில் முற்றிலும் 20-ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்டதாகும். 17, 18-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த மருதூர் சகோதரர்களது திருப்பணிகளைப் போலல்லாது இவை முற்றிலும் புதிய கற்களைக் கொண்டே கட்டப்பட்டுள்ளன. இக்கோயில் இரண்டு திருச்சுற்றுகள், ஒரு அலங்கார மண்டபம், ஒரு வாயிற்கோபுரம் ஆகியவற்றுடன் ஐயாறப்பன் கோயிலிருந்து தனித்து விளங்குகிறது. ஐயாறப்பன் கோயிலிருந்து இக் கோயிலுக்குச் செல்ல ஒரு வழியும் உள்ளது

இறைவன் அம்பிகைக்கு 2 நாழி அரிசியைக் கொடுத்து உலகில் உள்ள எல்லா மக்களுடைய பசியையும் நீக்கச் சொல்லி ஒருசோதனை வைத்தபோது அம்பிகை 32 அறங்களையும் குறைவற நிறைவேற்றியதால் அறம் வளர்த்த நாயகி எனப் பெயர் பெற்றார்.[7] இவளது நான்குகரங்களில் பின்னிருகரங்களில் அக்கமாலை கெண்டி முதலியன கொண்டு முன்னிருகரங்களில் அபயம், வரதம் காட்டி விளங்குகின்றாள். இவள் இருக்கைகொண்டுள்ள கருவறை உள்மண்டபங்களின் அதிட்டான, பித்தி பகுதிகள் கற்களால் கட்டப்பட்டு முகம் தெரியுமளவு பளபளப்பு (பாலிஷ்) ஏற்றப்பட்டு உள்ளன. விமானம் சுதையால் ஆகியது. சுவர்களைக் கால்வதிகளும், கும்பபஞ்சரங்களும் அழகு செய்கின்றன. தேவகோஷ்டங்கள் இல்லை. இக்கோயிலை ஒட்டி உள்ள மண்டபத்தை மான்கொம்புகள், பெரிய அலங்காரவிளக்குகள் இவை அழகு செய்கின்றன.

*சிற்பங்கள்*

இக்கோயிலின் தூண்களில் உள்ள சிற்பங்களில் வரலாற்று முக்கியத்துவம் ஏதும் இல்லை என்ற போதிலும் அவற்றில் நாம் 19, 20-ஆம் நூற்றுண்டின் பண்பாட்டு, கலை, சமுதாயச் சிறப்புகளின் பிரதிபலிப்பை நன்கு காணலாம். புகழ் பெற்ற ஓவியர் ரவிவர்மா தனது கறபனையில் தோன்றியபடி இறைவனைக் காட்டினுர், அவர் அவ்விதம் காட்டிய கங்காதர மூர்த்திக்காட்சியில் சிவன் விரிந்த சடையுடன், இடுப்பில் கரங்களை ஊன்றி, மேல்நோக்கிக் கம்பீரமாகக் காட்டப்பட்டிருப்பார். மேலிருந்து பெண்ணுருவில் கங்கை கீழே வருவாள். இதனை முனிவர்களும், காளை மீது சாய்ந்த வண்ணம் பார்வதியும் நோக்குவர். இந்தக்காட்சியை இங்கு ஒரு தூணில் காணலாம். காலத்தால் முற்பட்ட கங்காதரர் சிற்பங்களில்[8] இறைவன் மேல் நோக்காது மிகச்சாதாரணமாக தன் தலைமுடிகளில் இரண்டை விரித்துக் கங்கையை ஏற்பவராகக் காட்டப்படுவது மரபு. மற்ருெரு தூணில் விசுவாமித்திரர் குழந்தை வேண்டாம் என்று முகம் திருப்பி, கையால் ஒதுக்கும் காட்சியைக் காணலாம. இதுபோன்று காவடி தூக்குபவர்களையும், துப்பாக்கி பீரங்கி, முதலியவை ஏந்திய ஜவான்களையும், கைவிளக்குடன் பணியில் உள்ள காவலர்களையும் காணலாம். 20-ஆம் நூற்றுண்டின் வாழ்ந்த மக்களின் உணர்வின் பிரதிபலிப்பாக நூல் நூற்கும் காந்தியவாதி, இராட்டைக்கொடியுடன் பாரதமாதா, திருப்பூர் குமரன், வள்ளலார் முதலியோரையும் காணலாம். ஐரோப்பியத் தொடர்பால் நாமறிந்த இறக்கைகளுடன் கூடிய தேவ கன்னிகளையும் காணலாம்.

அம்மன்கோயிலை ஒட்டி ஒரு திருச்சுற்று மாளிகையும், அதில் விநாயகர், முருகன் ஆகியவர்களது கோயில்களும் நவக்கிரகங்களும் உள்ளன. இதற்கு வெளியே ஒரு அலங்கார மண்டபம் சுமார் 100 தூண்களுடன் விளங்குகின்றது.

---

8 திருச்சி மலைமீதுள்ள குடைவரைக்கோயில், திருக்கோகர்ணம் குடைவரைக்கோயில், மாமல்லை ஆதிவராகக்குகை போன்றவை.

# ஒலோகமாதேவீஸ்வரம்

'தமிழகத்தின் தவப்பெருஞ்செல்வன், சிவஞானச்செம்மல், சிவபாதசேகரன் என்று போற்றிப் புகழப்பட்ட அருள்மொழி வர்மனுகிய இராஜராஜன் தஞ்சையிலும் பிற இடங்களிலும் எடுத்த கோயில்கள் அருள்மிகுந்து பெரும்புகழ் எய்தியது போலவே அவனது தலைமைத்தேவியான லோகமாதேவியும் அருங் கோயில்கள் பல எடுத்துப் புகழ்பெற்றுள். அவற்றுள் அழகும், சிறப்பும் நிறைந்து விளங்குவது திருவையாற்றில் அத்தேவி எடுத்த லோகமாதேவீஸ்வரம்',[1] ஆகும். இத்திருக்கோயிலே இன்று வடகயிலாயம் என்ற பெயரில் விளங்குகிறது. இக் கோயில் கருவறை, உள்மண்டபம். முன்மண்டபம் ஆகியவற்று டன் மிக எளிமையாகவும் எடுப்பாகவும் விளங்கும் ஒரு கற்றளி. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் மூலம் இக்கோயில் கி. பி 1006 க்கு முன்பாகக் கட்டி முடிக்கப்பட்டது என அறி கின்றோம். ஒலோகமாதேவியால் இக்கோயில் எடுக்கப்பட்டது என்ற செய்தியை அவரது கல்வெட்டு, 'ஸ்ரீராஜராஜதேவர் நம் பிராட்டியார் தன்திசந்தி விடங்கியாராந ஸ்ரீ ஒலோகமாதேவி யார் வடகரை ராஜேந்த்ரஸிம்ஹ வளநாட்டுப் பொய்கைநாட்டு திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்[த] திருக்கற்றளி ஒலோக மாதேவீசுரம்'[2] என்று தெளிவாகக்காட்டுகின்றது. இவ்வழ கிய கோயிலை அவள் விருப்பத்திற்கேற்ப எளிமையாகவும் சிறப் பாகவும் வடித்தவர்கள் இருவர். ஒருவர் தச்சாசாரியன் எழுவடி யான் காரோணனுன புவனிமாணிக்க ஆசார்யன். மற்றொருவர் நக்கனுச்சனுன கலியுகரம்பைப் பெருந்தச்சன்.

## கட்டிட அமைப்பு

இக்கோயில் முற்றிலும் கல்லால் கட்டப்பட்ட ஒருசிறிய கோயில். கருவறை, உள்மண்டபம், வெளிமண்டபம் ஆகியவற்

1 'இராஜராஜனின் தேவி எடுத்த கோயில்' கலைக்கதிர் வெள்ளிவிழாமலர் 1974 இரா. நாகசாமி

2 521 of S. I. I. Vol. V

றுடன் அமைந்தது. விமானம் வேசர சிகரத்துடன் அமைந்த ஒருதள விமானமாகும். கருவறை, உள்மண்டபம் ஆகியவற்றின் அதிட்டானப்பகுதிகள் ஒரே அமைப்புடனும் முன்மண்டப அதிட்டானப்பகுதி வேறு அமைப்பிலும் அமைந்துள்ளன. கிழக்கு நோக்கியுள்ள இக்கோயிலில் கிழக்கில் ஒருவாயிலும், முன்மண்டபமும் உள்மண்டபமும் சேருமிடத்தில் தென், வட புறங்களில் இரு வாயில் போன்ற அமைப்புக்களும் அமைந்துள்ளன. உள் மண்டபத்தில் நான்கு அழகிய தூண்களும் முன்மண்டபத்தில் நான்கு எளியதூண்களும் உள்ளன.

கருவறை, உள்மண்டபம் ஆகியவற்றின் அதிட்டானப் பகுதிகள் கீழிருந்து மேலாக உபானம், பத்மஜகதி, பத்மவரி களுடன் கூடிய விருத்தகுமுதம், யாளி வரி, வேதிகை ஆகிய அமைப்புகளுடன் உள்ளன. முன்மண்டபத்தின் அதிட்டானப் பகுதி உபானம், ஜகதி, விருத்தகுமுதம், பட்டிகை, வேதிகை ஆகிய அங்கங்களுடன் காணப்படுகிறது.

கருவறையின் சுவர்ப்பகுதியில் மூன்று புறமும் தேவகோஷ்டங்கள் அமைந்துள்ளன. உள்மண்டபத்தின் சுவர் ப்குதியில் தென்புறம் ஒருதேவகோஷ்டமும் வடபுறம் ஒரு தேவகோஷ்டமும் உள்ளன. இவற்றின் இருபுறத்திலும் தெய்வச்சிலைகள் வைப்ப தற்கல்லாது, வெறும் அலங்காரத்திற்கான தேவகோஷ்டங்களும் உள்ளன முன்மண்டபத்திலும் இதேபோன்று அலங்காரத்திற்காக அமைக்கப்பட்ட தேவகோஷ்டங்கள் பக்கத்திற்கு மூன்றாக உள்ளன.

பிரஸ்தரப்பகுதி கருவறை, உள்மண்டபம், முன்மண்டபம் ஆகிய எல்லா இடங்களிலும் ஒரே அமைப்புடையது கீழே பூத வரியும், நடுவில் கபோதமும், மேலே யாளிவரியுமாக இப்பகுதி அமைந்துள்ளது. கபோதத்தில் கூடுகள் அமைந்துள்ளன.

சோழர்காலக் கட்டிடக்கலை பற்றிய ஆய்வு செய்த Douglas Barrett அவர்கள் கருவறை, உள்மண்டப அதிட்டானப் பகுதிகளை C 4 என்ற பட்டியலில் சேர்த்துள்ளார்கள், இதே போன்ற அதிட்டான அமைப்புகள் அவர்களது ஆய்வின்படி

கிழையூர், லால்குடி, கண்டியூர், கிளியானூர், திருநாரையூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. மேலும் அவர்கள், உள்மண்டபத்தின் அமைப்பு சோழர் கலைப்பாணியில் வேறு எங்கும் காணப்படாததொன்று என்றும் குறிப்பிடுகின்றார்கள்.[3]

சிற்பங்கள்

இக்கற்றளியில் சிற்பங்கள் மிக எளிமையாகவும் அழகாகவும் அமைந்து விளங்குகின்றன. பூதவரி, யாளிவரிகள் சிறப்புடையவை. பூதங்கள் வரிசையாக நாட்டியமாடுவதுபோல் காட்டப்பட்டிருக்க இடையிடையே இரண்டு பூதங்கள் சண்டையிடுவது போலவும், சில இடங்களில் பூதங்களின் இடையே குரங்குகள் ஒன்றுமறியாதவைபோல் இருப்பதும், பூதம் மனிதனுடன் கைகோர்த்து நிற்பதும் நம்மைக் கவர்கின்றன. அதிட்டானத்தில் உள்ள யாளிவரியில் சில யாளிகள் துதிக்கையுடனும், சில யாளிகளின் பிடரிமுடிகள் அழகாகச் சுருண்டிருப்பதும், யாளிவரி திருப்பங்களைக் கடக்குமிடங்களில் மகரவாய்கள் வெளியே துருத்திக்கொண்டிருப்பதும், அவற்றின் வாய்களிலிருந்து வீரர்கள் வெளிப்படுவதும், அவற்றின் தலைமீது வீரர்கள் வீற்றிருப்பதும் நம்மைப் பரவசப்படுத்தக்கூடியவை.

பிரஸ்தரப் பகுதியில் கபோதத்தில் உள்ள கூடுகளிலும் பல அழகிய காட்சிகள் சிற்பங்களாக உள்ளன. அன்னம், கொக்கு, மீன், பசு, போன்ற விலங்குகள் சிவலிங்கத்திற்குப் பூசைசெய்யும் காட்சிகள் குறிப்பிடத்தக்கவை சுவர்பகுதியில் பல அழகிய கால்வரிகளும், தேவகோஷ்டங்களில் அமைந்துள்ள மகர, சித்திர தோரணங்களும் மிகவும் அழகுடையவை. மகர தோரணங்களில் மகரவாய்களிலிருந்து வீரர்கள் வெளிப்பட்டு ஒவ்வொருவருடன் பொருதுவதும், யாளிகள் வெளிப்படுவதும் நன்கு தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளன. சுருங்கச் சொன்னால் ஒவ்வொரு இடத்தையும் நாம் நன்கு ரசித்து மகிழலாம்.

---

3. Early Chola Architecture and sculpture page - 112

உள்மண்டபத் தென்சுவரில் அமைந்துள்ள தேவகோஷ்டத்தில் ஆடவல்லானின் சிற்பம் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. அதை முழுவதும் அழித்துவிட்டனர். ஆடவல்லான் காலடியில் கிடந்த முயலகன், தன்கையில் உள்ள அரவத்தை நோக்க, அரவம்அவனை நோக்க இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கியவண்ணமுள்ளனர். தேவகோஷ்டத்தின் வெளியே கீழ் புறத்தில் உள்ள பூதம் ஒன்று இப்பொழுதுதான் தன்கழுத்தில் மாட்டித்தொங்குகின்ற மத்தளத்தில் அடித்துவிட்டு கையை ஓங்கி யுள்ளது போல் தோன்றுகிறது. அருகில் உள்ள பூதம் பரவசத் தோடு கைகளைக் கூப்பிக்கொண்டு நிற்பதும், மேற்குப்புறத்தில் குடமுழா வாசிப்பதும் நமக்கு இன்று ஆடவல்லான் அங்கில் லையே என்ற வருத்தத்தை உண்டுபண்ணக்கூடியனவாக விளங்கு கின்றன.

கருவறையின் தென்தேவகோஷ்டத்தில் ஆலமர்செல்வன் தன் இருகால்களையும், நான்கில் இரண்டு கரங்களையும் இழந்த போதிலும் முகத்தில் அருளும், உதட்டில் நகையும் கூட்டி அழகே வடிவாக விளங்குகின்றார். இவர்க்குமேலுள்ள ஆலமரத்தில் அக்கமாலை ஒன்று தொங்க, அரவம் ஒன்று நகர, ஆந்தை ஒன்று விழிக்க, அணில் ஒன்று கொறிக்க, கிளி ஒன்று பழம் தின்ன, பல்லி ஒன்று விரைய, துணி ஒன்று பறக்க, பூக்குடலை ஒன்று ஆட, சாமரம் ஒன்று இருக்க நம் கண்களுக்கு நல்ல விருந்து கிடைக்கின்றது. ஆலமர்ச்செல்வன் தலையில் ஜடா மண்டலமும், மார்பில் உபவீதமும், வயிற்றில் உதரபந்தமும், இடையில் கச்சையும் அணிந்து விளங்குகின்றார். பின்னிருகரங்களில் அக்க மாலையும், அனலும் உள்ளன. ஜடாமண்டலத்தில் உள்ள ஊமத்தை, அருகு, எருக்கு ஆகிய மலர்களும் கழுத்தில் உள்ள அணிகளும் மிகத்தெளிவாகத் தெரிகின்றன. காலடியில் அரவம், மான்கள், முயல்கள், கோஷ்டத்தின் வெளியே தேவர்கள், முனி வர்கள் அறம்பயிலும் காட்சியும் மிகத்தெளிவாக உள்ளன.

கருவறையின் மேற்புற தேவகோஷ்டத்தில் சிற்பங்கள் ஏதுமில்லை. வடபுறகோஷ்டத்தில் நான்முகன் விளங்குகின்றார். நான்முகன் என்றால் நான்கு முகங்களல்லவாவேண்டும்? மூன்று

முகங்கள்தானே உள்ளன என்று எண்ணி யாரோ இவரது நான்கு கரங்களிலும் ஒன்றை உடைத்து மூன்றாக்கி விட்டனர். பின்னிருகரங்களில் அக்கமாலையும் கெண்டியும் உள்ளன. இவர் பத்ம பீடத்தில் இடதுகாலை மடக்கி, வலது காலை தொங்க விட்டு உபவீதம், உதரபந்தனம், மகுடம் அணிந்து வீற்றிருக்கின்றார். தலைக்கு மேல் வெண்குடையும், இரு சாமரங்களும் உள்ளன. வலதுகாலை வைக்க காலடியில் ஒரு திண்டு உள்ளது. ஆலமர்செல்வன், நான்முகன் ஆகிய சிற்பங்களைப்பற்றி Douglas Barrett "இவ்விரு உருவங்களும் முதலாம் இராஜராஜன் ஆட்சியில் உருவான மிக நேர்த்தியான உருவங்களில் குறிப்பிடத்தக்கவை. தஞ்சை ராஜராஜீஸ்வரக் கோயிலில் உள்ள சிற்பங்களை விடச் சிறந்தவை"[4] என்று குறிப்பிடுகின்றார்.

அண்மையில் நிகழ்ந்த திருப்பணியின் போது இங்கிருந்த சப்தமாதர்கள் பின்னப்பட்டவை என்ற கருத்தில் அகற்றப்பட்டு அருகில் உள்ள தென்னந்தோப்பில் வழிபாடற்றுக் கிடக்கின்றன. இவற்றில் வாராகி மட்டும் காணவில்லை. இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக மிக எளிய தோற்றத்துடன் உள்ளன. இவை தவிர ஒரு சிவன் சிலையும் மார்பளவில் உடைந்த சூரியன் சிலையும் இங்கு வழிபாடற்றுக் கிடக்கின்றன.

உள்மண்டபத்தின் வெளியே அமைந்துள்ள துவாரபாலகர்கள் கம்பீர தோற்றத்துடனும் நகை கூட்டிய முகத்துடனும் விளங்குகின்றனர். தென்புறமுள்ள துவாரபாலகரின் காலடியில் கதை வைத்துக் கொண்டு நிற்கும் குழந்தை போன்ற உருவம் மிக மகிழ்வூட்டக் கூடியது. துவாரபாலகரின் கதையில் சுற்றியுள்ள பாம்பு ஒரு பானையையே விழுங்கிக் கொண்டிருப்பதும் கண்டு ரசிக்கக் கூடியது.

உள்மண்டபத்தில் உள்ள நான்கு தூண்களும் சிற்பத்திறனைப் பறைசாற்றுபவை. இவை கீழிருந்து மேலாக நான்கு பட்டை, எட்டுப்பட்டை, கலசம், குடம், பலகை பத்மம், பலகை,

---

4 Ibid

போதிகை என்ற அமைப்புடையவை. இவற்றில்செய்யப்பட்டுள்ள அலங்கார வேலைப்பாடுகள், பொன்னில் மணிகளும், மாணிக்கங் களும் இழைத்துச் செய்த வேலைப் பாட்டிற்கு ஒப்ப அமைந்து உள்ளன. இவற்றைச் செதுக்கிய சிற்பி பொன்னில் வேலை செய்யவும் கற்றவன் என்று எண்ணத் தோன்றும். முத்துச் சரங்கள் தொங்குவது போன்று அழகிய வேலைப்பாடுகள் உள்ளன. தூணின் இடையில் உள்ள எண்பட்டைப் பகுதியில் சிறுசிறு கட்டங்களில் பல காட்சிகள் மிகத் தெளிவாகவும், சிறப்பாகவும் செதுக்கப்பட்டுள்ளன.

ஓலோகமாதேவீஸ்வராக விளங்கும் சிவலிங்கத்தில் சிற்ப வேலைப்பாடுகளுக்கு ஏதும் வாய்ப்பில்லை என்ற போதிலும் கோயிலின் மொத்த அழகிற்கேற்ப அது எடுப்பான தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் முன் மண்டபத்திற்கு வெளியே இருந்து பார்த்தால் கூட இச்சிவலிங்கம் தெளிவாகத் தெரியும் அளவிற்கு இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் ருத்திர பாகம் பளபளப்பாக உள்ளதால் தீபம் காட்டும் போது தீப ஒளி இதனில் பட்டுப் பிரதிபலிக்கின்றது.

## தென் கயிலாயம்

'கயிலைகண்டன்றி இவ்வுடல் கொண்டு மீளேன்' என்று அப்பர் கயிலை யாத்திரையை மேலும் தொடர்ந்தபோது அவருக்கு இறைவன் கயிலைக் காட்சியை திருவையாற்றில் காட்டினார் என்பது புராணச் செய்தி. இதன் தொடர்பாகவே திருவையாற்றில் ஐயாறப்பன் கோயிலின் தென்புறத்தே அமைந்துள்ள கோயிலைத் தென்கயிலாயம் என்று அழைக்கின்றனர்.

முதலாம் இராசேந்திரசோழன் காலத்திய கல்வெட்டிலும் இக்கோயில் தென்கயிலாயம் என்றே குறிப்பிடப்படுகின்றது. இக்கல்வெட்டின் மூலம் இக்கோயில் இவனது பட்டத்தரசி பஞ்சமாதேவியால் எடுக்கப்பட்டது என்று அறிகின்றோம். இக் கல்வெட்டு இராசேந்திரசோழனின் 31-ஆம் ஆட்சி ஆண்டைச்

சேர்ந்தது (கி.பி. 1143). இக்கோயிலின் கிழக்குப் பகுதி அதிட்டானத்தில் இக்கல்வெட்டு உள்ளது. "....வடகரை ராஜேந்திர சிங்கவள நாட்டு பொய்கைநாட்டு திருவையாற்று நம்பிராட்டியார் பஞ்சவன்மாதேவி ... யாற்று எடுப்பித்தருளுகின்ற திருக்கற்றளி தென் கயிலாயமுடையார் கோயில் ...." என்ற அக்கல்வெட்டில் உள்ள வரிகள் இங்கு குறிப்பிடத்தக்கவை. இதன் மூலம் இன்றுள்ள தென்கயிலாயக் கோயிலின் கட்டிட அமைப்பு கி. பி. 1143 க்குச் சற்று முன் எடுக்கப்பட்டது என்பதை நன்கு உணரலாம்.

கட்டிட அமைப்பு

இக்கோயில் கருவறை உள்மண்டபம் முன்மண்டபம், திருச்சுற்று, திருச்சுற்று மாளிகை, கோபுரவாயில் ஆகியவற்றுடன் அமையப்பெற்று, வடக்கு நோக்கியுள்ள ஒரு கற்றளியாகும். கருவறை, உள்மண்டபம் ஆகியவை ஒரே மாதிரியான கட்டிட அமைப்புடையவை. இவற்றின் அதிட்டானப்பகுதி; பத்மஜகதி, பத்மவரிகளுடன் கூடிய விருத்த குமுதம், பட்டிகை, வேதிகை ஆகிய அமைப்புகளை உடையது. அதிட்டானத்திற்கு கீழ் அமைந்துள்ள உபானத்தின் கீழ்பகுதி அழகிய சாலே, கூட அமைப்புகளுடன் விளங்குகிறது. இது போன்ற அமைப்பை தாராசுரத்திலுள்ள இரண்டாம் இராஜ ராஜன் காலத்திய அம்மன் கோயிலிலும் காணலாம். அதிட்டானத்துக்கு மேலமைந்த சுவர்பகுதி தேவகோஷ்டங்கள், கால் வரிகளுடனும், அதற்கும் மேல் அமைந்த பிரஸ்தரப் பகுதி பூதவரி, கொடுங்கை, யாளிவரி ஆகிய அமைப்புகளுடனும் விளங்குகின்றன.

முன்மண்டபம் தற்காலத்தில் பிரிக்கப்பட்டு சீர்படுத்தப் பட்டுள்ளது. முன்பகுதி திறந்த அமைப்புடனும், கிழக்குப் பகுதி ஒரு வாயிலுடனும், மண்டபம், பிற்காலத் தூண்கள், கொடுங்கை முதலியவற்றுடனும் விளங்குகின்றன. இம்மண்டபத்தின் விதானத்தில் அப்பர் பற்றிய பிற்கால ஓவியங்கள் உள்ளன. அப்பர், சண்டிகேஸ்வரர் முதலிய பிற்காலத்திய சிற்பங்கள் இங்கு காணப்படுகின்றன

*சிற்பங்கள்*

தேவகோஷ்டங்களில் உள்ள சிற்பங்கள் குறிப்பிடத் தக்கவை. இவை உள் மண்டப, கருவறைச் சுவர்களில் அமைந் துள்ளன. உள் மண்டப தென் சுவற்றில் முதலில் ஒரு அலங் கார தேவகோஷ்டமும் அதனை அடுத்தடுத்துள்ள தேவகோஷ் டங்களில் பைரவர், விநாயகர் சிற்பங்களும் உள்ளன. பைரவர் பத்மபீடத்தின் மீது, சுடரொத்த முடி தரித்து நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளார். பின்னிரு கரங்களில் உடுக்கையும், பாச மும் முன்னிரு கரங்களில் சூலமும், கபாலமும் விளங்குகின்றன. திறந்த மேனியராய் இடையில் அரவம், வயிற்றில் உதர பந்தனம், மார்பிலிருந்து தொடையளவில் கபாலங்கள் கோர்த்த உபவீதமும் அணிந்து காட்சியளிக்கின்றார். இவரது முன்னிரு கரங்கள் உடைந்து, சுதை வேலையால் சரிசெய்யப்பட்டுள்ளன. வலது காலில் ரக்ஷா பந்தனம் காணப்படுகின்றது.

பைரவருக்கு அடுத்த தேவகோஷ்டத்தில் வெண் குடையின் கீழ் விநாயகர் நின்ற நிலையில் காட்சி தருகின்றார். பின்னிருகரங்களில் அங்குசமும், பாசமும் காணப்படுகின்றன. முன்னிருகரங்களில் இடது கரம் உடைந்தும், வலது கரத்தில் உடைந்த தந்தமும் காணப்படுகின்றன. துதிக்கை இடம் புரியாகக் காணப்படுகின்றது. உந்திய வயிரும் அதற்கு கீழ் இறங்கிய இடையாடையும், குள்ளக்கால்களும் மிக அழகாக நமக்கு விநாயகப்பெருமானைக் காட்டுகின்றன.

கருவறையின் மூன்று தேவகோஷ்டங்களிலும் சிவபெருமான் காட்டப்பட்டுள்ளார். கீழ்புற தேவகோஷ்டத்தில் சிவபெருமான் சுகாசன மூர்த்தியாக பத்ம பீடத்தில் அமர்ந்து காட்சி தருகின்றார். நான்கு கரங்களில் ஒரு கரம் இல்லை. விநாயகருக்கும், பைரவருக்கும் இல்லாத போது இவருக்கு மட்டும் ஏனென்று எண்ணி உடைத்துவிட்டனர் போலும். பின்னிரு கரங்கள் மான், மழுவை ஏந்தியும், எஞ்சிய முன் இடது கரம் அழைத்து வழங்குகின்ற ஆகூயவரதமுத்திரை காட்டியும் விளங்கு கின்றன. இடக்கால் மடக்கியும் வலக்கால் திண்டின் மீதும் அமைந்

துள்ளன. தென்புற தேவகோஷ்டத்திலும் நான்கு கரங்களில் ஒன்றை இழந்து, சிவபெருமான் எஞ்சிய பின்னிருகரங்களில் சூலம், கபாலம் கொண்டும் முன் இடது கரத்தில் ஆகூய வரத முத்திரை காட்டியும், தலையில் ஜடாமுடியும், காதுகளில் மகர, பத்திர குண்டலங்கள் அணிந்தும் விளங்குகின்றார். மேற்புற தேவ கோஷ்டத்தில் அமர்ந்துள்ள சிவபெருமானுக்கும் நான்கு கரங் களில் ஒன்றில்லை. எஞ்சியவற்றில் அக்கமாலை, கெண்டி, ஆகூய வரதம் ஆகியவை விளங்குகின்றன.

உள்மண்டபத்தின் மேற்குப்புற தேவகோஷ்டங்களிலில் கொற்றவையும், கொற்றவை மைந்தனும் விளங்குகின்றனர். முருகப் பெருமான் நின்ற நிலையில் பின்னிருகரங்களில் வஜ்ரம், சக்தி ஆகியவை கொண்டு முன்னிருகரங்களில் வலக்கரத்தால் அபயமளித்து, இடக்கரத்தை இடையில் வைத்து காட்சி யளிக்கின்றார். இவரது முகத்தில் குழந்தை முகத்தைக் காண லாம். காதுகளில் மலர் குண்டலங்களும் மார்பில் வீரசன்னமும் தலையில் கரண்ட மகுடமும் அழகு செய்கின்றன. இச்சிற்பத்திற்கு அடுத்த தேவகோஷ்டத்தில் நின்ற நிலையில் உள்ள கொற்றவை பின்னிருகரங்களில் சங்கும் சக்கரமும் பிடித்து, முன் வலக்கரத்தால் அபயம் கொடுத்து, முன் இடக்கரத்தை தொடையில் வைத்து விளங்குகின்றாள். மார்பில் வீரசன்னம் காட்சியளிக்கின்றது.

திருச்சுற்று மாளிகை

தென்கயிலாய கோவிலுக்கு வரலாற்றுச் சிறப்பையும் கலைச்சிறப்பையும் கூட்டுவதாக இத்திருச்சுற்றுமாளிகை விளங்கு கின்றது. திருச்சுற்றுமாளிகையின் அமைப்பில் சிறப்பில்லை எனினும், இம்மாளிகையைத் தாங்கி நிற்கும் தூண்கள் சிறப்பு மிக்கவை. இத் தூண்கள் தமிழக கலைப்பாணியில் அமைந்த வையல்ல. இவை நுளம்பர் கலைப்பாணியில் அமைந்தவை.

சோழ மன்னர்கள் தமிழகத்துக்கு அப்பால் வெற்றிகள் கண்டபோது அங்கிருந்து எண்ணிலடங்காத திறைப் பொருள்கள் கொண்டு வந்தது போலவே வெற்றி கண்ட நாடுகளில் தங்களை கவர்ந்த கலைப் பொருள்களையும் கொண்டு வந்துள்ளனர்.

அவ்விதம் கொண்டு வரப்பட்டதே இன்று தாராசுரத்திலிருந்து தஞ்சைக் கலைக்கூடத்துக்கு கொண்டு வரப்பட்டுப் பாதுகாக்கப் படும் துவாரபாலகர் சிற்பமாகும். இதன் கீழ் உள்ள கல்வெட்டு, விஜயராஜேந்திரன் கல்யாணபுரமெரித்து அத் துவாரபாலகரைக் கொண்டு வந்தான் என்று குறிக்கின்றது. கங்கைகொண்டசோழபுரத்தில் கலிங்கர், சாளுக்கிய கலைப் பாணிச் சிற்பங்கள் ஐந்துக்கும் மேற்பட்டவை உள்ளன.[1] இவை போலவே தென்கயிலாயத் திருச்சுற்று மாளிகைத் தூண்கள் நுளம்பாடியிலிருந்து இராசேந்திரசோழனலோ, அவனது மைந்தர்களாலோ கொண்டு வரப்பட்டன.

நுளம்பர்களது கலைப்பாணிக்கு எடுத்துக்காட்டாக தர்மபுரியில் அமைந்துள்ள கோட்டைக் கோயில்[2], சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள நுளம்பர் சிற்பங்கள் முதலிய வற்றைச் சொல்லலாம். திருவையாற்றுக்கு அருகில் உள்ள திருச்சோற்றுத்துறையில் அண்மையில் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுதுறை, உமையுடன் கூடிய சிவனின் நுளம்பர் கலைப்பாணி சிற்பத்தைக் கண்டு பிடித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நுளம்பர் கலைப்பாணியில் திருவையாற்றில் மொத்தம் 46 தூண்கள் உள்ளன. இவற்றில் நான்கு தூண்கள் மிகுந்த சிற்ப வேலைப்பாடுடனும், மற்றவை எளிமையாகவும் உள்ளவை. மாக்கல் போன்ற கரியகல்லில் மிகநுணுக்கமான வேலைப்பாடுடன் கூடிய இத்தூண்கள் திருச்சுற்று மாளிகைக்கு ஏற்ற அளவில் உயரமில்லாதவை. எனவே இவை மேலும், கீழும் வேறுகற்களைக் கொண்டு உயரப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றில் முன்மண்டப கீழ்புறவாயிலின் அருகில் திருச் சுற்று மாளிகையில் உள்ள இரண்டு தூண்கள் குறிப்பிடத் தக்கவை. வடபுறமுள்ள தூணின் நடுப்பகுதியின் ஒரு புறத்தில், திருப்பிய வண்ணம் ஆடுகின்ற ஆடவல்லான் உருவமும், குட

1 Gangaikondacholapuram—R. Nagaswamy-1970 பக்கம் 59-61

2 கல்கி தீபாவளி மலர் 1975—இரா. நாகசாமி

முழாம் வாசிக்கும் நந்தியும் காட்டப்பட்டுள்ளனர். மறுபுறம் களிநடை பயிலும் காதலர் இருவர் காட்டப்பட்டுள்ளனர். மூன்றும் பக்கத்தில் பூத கணங்களும் மறுபுறத்தில் மலருடன் கூடிய உருவங்களும் காட்டப்பட்டுள்ளன. நாகபந்த அமைப்பு இருக்க வேண்டிய இடங்களில் நான்கு புறங்களிலும் சிங்கங்களின் மீது அமர்ந்த உருவங்கள் சிறப்புச் செய்கின்றன. தென் புறமுள்ள தூணில் சூரியன், சந்திரன் உருவங்கள், நாட்டிய மாடும் உருவங்கள், பன்றியுடன் கூடிய நான்முகன், லிங்கத்தை வழிபடும் உருவங்கள் அனலும் உடுக்கையும் ஏந்தி ஆனந்தத் தாண்டவமாடும் ஆடவல்லான் முதலிய சிற்பங்கள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. நடுப்பகுதிகளில் யாளிமுகங்களும், அதனிலிருந்து துவங்கும் கொடி வட்டங்களும் சிற்பியின் கைத்திறனை விளக்குகின்றன. இத்தூணில் இரண்டு உருவங்கள் ஒரு காலை ஊன்றி, மறுகாலின் முழங்கால்களை முட்டிக் கொண்டு, கைகளை இடையில் வைத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் நோக்கும் காட்சி சிறப்பாக உள்ளது.

தென் திருச்சுற்று மாளிகையில் உள்ள தூண்களில் சிலவற்றின் கலசப்பகுதி, பூர்ண கும்பங்களுக்கு திருநூல் சுற்றி விளங்குவது போலவே அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அமைப்புபாகும். மேற்புறத் திருச்சுற்றுமாளிகையில் உள்ள தூண்களில் இரண்டில் சிற்ப வேலை மிகுந்து காணப்படுகிறது. அவற்றில் பிச்சைபுகும் பெருமான், தன்னை மறந்த மாது, காளியா கிருஷ்ணன், தேவியுடன் கூடிய கஜசம்கார மூர்த்தி முதலியவை குறிப்பிடத்தக்கவை. கஜசம்கார மூர்த்தியின் காலடியில் யானையின் தலை அமையாது, அவருக்கு முன்னதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தூணில் கலசப்பகுதி, இலை தேங்காயுடன் கூடிய பூர்ணகும்பமாகவே தோன்றுவது சிறப்புடையதாகும். இத்தூண்கள் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழகத்தின் வெற்றிச் சிறப்பையும், கலையிடம் கொண்ட பற்றின் காரணமாக எந்தனையோ மைல்களுக்கப்பாலிருந்து பிற நாட்டுக் கலைப்பொருள்களை தமிழகத்திற்கு கொண்டுவந்து மகிழ்வுற்ற தன்மையையும் விளக்குவனவாக அமைந்துள்ளது திருவையாற்றிற்கு ஒரு பெருமையாகும்.

# திருக்கோபுரங்கள்

தமிழகம் என்றாலே வானளாவிய கோபுரம், என்ற அளவிற்கு தமிழக அரசின் சின்னமாகக் கோபுரம் விளங்கு கின்றது. கோபுரம் என்பது கோயிலின் திருச்சுற்றுமதிலில் அமைந்துள்ள வாயிலின் மீது எழுப்பப்படும் கட்டிட அமைப் பாகும். இன்று நாம் காண்கின்ற கோபுரங்களின் கட்டிட அமைப்பு தமிழகக் கட்டிடக்கலை வரலாற்றில் பல நிலைகளைக் கடந்து வந்த அமைப்பாகும். பல்லவர் காலத்தில் கோபுரங்கள் சிறப்புப் பெற்றருக்கவில்லை. முற்காலச் சோழர் ஆட்சியில் கோபுரங்கள் சிறப்புப்பெறத் தொடங்கின. எனினும் அவை கருவறை மீது எழுப்பப்பட்ட விமானங்களைவிட குறைவாகவே சிறப்புப் பெற்றிருந்தன. பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியோரது காலத்தில் அவை படிப்படியாகச் சிறப்புப் பெற்று, வளர்ச்சி யுற்று வானளாவிய கோபுரங்களாக வளர்ந்தன.[1]

### விக்கிரமசோழன் கோபுரம்

திருவையாற்றில் ஐயாறப்பன் கோயிலின் மூன்று புறங் களிலுமாக மொத்தம் எட்டு கோபுரங்கள் உள்ளன. இவற்றில் காலத்தால் முற்பட்டது, மூன்றும் திருச்சுற்றின் கீழை வாயிலில் அமைந்துள்ள விக்கிரமசோழன் கோபுரமாகும். இக்கோபுரத்தின் மேற்குப் பகுதியின் அதிட்டானத்தில் 'ஸ்வஸ்தி ஸ்ரீ இத்திருக்கோபுரம் விக்கிரமசோழனதே' என்று ஒரு கல்வெட்டு உள்ளதை நோக்கி இக்கோபுரம் விக்கிரமசோழனால் (கி. பி. 1118-1135) எடுக்கப் பட்டது என்று அறியலாம்.

இக்கோபுரம் மூன்று நிலைகளையுடையது. பிற்காலத்தில் நிகழ்ந்த திருப்பணிகளால் இக்கோபுரம் முற்றிலும் கல்லால்

---

1. தமிழகக் கோயிற் கலைகள் - தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை- 1973.

ஆகியதா அல்லது கீழ்பகுதி கல்லாலும், மேற்பகுதி செங்கல் சுதையாலும் ஆகியதா என்பது புலப்படவில்லை. இக்கோபுரம் கீழிருந்து மேலாக, உபானம், அதிட்டானம் (ஜகதி, முப்பட்டைக் குமுதம், பட்டிகை, வேதிகை), சுவர், பிரஸ்தரம் (பூதவரி, கபோதம், யாளிவரி), மூன்று தலங்கள், சாலைவடிவ சிகரத்தில் 5 ஸ்தூபிகள் ஆகிய அமைப்புகளுடன் விளங்குகிறது. கால்வரிகளில் நாகபந்தம் காணப்படவில்லை.

இக்கோபுரத்தின் கீழ்தளத்தின் கிழக்கு வாயிலின் இரு மருங்கிலும் துவாரபாலகரின் சிற்பங்கள் விளங்குகின்றன. தென் புறம் உள்ள துவாரபாலகர் இருகரங்களில் ஒன்றுல் தர்ஜனி முத்திரை காட்டி மற்ெருரு கரத்தால் கதையை அணைத்து நிற்கின்ருர். வடபுறம் உள்ள துவாரபாலகர் ஒரு கரத்தில் விஸ்மய (வியப்பு) முத்திரை காட்டி, மற்ெருரு கரத்தால் மழுவை அணைத்து நிற்கின்ருர். இவர்களது தோற்றம் அச்சத்தை உண்டு பண்ணுவதாக இருந்த போதிலும், இவர்களது உதடு களில் தவழ்கின்ற புன்சிரிப்பு நமக்கு மகிழ்வூட்டக் கூடியதாக அமைந்துள்ளது.

கோபுரத்தின் மேற்தளத்தில் சிறப்பாக திசாபாலகர்கள் விளங்குகின்றனர். கிழக்கில் இந்திரன் பருமனான உருவத்துடன் கரங்களில் வஜ்ரம், சக்தி ஆகியவை கொண்டும், தென் கிழக்கில் அக்கினி இரு தலைகளுடனும், கையில் மலர் அல்லது சிருவம் (யாகக்கரண்டி) கொண்டும், தெற்கில் யமன் கரங்களில் பரசு, பாசம் கொண்டும், தென்மேற்கில் நிருருதி கத்தியுடனும், மேற்கில் வருணன் பாசம், கலப்பை போன்றவற்றுடனும், வடமேற்கில் வாயு கொடியுடனும், வடக்கில் குபேரனும், வடகிழக்கில் ஈசானன் கரங்களில் மான் மழு கொண்டும் விளங்குகின்றனர். திசா பாலகர்களது உருவங்கள் கோபுரம் எழுப்பப்பட்ட காலத்திய தாகவே இருக்கக் கூடும். எனினும் பிற்காலத் திருப்பணிகளால் அவற்றின் உண்மை நிலை தெரியவில்லை. திசாபாலகரது சிற்பங் கள் தவிர கிழக்கு, தெற்கு, மேற்குப் பகுதிகளில் சிவபெருமானது பல தோற்றங்களும், வடக்கில் நான்முகன் உருவமும் காணப்படு கின்றன.

## இரண்டாவது கிழைக்கோபுரம்

விக்கிரமசோழனது கோபுரத்திற்கு முன்னதாக உள்ள இக்கோபுரத்தை கி.பி 13, 14-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம். இக்கோபுரத்தின் கால்வரிகளில் நாகபந்தம் சிறிய அளவில் காணப்படுகின்றது. இக்கோபுரத்தில் எவ்வித வேலைப் பாடுகளும் காணப்படாது எளிமையாக விளங்குகின்றது. இதன் கீழ்புறத்தில் இருபுறமும் துவாரபாலகர்கள் உள்ளனர். தென்புறமுள்ள துவாரபாலகர் ஜடாமண்டலம் தரித்து இரு கரங்களில் ஒன்றினுல் விஸ்மய முத்திரையும், மற்ற கரத்தைக் கதை மீது வைத்தும் காணப்படுகின்ருர். காலடியில் பூதகணம் உள்ளது. வடபுறமுள்ள துவாரபாலகர் மழுவுடன் காணப்படு கின்ருர். கோபுரத்தின் உட்பகுதியில் நந்திதேவர் தன் தேவி யுடன் கூடிய ஒரு பிற்காலச் சிற்பம் உள்ளது.

## கிழைக்கோபுரம்

இக்கோபுரம் ஐயாறப்பன் கோயிலின் பிரதான வாயிலில் மற்ற கோபுரங்களை விட எடுப்பாகவும், உயரமாகவும் அமைந்த தாகும். இதன் கீழ்பகுதி கல்லாலும் மேற்பகுதி செங்கல், சுதையாலும், மிகுந்த அளவில் சுதையாலான பொம்மை களுடனும் விளங்குகின்றது. எழு நிலைகளை உடைய உயரமான இக்கோபுரம் ராஜகோபுரம் என வழங்கப்படுகின்றது. கீழ்பகுதி யில் அமைந்துள்ள கோஷ்டங்களில் கிழக்குப் புறத்தில் விநயகர் மயில் வாகனர் கற்சிற்பங்களும், மேற்குப் புறத்தில் லிங்கோத்பவர் கற்சிற்பமும் உள்ளன. இவை கி. பி. 13-ஆம் நூற்றுண்டுக் கலைப் பாணியைச் சேர்ந்தவை. இவை பிற்காலத்தில் வேறிடத்தி லிருந்து இவ்விடத்திற்கு கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளன. இக்கோபுரம் கி. பி. 16, 17-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த நாயக்கர்கள் காலப் படைப்பாகும்.

கிழக்குப்புறத்தில் உள்ள மேல்பகுதியில் தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் கடையும் காட்சி, சிவபெருமான் ஊர்த்துவத் தாண்டவமாட, காளியும் ஆட, நந்தி மேளம் வாசிக்க, நான் முகன் உடுக்கை வாசிக்க, திருமால் தாளமிட, பதஞ்சலி முனிவர்,

வியாக்ரபாத முனிவர் போன்றோர் வணங்க நம் கண்களுக்கு சிறப்பான விருந்து கிடைக்கின்றது. மேலும் இப்பகுதியில் சரப மூர்த்தி, கால சம்காரமூர்த்தி, பிட்சாடனர், நிசும்பசூதனி, நடராஜர் போன்ற பல சுதைச் சிற்பங்கள் உள்ளன. தென் புறத்தில் ஒவ்வொரு அடுக்கிலும் தக்ஷிணாமூர்த்தி விளங்குகின்றார். மேற்குப்புறத்தில் திருமாலுடன் தொடர்புடைய பல அவதாரச் சுதைச் சிற்பங்கள் உள்ளன. வடபுறத்தில் ஒவ்வொரு அடுக்கிலும் நான்முகன் காட்டப்பட்டுள்ளார்.

## தென் கோபுரங்கள்

ஐயாறப்பன் கோயிலின் தென்புறத்தில் மூன்றாம் திருச் சுற்றில் ஒரு கோபுரமும், நான்காம் திருச்சுற்றில் ஒரு கோபுரமுமாக இரண்டு கோபுரங்கள் உள்ளன. மூன்றாம் திருச்சுற்றில் உள்ளது அளவில் சிறியது. இது கி. பி. 17, 18-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. இதனைவிட நான்காம் திருச்சுற்றில் உள்ள தென்கோபுரம் இரண்டு, மூன்று நூற்றாண்டுகள் முந்தியதாகலாம். இக்கோபுரத்தில் அமைந்துள்ள துவாரபாலகர்களே ஆட்கொண்டார் என்றும், உய்யக்கொண்டார் என்றும் மக்களால் சிறப்பாக வணங்கப்படுகின்றனர்.

## மேலைக் கோபுரம்

இக்கோபுரம் மருதூர் சகோதரர்களால் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாகும். இக்கோபுர அமைப்பில் விகிதாசார அளவுகள் குறையுடையனவாகத் தோன்றுகின்றன. இக்கோபுரத்தின் உயரத்திற்கேற்ப இதன் பருமனும், அகலமும் அமையாதது போன்று தோன்றுகின்றது. இக்கோபுரத்தில் சுதையாலான சிற்பங்கள் மிகுந்து காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் நெடிந்து உயரமுடையனவாகக் காணப்படுகின்றன. இச்சிற்பங்களில் பல தெய்வச் சிற்பங்களும், அன்றைய சமுதாயத்தில் விளங்கிய பல மாந்தர்களின் சிற்பங்களும் உள்ளன. இக்கோபுரத்தின் மேற்கு வாயில் பகுதியில் சில அரச குடும்பத்தினரின் உருவச்சிலைகள் உடைந்து காணப்படுகின்றன. கோபுரத்தின் உட்புறத் திண்ணையில் மருதூர் சகோதரர்கள் செய்த திருப்பணிகளனைத்தையும் தொகுத்துக் கூறும் கல்வெட்டு

ஒன்றுள்ளது. இக்கோபுரத்தில் சில இடங்களில் காணப்படும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுத் துண்டுக் கல்வெட்டுகளைக் கொண்டு, இக்கோபுரம் இடிந்துபோன காமகோட்டத்தின் கற்களைக் கொண்டு கட்டப்பட்டதை உணரலாம்.

### தென்கயிலாயக் கோபுரம்

இக்கோபுரம் கீழ்பகுதி கல்லாலும், மேற்பகுதி சுதை, செங்கல்லாலும் ஆகிய மூன்று நிலைக் கோபுரமாகும். மேல் நிலைகளில் சுதை சிற்பங்களில் சிவபெருமான், திருமால் போன்ற தெய்வங்கள் தங்கள் தேவியருடன் போக மூர்த்திகளாகக் காட்டப்பட்டுள்ளனர். கோபுரத்தின் முகப்புப் பகுதியில் ஒரு மன்னன் தன்னிருதேவியருடன் வணங்கும் கோலத்தில் காட்டப்பட்டுள்ளான். இம்மன்னர் தஞ்சை நாயக்க மன்னர் களில் ஒருவராக இருக்கலாம். இக்கோபுரம் இம்மன்னனால் கட்டப்பட்டதாகவோ, திருப்பணிச் செய்து புதுப்பிக்கப்பட்ட தாகவோ இருக்க வேண்டும்.

### அம்மன் கோயில் கோபுரம்

இக்கோபுரம் 20-ஆம் நூற்றாண்டின் கலைப் பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கோபுர நிலைக்கால்களில் உள்ள கொடிப் பெண்கள் மிக அழகாகச் செதுக்கப்பட்டு விளங்குகின்றனர். கோபுரத்தின் கீழ் பகுதி கல்லாலும், மேற் பகுதி சுதை செங்கல்லாலும் ஆகியது. சுதைச் சிற்பங்கள் 20-ஆம் நூற்றாண்டுச் சமுதாயத்தைக் காட்டுகின்றன. பெண்க ளின் கைகளில் உள்ள பண்ணீர் செம்பு, சந்தனப்பேலா போன்ற மங்களப் பொருள்கள் இக்கோபுரத்தில் மட்டும் காணக் கூடியவை.

## மண்டபங்கள்

சிவன் உறையும் கோயில்களைக் குறிப்பிடும்போது அப்பர் பெருமான் 'கடிபொழில்சூழ் ஞாழல் கோயில்'[1] என்று ஒரு

1. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், பக்கம் 612, குமரகுருபரன் சங்கம், 23-12-1961

236605

கோயிலைக் குறிப்பிடுகின்றார். இது மர நிழலில் மேடை போன்ற அமைப்புடன் அமைந்ததென்றும், இதுவே பலகால்களை உடைய மண்டபங்களுக்கு முன்னோடி என்றும் குறிப்பிடுவர். தமிழகத்தில் காலத்தால் முற்பட்ட மண்டபங்கள் குடைவறைக் கோயில்களின் முன்னதாக அமைக்கப்பட்டவையாகும். இவையும் குடைவிக்கப்பட்டே விளங்குகின்றன. யானைமலை, நார்த்தாமலைக் கல்வெட்டுக்களின் மூலம் மாறன் எயினன்,[2] பழியிலி சிறியநங்கை[3] ஆகியோர் ஏற்கனவே குடைவிக்கப்பட்ட குடைவறைக் கோயில்களின் முன்னதாக முகமண்டபங்கள் எடுத்தனர் என்று அறிகின்றோம். முதலாம் பரமேஸ்வரவர்மனது கூரம் செப்பேடு[4] 'கூரத்து மண்டபம்' ஒன்றினைக் குறிப்பிடுகின்றது. இம்மண்டபத்தில் பாரதம் வாசிக்கப்பட்டதையும், இம்மண்டபத்திற்கு தண்ணீர், நெருப்பிற்காக நிவந்தம் வழங்கப்பட்டதை நோக்கி இங்கு சமையல் நடந்ததையும் நாம் அறியலாம். ஆனால் இம்மண்டபம் எவ்வித அமைப்புடையது என்பது தெரியவில்லை.

தமிழகத்தில் விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்களது ஆட்சிக் காலத்தில் இவர்கள் செய்த திருப்பணிகள் சோழ மன்னர்களைப் போன்று புதிய, புதிய கோயில்களைக் கட்டுவதில் சிறப்பாக அமையாது, பழைய கோயில்களைப் புதுப்பிப்பதாகவும், அக்கோயில்களுக்கு புதிய திருச்சுற்றுகளை ஏற்படுத்தி, பெரிய மதில்களை எடுத்து, பெரிய கோபுரங்களை அமைப்பதாகவும், திருச்சுற்றுகளில் பல தனிச் சிற்பங்களுடன் கூடிய தூண்களையுடைய மண்டபங்களை எடுப்பதாகவும் அமைந்தன. இம்மண்டபங்கள் அங்குள்ள தூண்களின் எண்ணிக்கையைக் கொண்டு நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என்றும், அவற்றின் உபயோகத்திற்

---

2. S. I. I. Vcl XIV No 2
3. Early chola Art Part I, Page 45, S. R. Balasubramaniam
4. *கல்வெட்டு ஓர் அறிமுகம்–தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை–1973*

கேற்ப உற்சவ மண்டபம், ஓலொக்க மண்டபம், ஆஸ்தான மண்டபம், கல்யாண மண்டபம், கொலு மண்டபம் என்றும் அழைக்கப்பட்டன.

திருவையாற்றில் ஐயாறப்பன் சந்நதியின் முன்னதாக உள்ள முன்மண்டபம் சொக்கட்டான் மண்டபம் என்று அழைக்கப்படுகின்றது. இம்மண்டபம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட வெளிச் சுவர், அதிட்டான அமைப்புகளுடனும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப்பட்ட உட்புறத் தூண்கள், விதானம் ஆகியவற்றுடனும் விளங்குகின்றது. இதனை ஒட்டி சோமாஸ்கந்தர், மற்ற செப்புத்திருமேனிகளுள்ள மண்டபம் சோமாஸ்கந்தர் மண்டபம் என்றழைக்கப்படுகிறது. இதனையடுத்து நவகிரகங்கள், விநாயகர் உள்ள மண்டபம் முக்தி மண்டபம் என்றழைக்கப்படுகின்றது. விக்கிரம சோழன் கோபுரத்தை அடுத்துள்ள மண்டபம் பச்சையப்ப முதலியார் மண்டபம் என்றழைக்கப்படுகின்றது. அம்மன் கோயிலின் முன்னதாக நவராத்திரி விழாவின்போது அம்மன் கொலுவீற்றிருக்கின்ற மண்டபம் கொலு மண்டபம் என்று அழைக்கப்படுகின்றது.

ஐயாறப்பன் சந்நதியின் எதிராக மூன்றும் திருச்சுற்றில் அமைந்துள்ள மண்டபம் உற்சவ மண்டபம் என்றழைக்கப்படுகின்றது. சப்த ஸ்தல விழாவின் போது ஏழூர் இறைவர்களும் இம்மண்டபத்தில் எழுந்தருளி மக்களுக்குக் காட்சி தருகின்றனர். இம்மண்டபத்தில் கோயில் அலுவலகம், வாகனங்கள், நூலகம், நந்தி, பலிபீடம் போன்றவை அமைந்துள்ளன குறிப்பிட்ட தினங்களில் இம்மண்டபத்தில் தெய்வீகச் சொற்பொழிவுகள் நிகழ்கின்றன. இம்மண்டபத்தில் மொத்தம் நூற்றுஎழுபத்தைந்துக்கு மேற்பட்ட தூண்கள் உள்ளன. இம்மண்டபத்தில் ஐயாறப்பன் சந்திக்கு எதிராக அகலமாக இடம் விட்டு நான்கு திசைகளிலும் வழி செல்லும் வண்ணம் இருபுறமும் இரட்டைத் தூண்கள் அமைந்துள்ளன. இத்தூண்களில் யானைகளும், யாளிகளும் ஒன்றன் மீது ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளன. ஐயாறப்பன் சந்நதியின் எதிராக உள்ள அகண்ட நடுப்பகுதியின் ஓரத்தில் அமைந்துள்ள தூண்கள் இரட்டைத் தூண்களாக இல்லாது

மூன்று தூண்கள் ஒன்று சேர்ந்தவை போன்று அமைந்துள்ளன. இம்மண்டபத்திலிருந்து இறங்கத் தென்புறத்திலும், கீழ்புறத்திலும் படிகள் உள்ளன. தென்புறம் படி அமைப்பில்லாது சரிவான அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

நான்காவது திருச்சுற்றில் கீழைக் கோபுரத்தின் அருகே நூற்றுக்கால் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் பின் பகுதியில் தண்டபாணி கோயில் அமைந்துள்ளது. மண்டபத்தின் படிகள் ஏறி நுழைந்ததும் இருதூண்களில் இராம இலக்குமணர் விளங்குகின்றனர். அதனை அடுத்த தூணில் ஒரு வீரன் வெட்கமே உருவாக, ஆனால் ஒரு கையால் மீசையை முறுக்கிக் கொண்டு நிற்கின்றான். அடுத்த தூணில் பைரவர் அம்பு, வில், கத்தி, கேடயங்களுடன் நான்கு கரத்தவராகக் காணப்படுகின்றார். மண்டபத்தின் நடுப்பகுதியில் தூண்கள் அதிகமாக இடைவெளி விட்டு நிற்கின்றன. இத்தூண்களின் மேல் பகுதியில் சிம்மங்களும், அவற்றின் மீது உத்திரம் செல்ல, அதன் மீது போதிகையும் அமைந்து விளங்குகின்றன. மண்டபத்தின் பின் பகுதியில் உள்ள தூண்களில் இராமர், காமன், பெண் கூந்தல் முடியும் காட்சி, கோவூன்றி முகம் மட்டும் தெரியும்படி உடலைத் துணியால் மூடிக் கொண்டுள்ள இடையன், நடனமாடும் வீரன், பரதநாட்டியமாடும் பெண் போன்றவை சிறுசிறு புடைச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் மக்கள் வெகுவாக ஒரு சிற்பத்தை ரசிக்கின்றனர். மாடும், யானையும் சேர்த்துச் செதுக்கப்பட்டுள்ள இச்சிற்பத்தில் மாட்டைக் கண்டால் யானையைக் காணவில்லை. யானையைக் கண்டால் மாட்டைக் காணவில்லை.

## செப்புத் திருமேனிகள்

தமிழகத்துச் செப்புத்திருமேனிகள் உலகப் புகழ்பெற்றவை. இச்செப்புத்திருமேனிகள் நிறைந்தது தஞ்சை மாவட்டம். ஆண்டாண்டு காலமாக அரசர்களின் கண்காணிப்பிலும், ஆதர

விலும் விளங்கிய இம்மாவட்டத்து ஐயாறப்பன் கோயிலில் செப்புத்திருமேனிகள் சுமார் நாற்பத்தைந்துக்கு மேற்பட்டவைகள் உள்ளன. இவை கி. பி. 10-ம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியிலிருந்து தற்காலம் வரை பல காலகட்டங்களில் உருவாக்கப்பட்டவையாகும் இவற்றில் காலத்தால் முற்பட்டவையாகவும், வரலாற்றுச் சிறப்புமிக்கவையாகவும் குறிப்பிடத் தக்கவை சுமார் பத்து திருமேனிகளாகும்.

### பிட்சைபுகும் பெருமான்

சோமாஸ்கந்தர் மண்டபத்தில் இச்செப்புத்திருமேனி மிக எடுப்பாக விளங்குகின்றது. சுமார் 5 அடி உயரமுடைய இச் செப்புத் திருமேனியை முதலாம் இராஜராஜன் காலத்ததாகக் கருதலாம். இவரது 4 கரங்களில் பின் வலக்கரம் உடுக்கையைப் பற்றியும், இடக்கரம் கடக முத்திரை காட்டியும், முன் வலக்கரம் மானுக்குத் தளிர் ஊட்டியும், முன் இடக்கரம் கபாலம் கொண்டும் விளங்குகின்றன. பிட்சாடனர் திறந்தமேனியராய், கால்களில் பாதரட்சைகள், மார்பில் அழகான உத்தராட்ச மாலையும், ஆரமும், பட்டையான உபவீதமும் அணிந்து, வயிற்றில் உதரபந்தனமும், கணுக்காலில் ரக்ஷாபந்தனமும் விளங்கக் காட்சி தருகின்றார். தலையில் ஜடா மண்டலமும் அதனில் கபாலமும், காதுகளில் மகர, பத்ர குண்டலங்களும் அணிசெய்கின்றன. இடையில் அரவம் சுற்றிக்கொண்டுபடமெடுக்கின்றது. பத்மபீடத்தில் இவர் நிற்கின்ற நிலை, நடந்து செல்கின்ற தோற்றத்தையும், இவரது உதடுகள் புன்சிரிப்பையும், கண்கள் பரவசத்தையும் காட்டுகின்றன. இவரது வலதுபுறம் உள்ள மான். இவரது காப்பணித்த வலது கரத்தில் உள்ள தளிரை எட்டி வாயால் பற்றுவதாகக் காட்டப்பட்டுள்ளது. இடது புறம் தனியாக உள்ள பீடத்தில் பூதம் தன் இருகரங்களையும் காதை ஒட்டித் தலைக்கு மேல் தூக்கி, உள்ளங்கைகளை விரித்து நின்ற நிலையில் உள்ளது. அதன் தலையில் கபாலமோ, வேறு எந்த சுமையோ இல்லாத போதிலும் அதன் முகத்தில் சுமையைத் தாங்கி இருக்கின்ற பாவனை நன்கு காட்டப்பட்டுள்ளது. பூதத்தின் காதுகளில் மலர் குண்டலங்களும், மார்பில் வீரசன்னமும், வயிற்றில் உதர

பந்தனமும், இடையில் இடைக்கச்சையும், கால்களில் தண்டைகளும், கரங்களில் காப்புகளும் அணி செய்கின்றன. பூதத்தின் உயர்ந்துவிரிந்த புருவங்களும், முகத்தில் ஒன்று திரண்ட மகிழ்வுணர்வும் குறிக்கத்தக்கவை.

காளி

சோமாஸ்கந்தர் மண்டபத்தில் ஐந்து காளிகளின் செப்புத் திருமேனிகள் உள்ளன. இவற்றை பிடாரிகள் என்றழைக்கின்றனர். இதில் ஐந்தாவதாக உள்ள காளிசிறப்புடையது. இது கி. பி. 10, 11-ஆம் நூற்றாண்டில் வடிக்கப்பட்டதாகும். இதன் நான்கு கரங்களில் பின்னிருகரங்கள் சூலமும், பாசமும் கொண்டு முன்னிருகரங்கள் அபயமும், வரதமும் காட்டி விளங்குகின்றன. தலையில் சுடர் முடியும், அதனில் கபாலம், மலர், பிறை, அரவம் முதலியனவும், மார்பில் ஆரங்களும், வீரசன்னமும், உபவீதமும் விளங்குகின்றன. வலது காதில் பிரேதகுண்டலம் இடது காதில் பத்ர குண்டலத்துடன் கூடிய அரவமும் விளங்குகின்றன. வாயில் கோரைப் பற்கள் உள்ளன. இடையில் உள்ள இடைக்கச்சை கரைகளிலும், உடலிலும் பல மணிகள் கோர்த்துச் செய்த அலங்கார வேலையுடன் விளங்குகின்றது. மார்பில் கச்சையோ, அரவமோ இல்லை. இக்காளி வலது காலைத் தொங்க விட்டு, இடது காலை மடக்கி அமர்ந்துள்ள பத்மபீடத்துடன், பிரபை பொருத்துவதற்கான முளைகள் உள்ளன.

உமை

இதனை இங்கு போகசக்தி என்றழைக்கின்றனர். இச் செப்புத் திருமேனி கி. பி. 10, 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம். பத்மபீடத்தில் இடது காலைத் தொங்கவிட்டு, வலது காலைச் சற்று மடக்கி சற்று உயர்த்திக் கொண்டு அமர்ந்துள்ள இத்தேவியின் இருகரங்களில் வலது கரம் கடக முத்திரை காட்டியும் இடது கரம் பீடத்தில் ஊன்றியும் காணப் படுகின்றன. தலையில் மகுடமும், காதுகளில் மகரகுண்டலங்களும், மார்பில் உபவீதமும், இடையில் கணுக்கால் வரையிலான வரிச் சேலையும் கால்களில் சிலம்புகளும் அணி செய்கின்றன. உதடு

களில் இளநகை தவழ்கின்றது. இடது கரத்தை ஊன்றியதால் இடது தோள் உயர்ந்த பாவனை சிற்பியின் திறமையைக் காட்டுகின்றது.

ஆடவல்லான்

நடராஜர் மண்டபத்தில் உள்ள இந்த செப்புத் திருமேனி சுமார் 4 அடி உயரமுள்ளது. ஆடவல்லான் தன் நான்கு கரங்களில் பின்னிரு கரங்களில் உடுக்கையும், அனலும் தாங்கி, முன்னிரு கரங்களில் அபயமும், கஜஹஸ்தமும் காட்டி, வலது காலை முயலகன் மீது ஊன்றி, இடது காலை உயர்த்தி, ஆனந்தத் தாண்டவமாடுகின்றார். காலடியில் முயலகன் தர்ஜனி முத்திரை காட்டியும், அவனுடன் உள்ள அரவம் அவனை நோக்க, அவன் ஆனந்த நடனமிடும் இறைவனை நோக்க, முகபாவங்கள் அழகாக வடிக்கப்பட்டுள்ளன. ஆடவல்லானின் பின்புறமுள்ள பிரபையில் 24 சுடர்கள் உள்ளன. இப்பிரபை இறைவனது காலடியில் உள்ள மகரவாய்களிலிருந்து வெளிப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளது. பிரபையில் அலங்காரவேலைகள் காணப்படுகின்றன. இறைவனது இருபுறமும் ஆறு, ஆறு விரிசடைகள் படர்ந்து பிரபையுடன் ஒட்டியுள்ளன. விரிசடையில் கூப்பிய கரங்களுடன் கங்கையும், அவரவமும் காணப்படுகின்றன. இறைவனது தலையில் கபாலமும், காதுகளில் மகர, பத்ரகுண்டலங்களும், மார்பில் உபவீதமும், வயிற்றில் உதரபந்தனமும், இடையில் கச்சையும் இறைவன் சுழன்று ஆடுவதால் பறக்கின்ற குஞ்சமும், வலது காலில் ரக்ஷாபந்தனமும் காணப்படுகின்றன. முகத்தில் இள நகை கூட்டி விளங்குகின்ற இச்செப்புத்திருமேனி கி. பி. 12, 13-ஆம் நூற்றாண்டினதாகலாம். ஆடவல்லானின் அருகில் பத்மபீடத்தில் நின்ற நிலையில் உள்ள சிவகாமசுந்தரியும் இக்காலத்தியதே. தேவி தன்னிருகரங்களில் வலக்கரத்தில் கடக முத்திரை காட்டி இடது கரத்தை லோலஹஸ்தமாகத் தொங்க விட்டு, உதடுகளில் இளநகை கூட்டி நிற்கின்றாள். இடையிலிருந்து கணுக்கால் வரையில் பூவேலைகள் நிறைந்த ஆடை அணி செய்கின்றது. தலையில் கரந்த மகுடமும், காதுகளில் மகர குண்டலங்களும், கழுத்தில் ஆரங்களும், மார்பில் உபவீதமும்,

கைகளில் தோள்வளை, வளையல்களும் இடையில் முத்துச் சரங்களும் அணி செய்கின்றன.

### பிற செப்புத்திருமேனிகள்

ஐயாறப்பன் கோயிலில் மேற்சொன்ன செப்புத்திருமேனிகள் குறிப்பிடத்தக்கவை, இவை தவிர பல்வேறு செப்புத் திருமேனிகள் இங்குள்ளன. இவை பெரும் பகுதி நாயக்க மன்னர்களின் கலைப்பாணியிலும், சில தற்காலத்தியவையாகவும் உள்ளன. அவையாவன, கலக்காசு விநாயகர் (ஒரு கலம் செப்புக் காசுகளைக் கொண்டு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது), விநாயகர், 2 முருகன்-வள்ளி-தெய்வானை செப்புத் திருமேனிகள், தனுசு சுப்பிரமணியர், தண்டபாணி, சண்டிகேஸ்வரர், நந்திகேஸ்வரர் சுயாம்பிகை, குழந்தை வடிவில் நந்திகேஸ்வரர், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சூலத்தேவர், ஆட்கொண்டார் (துவாரபாலகர்), காலசம்காரமூர்த்தி, சந்திரசேகரர் சோமாஸ்கந்தர்-கந்தர்-உமை, பள்ளியறைச் சொக்கர், பள்ளியறை அம்மன் ஆகியவையாகும்.

## ஓ வி ய ங் க ள்

ஓவியங்கள், சிற்பங்களைவிடப் பண்டைய மக்களின் உணர்வுகளையும், பண்பாடு, கலை முதலியவற்றையும் மிகத் தெளிவாகக் காட்டக் கூடியவை. ஐயாறப்பன் கோயிலில் பல நாயக்கர் கால ஓவியங்கள் உள்ளன. அண்மையில் நிகழ்ந்த திருப்பணிகளின் போது இவ்வோவியங்கள் திருத்தப்பட்டு இவற்றின் தொன்மை அறிய இயலாவண்ணம் செய்யப்பட்டுவிட்டன. திருவையாற்றின் கலைச் சிறப்பிற்கு இது ஒரு இழப்பு ஆகும். திருவையாற்றில் ஐயாறப்பன் கோயில் முதல் திருச்சுற்றுவிதானம், சோமாஸ்கந்தர் மண்டபவிதானம், திருச்சுற்று மாளிகையின் கிழக்கு, தென்புறச் சுவர்கள், தென் கயிலாய முன் மண்டபவிதானம் ஆகிய இடங்களில் ஓவியங்கள் உள்ளன. இவை கற்களின் மீது காரை பூசப்பட்டு ஏற்படுகின்ற சமபரப்பில் தீட்டப்பட்டவை.

முதல் திருச்சுற்று

ஐயாறப்பன் கோயிலை ஒட்டியுள்ள இத்திருச்சுற்று விதானத்தில் உள்ள ஓவியங்கள் ஒரே அமைப்புடைய பூக்களும் அவற்றைச் சுற்றிச் சுற்றி வட்டமாகப் பிண்ணிய கொடிகளுமாக உள்ளன. இன்றைய தினங்களில் வீடுகளின் தரையில் போடப்படுகின்ற பூக்கற்களை இவை நினைவூட்டுகின்றன. இவற்றில் பயன்படுத்தப்படுள்ள வெள்ளை, ஆரஞ்சு நிறங்கள் நம் கண்களுக்கு குளுமை ஊட்டக் கூடியவை. இவ்வோவியங்கள் கி. பி. 17, 18-ஆம் நூற்றூண்டினவையாக இருக்கவேண்டும். இவ்வோவியங்களின் மீது திருப்பணியின் போது கவனம் செலுத்தப்படாததால் இவை நன்றுக உள்ளன.

சோமாஸ்கந்தர் மண்டபம்

இம்மண்டபவிதானத்தில் உள்ள ஓவியங்கள் அண்மையில் நடந்த திருப்பணியின்போது பாதி திருத்தப்பட்டும், பாதி திருத்தப்படாமலும் விடப்பட்டுள்ளன. விதானத்தின் மேற்குப் பகுதியில் நடுவில் உள்ள ஓவியம் குறிப்பிடத்தக்கது. இவ்வோவியத்தின் நடுவில் சூரியன் இருகரங்களிலும் குமுதம் ஏந்தி நிற்க அவனது இருபுறமும் தேவியர் குமுதமும், லோலஹஸ்தமும் கொண்டு நிற்கின்றனர். இவர்களுக்குத் தீட்டப்பட்டுள்ள நீலம் கலந்த வெள்ளை, கருப்பு, சிவப்பு நிறங்கள் வனப்புடனுள்ளன இவர்கள் நிற்கும் பகுதி தாமரைப் பூவின் நடுவில் உள்ள பொகுட்டாகவுள்ளது. இதனை ஒட்டி விரிந்துள்ள 16 இதழ்களில் இடைக் கச்சை அணிந்து, ஒரு கரத்தில் மலரும், மருகரத்தில் வாளும், தங்கள் தோள்களில் சாய்த்துக் கொண்டுள்ள ஆண் உருவங்களும், ஒருகரத்தில் மலரும், மருகரத்தில் சாமரமும் கொண்டுள்ள பெண்களும், மாறி, மாறி இதழுக்கு ஒருவராகக் காட்சி தருகின்றனர். இவ்வுருவங்கள் மட்டும் திருத்தப்படாது, இவற்றின் பின் தோற்றங்கள் அண்மைத் திருப்பணியின் போது திருத்தப் பட்டுள்ளன. இந்த மலரமைப்பை அடுத்து சதுர அமைப்பும் அதனில் நவகிரகங்களும் காணப்படுகின்றன.

சோமாஸ்கந்தர் மண்டபத்தின் நடுப்பகுதியில் தாமரையும், அதனைச் சுற்றியுள்ள வட்டத்தில் 12 சூரியன்களும், அதனை அடுத்த

எண்பட்டைப் பகுதியில் அண்ணங்களும், சிற்பங்களாக உள்ளன. இவற்றின் மீது வண்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றிற்கு வெளியே 12 ராசிகளின் ஓவியங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை அண்மையில் நிகழ்ந்த திருப்பணியின் போது திருத்தப் பட்டு விட்டன. இவ்வோவியங்கள் தஞ்சை நாயக்கர்கள் காலத் தியவையாகலாம்.

*திருச்சுற்று மாளிகை*

ஐயாறப்பன் கோயிலில் அதிகமாக ஓவியங்கள் உள்ள பகுதி இரண்டாம் திருச்சுற்றில் உள்ள திருச்சுற்றுமாளிகையின் கிழக்கு, தெற்குச் சுவர்கள்தான். இவ்வோவியங்கள் அனைத்தும் திருவையாற்றுப் புராணங்கள் பற்றியவை. இவ்வோவியங்கள் கி. பி. 17-ஆம் நூற்றுண்டினவையாகலாம். எனினும் இவ் வோவியங்களில் பெரும்பகுதி தற்காலத் திருப்பணியின் போது திருத்தப்பட்டுவிட்டன. திருத்தப்பட்டதால் பல இடங்களில் உண்மை நிலை தெரிய வாய்ப்புக்கள் இல்லை. சில இடங்களில் பின்னணி மட்டுமே திருத்தப்பட்டுள்ளன.

தஞ்சை மன்னன் அச்சுதப்பநாயக்கனின் (கி. பி. 1577-1614) அமைச்சரான கோவிந்ததீக்ஷிதர் என்பவர் கி. பி. 1605ல் திருவையாற்றுப் புராணத்தை வடமொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்க ஆதரவுநல்கிய செய்தி நமக்கு அறியக்கிடைக்கின்றது.[1] இச்செய்தியின் மூலம் இவர் திருவை

1. "மாலிபுனல்சூழ் சோணாடு தஞ்சையிற் காத்திடுமரசர் மதியமைச்சர்
ஞெலிமறைதேர் கோவிந்த தீக்ஷதரய்யன் திருவாக்கு டைமையாலே
கலியுகத்துச் சகனாண்டு மூவைஞ்ஞூற்றிபதின் மேற்காணு மேழாய்ப்
பொலி வருடத்தையாற்றுப் புராண வடமொழி தமிழாற் புகலலுற்றேன்"

திருவையாற்றுப்புராணம், பாயிரத்தில் உள்ள பாடல் Tanjore Sarasvathi Mahal library catalouge, Vol. I page 431

யாற்றுப்பால் கொண்ட நல்மதிப்பும், சாதாரண மக்களும் இப் புராணத்தை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் தெரியவருகின்றன. இவரே திருவையாற்றுப் புராணத்தை திருவையாற்றுக் கோயிலில் ஓவியங்களாகத் தீட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கலாம் என்றும், இவ்வோவியங்கள் இவர்காலத்தியவை என்றும் எண்ண இடமிருக்கின்றது. எனினும், இவ்வோவியங்கள் அண்மையில் திருத்தப்பட்டுவிட்டதால் இவர்காலத்தில் தீட்டப் பட்டபடியே இன்றுமுள்ளன என்று கருத இடமில்லை.

இவ்வோவியங்கள் கிழக்குச்சுவற்றில் ஒன்றின்கீழ் ஒன்றாக இரண்டு வரிசையிலும், தெற்குச் சுவற்றில் மூன்று வரிசையிலும் தீட்டப்பட்டுள்ளன. கிழக்குப்பகுதியில் காவிரி, சமுத்திரராஜனை மணந்துகொள்வது, ஐயாறப்பன் பொங்கல் திருநாளில் பாரி வேட்டை என்ற விழாவில் கால்நடைகளை ஓட்டிச் செல்வது போன்ற காட்சிகள் தீட்டப்பட்டுள்ளன. தென்கிழக்கு மூலையில் சுவர்க்க, நரகக் காட்சிகள் தீட்டப்பட்டுள்ளன. சுவர்க்கம் செல்பவர்கள் தேரில் பறப்பதும், நரகம் செல்பவர்கள் செக்கிலும், எண்ணெய் கொப்பரையிலும் துன்புறுவதும் காட்டப்பட்டுள்ளன.

தென்புறச்சுவற்றில் கோயில்கள் எடுக்கும் காட்சிகளும் புனித திருநீராட்டும் காட்சிகளும் காட்டப்பட்டுள்ளன. கடை வீதி, சமையல்கட்டு, கணவன் மனைவி சண்டை, திருமணக்காட்சிகள் போன்றவை இவ்வோவியங்களிலிருந்து அறியக்கிடைக்கின்றன. சுதர்சனமகாராஜா, க்ஷர்வசித்து என்ற அசுரனுடன் போரிடும் காட்சி உயிர்த்துடிப்புடன் உள்ளது. இவ்வோவியத்தில் தற்காலத்திய திருப்பணியால் நிகழ்ந்த திருத்தங்கள் இல்லாவிடில் இது மிக அழகாக இருந்திருக்கும். ஒரு இடத்தில் சுதர்சன மகாராஜா உத்திர, தக்ஷிணகயிலாயக் கோயில்களை எடுப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. உண்மையில் வட, தென் கயிலாயக் கோயில்கள் முதலாம் இராஜராஜன், முதலாம் இராசேந்திரன் ஆகிய சோழ மன்னர்களின் தேவியரால் எடுக்கப்பட்டவை. இவ்வுண்மையை இவ்வோவியங்களை வரைந்தவர்களும், புரா

ணங்களைத் தோற்றுவித்தவர்களும் அறியவில்லை என்பது நமக்குப் புலனாகின்றது.

### தென் கயிலாயம்

தென்கயிலாய முன்மண்டப விதானத்தில் அப்பர் தொடர்பான செய்திகள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. இவற்றில் அப்பர் கயிலைக்காட்சியைக் காணுதல், அப்பூதி அடிகளது புராணம் ஆகிய ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை. இவ்வோவியங்கள் அனைத்திலும்தற்கால வண்ணவேலைகள் பார்க்கப்பட்டுள்ளதால் இவற்றின் உண்மை நிலை அறிய வாய்ப்புக்கள் இல்லை.

## உதிரிச்சிற்பங்கள்

கோயில்களிலிருந்து வெளிவந்து வழிபாடில்லாமலும், கேட்பாரற்றும் கிடக்கும் சிற்பங்களை உதிரிச் சிற்பங்கள் என்று சொல்லலாம். இவ்விதச் சிற்பங்கள் தஞ்சை மாவட்டத்தில் ஏறக்குறைய எல்லா ஊர்களிலும் காணக்கிடைக்கின்றன. திருவையாற்றில் ஐயாறப்பன் கோயிலில் காணப்படும் இவ்விதச் சிற்பங்கள் அவற்றின் கலைச் சிறப்பிற்காகவும், தனித்தன்மைக்காகவும் குறிப்பிடத்தக்கவை.

வடபுறமுள்ள தென்னந்தோப்பில் சப்த மாதர்களின் சிலைகள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. இவற்றில் வாராகி மட்டும் காணப்படவில்லை. தனித்தனியாக சுமார் மூன்றரை அடி உயர அளவில் வடிக்கப்பட்ட இவை ஒலோகமாதேவீஸ்வரக் கோயிலிலிருந்து வெளிவந்தவை. இவை முதலாம் இராஜராஜன் காலக் கலைப்பாணியை அறிவதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். அழகிய கோயிலான ஒலோகமாதேவீஸ்வரத்தில் சிற்பங்கள் அதிகம் இல்லையே என்ற குறையைப் போக்கக்கூடியவையாக இவை விளங்குகின்றன. மிகுந்த அழகுடனும் எளிய தோற்றத்துடனும் இவை வடிக்கப்பட்டு விளங்குகின்றன. இவை தவிர அமர்ந்த நிலையில் உள்ள சிவபெருமானது சிற்பம் ஒன்றும் இத்தோப்பில் கிடக்கின்றது. இதுவும் முதலாம் இராஜராஜன் காலப் படைப்

பாகும். நான்கு கரங்களில் முன்னிருகரங்கள் அபயம், வரதம் காட்டியும் பின்னிருகரங்கள் மழு, மான் கொண்டும் விளங்கு கின்றன. தலைக்குப் பின்புறத்தில் பிரபை காணப்படுகின்றது. மேலும் இங்கு மார்பளவில் உடைந்த சூரியனது சிலையின் மேல் பகுதி ஒன்றும் உள்ளது. இதனையும் முதலாம் இராஜ ராஜன் காலப்படைப்பாகவே கருதலாம்.

ஐயாறப்பன் கோயிலின் தென்புறமுள்ள தென்னந் தோப்பிலும் உதிரிச் சிற்பங்கள் காணக் கிடைக்கின்றன. இவற்றில் ஒரே கற்பலகையில் வடிக்கப்பட்ட ஒன்பது உருவங்களை உடைய சிற்பம், மக்களால் ஒன்பது பிடாரிகள் என்று வழங்கப் படுகிறது. உண்மையில் இது ஒன்பது பிடாரிகளின் சிற்பமில்லை. நடுவில் சிவன் அமர்ந்திருக்க இருபுறமும் நான்கு, நான்கு மாதர்களாக எட்டு மாதர்கள் காணப்படுகின்றனர். ஒன்பது சிற்பங்களும் அசைப்பில் ஒரே அமைப்புடையவை. அனைத்தும் இடது காலை மடக்கி, வலது காலை பிரேதத்தின் மீது ஊன்றி விளங்குகின்றன. இருகரங்களில் வலது கரத்தில் சூலமும், இடது கரத்தில் கபாலமும் உள்ளன. தலைக்குப் பின் அனைத்திற்கும் பிரபைகள் உள்ளன. இவற்றில் இரண்டாவது சிற்பம் பிராமி என்று அதன் மூன்று தலைகளைக் கொண்டும், ஆறுவது சிற்பம் வாராகி என்று அதன் முகத்தோற்றத்தைக் கொண்டும், எட்டாவ தாக உள்ள சிற்பம் சாமுண்டா என்று அதன் பரந்த முடியுடைய தலை, கோரைப் பற்கள், மார்புக் கச்சை முதலியவற்றைக் கொண்டும் அறியலாம். மற்ற சிற்பங்கள் இன்ன, இன்ன என்று அறிவது கடினமானதாகும். அனைத்தும் ஒரே அமைப்பையுடையன வாக இருந்த போதிலும் இவற்றின் முகவெட்டிலும், அணிகலன் களிலும் சிறிய அளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. சிவனது முப்புரிநூல் வலது கரத்தின் மீது சென்று பின் புறம் நோக்கிச் செல்கின்றது. தமிழகத்தில் காணப்படுகின்ற சப்தமாதர் சிற்பங்களில் சிவன் வீணாதரராகவோ, வீரபத்திரராகவோ அவற் றின் வலப்புறத்தில் காட்டப்படுவது மரபு. சப்தமாதர்களுடன் சிவபெருமான் நாட்டியமாடுவது போலவும் சிற்பங்களில் காட்டப் படுவதுண்டு. திருப்பரங்குன்றத்தில் ஆனந்தத் தாண்டவமாடுகின்ற சிவபெருமானின் இடது புறத்தில் சப்தமாதர்கள் நாட்

டியமாடும் காட்சி பிற்காலச் சுவரால் மறைக்கப்பட்டு சிறிதளவு தெரிகின்றது. இதே போன்று சிவபெருமான் நாட்டியமாட அவருடன் சப்த மாதர்கள் நாட்டியமிடும் காட்சிச் சிற்பங்கள் மேலைச் சாளுக்கியரின் கலைப்பாணியில் (கி. பி. 6-ஆம் நூற்றாண்டு) ஐஹொளேயிலும்,[1] கூர்ஜரபிரதிகாரர் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) கலைப்பாணியில் ராஜஸ்தானில் அபனேரி யிலும்,[2] அலகாபாத் அருங்காட்சியகத்திலும்[3] காணப்படுகின்றன. ஆனால் திருவையாற்றில் சிவன் நடனமாடவோ, வீணாதரராகவோ, வீரபத்திராகவோ இல்லாது மாதர்களின் நடுவில் அமர்ந்த நிலையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இச்சிற்பத்தின் கலை அமைப்பைக் கொண்டு இது முற்காலச் சோழர் கலைப் பாணியில் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் வடிக்கப்பட்டதாக எண்ணலாம். தமிழகத்தில் எட்டு மாதர்களுடன் சிவன் வீற்றி ருக்குப் படியான சிற்பம் இதுவரை வேறெங்கும் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. இதனாலும், இதன் எளிய அழகுமிக் குடைய சிற்பத்தன்மையாலும் திருவையாற்றிற்கு பெருமை சேர் கின்றது. இது தவிர இந்த தென்னந்தோப்பில் சேஷ்டாதேவி, சங்கநிதி, வீரபத்திரர், மாகேஸ்வரி, ஒரு தேவியின் சிற்பம் ஆகியவை காணப்படுகின்றன. சேஷ்டாதேவியின் சிற்பம் மிகவும் சிதைந்துள்ளது. நடுவில் உள்ள சேஷ்டாதேவியின் இடது புறத்தில் அவளது மகளும், வலது புறத்தில் மாட்டுத் தலை மகனும் தெளிவில்லாமல் தெரிகின்றனர். கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சேந்தன் திவாகரம் என்ற தமிழ் நிகண்டு இவளுக்கு முகடி, தௌவை, கலத்தி, மூதேவி, காக்கைக்கொடியள், கழுதைவாகினி, சேட்டை, கெடலணங்கு என்ற பெயர்களைக் குறிப்பிடுகின்றது. தமிழகத்தில் இவளுக் கென்று தனிப்பரிவார ஆலயங்கள் எடுக்கப்பட்டு விளங்கின.

---

1-3 Nataraja in art, thought and literature - C. Sivaramamurthi page 85, 113, 328.

# வழிபாடும் விழாக்களும்

பூசைப்பொருள்கள்

அன்றாடம் பூசைக்குத் தேவைப்படும் பொருள்கள் கோயில் கணக்குகளில் 'தினப்படி' என்று குறிப்பிடப்படுகின்றன. இவை தவிர வெள்ளிக்கிழமை போன்ற நாட்களில் அதிகப் படியாகத் தேவைப்படுகின்ற பொருள்கள் 'வார ஏறுபடி' என்றும் பதினைந்து நாட்களுக்கொரு முறை அம்மாவாசை, பிரதோஷம் போன்ற நாட்களில் தேவைப்படுகின்ற பொருள்கள் 'பக்ஷ ஏறுபடி' என்றும், மாதமொரு முறை மாதப் பிறப்பு போன்ற நாட்களில் தேவைப்படும் அதிகப்பொருள்கள் 'மாத ஏறுபடி' என்றும், திருவிழாப் போன்ற வருடமொரு முறை நிகழ்கின்ற வைபவங்களின் போது செலவாகின்ற பொருள்கள் 'வருட ஏறுபடி' என்றும் படிப்படியாக, வகை வகையாக அக்கணக்குப் புத்தகங்களிலிருந்து நாம் அறியலாம்.

அன்றாடம் என்னென்ன பொருள்கள் எந்தெந்த அளவு செலவாகின்றன என்ற விபரத்திற்கான பட்டியல் கோயில் 'உக்கிராணத்தில்' எளிதாகக் கிடைக்கக் கூடிய ஒன்று. தினமும் பூசைக்குத் தேவைப்படுகின்ற பொருள்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு, அவற்றைக் குறிப்பிட்ட அளவு தவறாமல் எடுத்துக் கொடுத்து வருவது என்பது ஒரு கலையாகும். உக்கிராணத்தில் பொருள்கள் எளிதில் எடுத்துக் கொடுக்கும் வகையில் வரிசையாக வைக்கப்பட்டிருப்பதும் கண்களுக்கு ஒரு நல்ல விருந்தாகும்.

ஐயாறப்பன் கோயிலில் தினமும் பயன்படுகின்ற தினப் படிப் பொருள்களின் பட்டியலிலிருந்து அளவுகளை நீக்கிப் பொருள் களின் பெயர்களை மட்டும் பார்த்தால் அதில், தேன், நெய், திரவியம், மஞ்சள், குங்குமம், விபூதி சந்தனம், சூடம், புனுச்சட்டம், தாசங்கம், நவதான்யம், ஸ்தபனநெல், அரிசி மாவு, திரிநூல், தீப்பெட்டி, தேங்காய், வெற்றிலை, சீவல், வாழைப்பழம், இளநீர், எலும்மிச்சம்பழம், நார்த்தம்பழம், பால்,

தயிர், புஷ்பம், அரிசி, கடலைப்பருப்பு, பச்சைப்பருப்பு, வெல்லம், சர்க்கரை, உப்பு, புளி, மிளகாய், கடுகு, ஜீரகம், மிளகு, வெந்தயம். பெருங்காயம், நல்லெண்ணெய், கடலெண்ணெய், மண்ணெண்ணெய், விறகு, இலை, காய்கறி என்று பல பொருட்கள் அடங்குகின்றன.

### கட்டளைகள்

ஐயாறப்பன் கோயிலில் பூசைப் பொருள்களுக்குத் தேவையாகும் செலவு கோயிலுக்குக்குரிய நிலங்களின் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு கோயிலை நிர்வகிக்கின்ற தருமபுரஆதீனத்தாரால் செய்யப்பட்டு வருகின்றது. இது தவிர சில குடும்பத்தினர் நிரந்தரமாகக் கட்டளைகள் ஏற்படுத்தி சில வழிபாடுகளில் பங்கு வகித்து வருகின்றனர். இவ்விதம் ஐயாறப்பன் கோயிலில் நிலவுகின்ற கட்டளைகளாவன: 1. தொண்டைமான் கட்டளை 2. மேலை அரண்மனைக் கட்டளை 3. அறம் வளர்த்தநாச்சியார் கட்டளை 4. மாஞ்ஜெஜியப்பா கட்டளை 5. பச்சையப்பமுதலியார் கட்டளை 6. குமரக் கட்டளை 7. பிரதோஷக் கட்டளை 8. மாதபூசைக் கட்டளை 9. புனுகுக்காப்புக் கட்டு கட்டளை 10. புதுக்கோயில் கட்டளை முதலியனவாகும்.

### நித்ய பூஜை

கோயில்களில் உறையும் இறைவனும் மனிதனைப்போலவே துயிலெழுந்து, நீராடி, உணவுண்டு, மக்களைக் காத்து, கலையின் பங்களை அனுபவித்து, உறங்கச் செல்வதாகக் கருதி ஆகம முறைப்படி வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. இவ்வித வழிபாடுகள் கோயில்களின் வருவாய் வசதிகளைப் பொருத்து ஆறுகாலம், நான்கு காலம், இருகாலம், ஒருகாலம் என்று நிகழ்கின்றன. ஐயாறப்பன் கோயிலில் ஐயாறப்பனுக்கும், அறம் வளர்த்த நாயகிக்கும் ஆறுகால பூசையும், வட கயிலாயம், தென் கயிலாயம் கோயில்களில் ஒருகால பூசையும் நிகழ்கின்றன. இவை காமிகாகமம் காரணாகமம் முதலிய ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஆறுகால பூசைகள் அதிகாலைச்சந்தி, காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை, இரண்டாம் காலம், அர்த்தசாமம் என்று ஆறு நேரங்களில் நிகழ்கின்றன. அதிகாலைச் சந்தியாகிய திருப்பள்ளியெழுச்சியின்போது வெண்பொங்கல் இறைவனுக்குப் படைக்கப்படுகின்றது. காலைச் சந்தியில் தயிரமுதும், உச்சிக் காலத்தில் காய்கறி, பாயசம். மோர்க்குழம்புடன் கூடிய தளிகையும், சாயரக்ஷையில் சர்க்கரைப் பொங்கலும், இரண்டாம் காலத்தில் புளியமுதும், அர்த்தசாமத்தின்போது சம்பா சாதம், பால் முதலியனவும் படைக்கப்படுகின்றன. ஒவ்வொரு காலத்திலும் இறைவனுக்குத் திருநீராட்டியும், ஆடைகள், புஷ்பங்கள் சார்த்தி அலங்கரித்தும், தீபாராதனைகள் செய்தும் வழிபடுகின்றனர்.

காலைச்சந்தியின்போது சோமாஸ்கந்தர் மண்டபத்தில் வெள்ளிப்பேழையில் உள்ள ஸ்படிக, மரகத லிங்கங்களுக்கும் ஸ்படிக அம்மனுக்கும் விசேஷ வழிபாடு நிகழ்கின்றது. பூசை வேளைகளின்போது திருவையாற்று மக்கள் தவறாது வந்து வழிபட்டு மகிழ்வது திருவையாற்றிற்கே உரிய ஒரு சிறப்பாகும்.

### நைமத்திக பூஜைகள்

தினமும் நிகழாது மாதத்தில் ஓரிருநாட்கள் நிகழும் பூஜைகளை நைமத்திக பூஜைகள் எனலாம். இவ்விதம் திருவையாற்றில் வெள்ளிக்கிழமைதோறும் மகாலக்ஷ்மியை எழுந்தருளச் செய்து வலம் வரச் செய்கின்ற வழிபாடு, பதினைந்து நாட்களுக் கொருமுறை நிகழ்கின்ற பிரதோஷம், மாதப் பிறப்பு தோறும் நிகழ்கின்ற தீர்த்தவாரி, அமாவாசைதோறும் நிகழ்கின்ற தீர்த்தவாரி, சதய, திருவாதிரை நட்சத்திர நாட்களில் தென், வட கயிலாய ஆலயங்களில் நிகழ்கின்ற வழிபாடு ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

பிரதோஷம் என்பது நந்திக்காகச் சிறப்பாக நிகழும் ஒரு வழிபாடாகும். திருவையாற்றுப் புராணத்தில் நந்திகேஸ்வரர் சிறப்புப் பெற்று, சிறப்பாக விழாக் கொண்டாடப்படுவதால் இங்கு பிரதோஷங்கள் சிறப்பாக நிகழ்கின்றன. பிரதோஷத் தன்று மாலை பூசையில் (சாயரக்ஷை) ஐயாறப்பனுக்கும், எதிரே

உள்ள நந்திக்கும் ஒரே நேரத்தில் தீபம் காட்டப்பட்டு வழிபாடு நிகழ்கின்றது. பிரதோஷமூர்த்தி எனப்படுகின்ற உமா சகித சந்திரசேகரர் செப்புத்திருமேனி நன்கு அலங்கரிக்கப்பட்டு வெள்ளி ரிஷப வாகனத்தில் ஐயாறப்பன் கோயிலினுள் வலமாக எடுத்து வரப்பட்டு வழிபடப்படுகின்றது. இத்தினத்தில் மக்கள் நந்தியின் முன்னுல் 'காப்பரிசி' படைத்து விளக்கேற்றி வழி படுகின்றனர். வார வழிபாட்டுக் கழகத்தினர் தெய்வப் பாடல்கள் பாடிய வண்ணம் வலம் வருவது சிறப்பாக நிகழ்கின்றது.

ஒவ்வொரு அம்மாவாசை, மாதப் பிறப்பு தோறும் நிகழ்கின்ற தீர்த்தவாரி என்ற வழிபாட்டில், சோமாஸ்கந்தரும் சூல தேவரும் காவேரியாற்றங்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள புஷ்யமண்டபத்தில்[1] வைக்கப்படுகின்றனர். சூலதேவரை மட்டும் ஆற்றில் புனித நீராட்டி, பிறகு இறைவனை அலங்கரித்து ஊரில் வலமாக எடுத்து வருகின்றனர்.

சூரியகிரகணம், சந்திரகிரகணம் ஆகிய நாட்களிலும் இதே போன்று தீர்த்தமாடுவது நிகழ்கின்றது. பூசைக்காலங்களின் போது கிரகணம் ஏற்படுமானுல் பூசைக்காலங்கள் கிரகணம் கழியும் வரை ஒத்தி வைக்கப்படுகின்றன.

*விழாக்கள்*

கோயில்களின் சிறப்பு அங்கு நிகழும் விழாக்களை ஒட்டியே அமைகின்றது. ஐயாறப்பன் கோயிலில் மாதந்தோறும் சில விழாக்களாக ஆண்டில் பல விழாக்கள் நிகழ்கின்றன. இவ்விழாக்களை நோக்கி அவற்றிற்கு ஆகும் செலவுகளையும் நோக்கினுல் நமக்கு பிரமிப்பாக இருக்கும். இன்றே இப்படி யிருப்பின் செல்வச் செழிப்புமிகுந்த, கோயிலைச்சார்ந்து சமுதா

1. இம் மண்டபம் கி. பி. 1596 ல் அச்சுதப்பராயர் காலத்தில் கட்டப் பட்டது. இங்குள்ள வடமொழிக் கல்வெட்டு இதை 'கல்யாணசிந்து' எனக் குறிப்பிடுகின்றது A. R. E. 426/1924

யம் விளங்கிய பண்டை நாட்களில் எவ்விதம் விழாக்கள் நிகழ்ந் திருக்கும் என்று கற்பனையாக நினைத்துப்பார்த்தால் நமது பிரமிப்பு பன்மடங்காகப் பெருகும். விழாக்களின் மூலம் மக்களுடையும் இன்பத்திற்கு அளவே இல்லை.

## சித்திரைப்பெருவிழா

இத்திருவிழா சித்திரைமாதம் சித்திரை நட்சத்திரத்துக்கு ஒன்பது தினங்கள் முன்னதாகத் தொடங்கி நிகழ்கின்றது. விழா தொடக்கத்திற்கு முன்னதாக விநாயகர் பூஜை, வாஸ்துசாந்தி, திக்பலி முதலியவை நிகழ்கின்றன. பிறகு கொடியேற்றம் நிகழ்ந்து விழா தொடங்குகின்றது.

## திக்பலி

திக்பலி நித்தியபூஜைபின்போது எல்லா கோயில்களிலும் நிகழ்கின்ற ஒன்று. நந்தியின் பின்னுல் உள்ள பலிபீடத்தின் மீது நைவேத்தியம் வைத்து பூசைசெய்து எல்லா திசாபாலர் களையும் அவ்விடத்திருந்து ஆராதித்து பிறகு வழிபாடு நிகழ்த்துவர். திருவையாற்றில் திருவிழாக்காலங்களில் கோயி லின் வெளியே அமைக்கப்படும் எட்டு திசைகளிலும் உள்ள பலி பீடங்களில் ஒவ்வொரு திசாபாலகருக்கும் தனித்தனியாக பூசை நிகழ்த்தப்படுகின்றது. இறைவனையும், அம்மையையும் எழுந் தருளச் செய்து ஒவ்வொரு திசைக்கும் எடுத்துச் செல்கின்றனர். அங்கு மந்திரம் சொல்லி பலி பீடத்தில் அத்திசை தெய்வத்தை எழுந்தருளச் செய்கின்றனர். அந்த திசாபாலகருக்குரிய குறிப் பிட்ட ராகத்தில் திருப்பதிகம் விண்ணப்பித்தும், நாதஸ்வரம் வாசித்தும், உரிய தாளத்தில் மேளம் வாசித்தும் பிறகு தீபாரா தனைக் காட்டி வழிபடுகின்றனர். இப்படி ஒவ்வொரு திசை யிலும் சுமார் 20 நிமிடங்கள் வழிபாடு நிகழ்கின்றது.

## கொடியேற்றம்

முதல்நாள் திருவிழா கொடியேற்றம், காப்புக்கட்டு (துவஜ ஆரோகனம், யக்ஞரக்ஷை) ஆகியவற்றுடன் துவங்குகின் றது. 15 மீட்டர் நீளமுள்ள வெள்ளைத்துணியில் ரிஷபம், சூலம்

ஆகியவற்றின் படங்களை வரைந்து நூல்கயிற்றினால் கொடி யேற்றி கொடிக்கம்பத்தைச் சுற்றி அந்த நீண்ட கொடியைக் கட்டுகின்றனர். இந்நிகழ்ச்சியின்போது பக்தர்கள் வேண்டு தலின்பேரில் துணிகளைக் காணிக்கையாகச் செலுத்தி மறுதினம் திரும்பப் பெறுகின்றனர். இதற்குக் கட்டணம் வசூலிக்கப்படு கின்றது.

விழாக்காலத்தில் எல்லா நாட்களிலும் காலையில் இறைவனை பல்லக்கில் எழுந்தருளச் செய்து ஊர்வலம் வரச் செய்கின்றனர். முதல்நாள் திருவிழா அன்று இரவு இறைவன் சோமாஸ்கந்தராக வெள்ளிப்படிச் சட்டத்திலும், இரண்டாம், மூன்றும் நாட்களில் சந்திரசேகரராக முறையே ஆதிசேஷ வாகனம், பூதவாகனத்திலும் காட்சி தருகின்றார். நான்காம் நாள் சோமாஸ்கந்தராக கைலாச வாகனத்தில் காட்சி தருகின்றார்.

### தன்னைத்தான் பூசித்தல்

ஐந்தாம் நாள் விழா இறைவன் தன்னைத்தானே வழி படுவதாக நிகழ்கின்றது. திருவையாற்றில் இறைவனுக்கு வழி பாடு செய்து வந்த சைவர் ஒருவர் காசிக்குச் சென்று திரும்ப வில்லை. இதனால் அவரது பூசைமுறை தவறி மற்றவர்கள் செய்ய முன்வந்தனர். இந்நிலையில் இறைவனே சைவராகத் தோன்றி வழிபாடு செய்தார். இதற்கிடையில் சைவர் காசியி லிருந்து திரும்பிவிடவே இறைவன் காட்சிதந்து மறைந்தார் என்பது புராணம்.[1] இச்செய்தியை திருவாசகத்தில் கீர்த்தி திருவகவலில் மாணிக்கவாசகர் "ஐயாறதனிற் சைவனாகியும்"[2] என்று குறிப்பதிலிருந்து அறியலாம்.

இந்நாளில் ஐயாறப்பன் ஆஸ்தான மண்டபத்தில் எழுந் தருளுகின்றான். ஐயாற்றுடன் தொடர்புடைய மற்ற ஆறு ஊர்களின் இறைவர்களும் இத்தினத்தில் இங்கு எழுந்தருளு

---

1. தருமபுர ஆதீன வெளியீடு எண் 202, பக்கம் 17, 1949.
2. கீர்த்தித்திருவகவல் அடி எண் 85.

கின்றனர். கோயிலில் உள்ள ஸ்படிக, மரகத லிங்கங்களை வைத்து இறைவனை வழிபடுவதாய்ச் சொல்கின்றனர். இத்தினத்தில் சைவர்கள் இம்மண்டபத்தில் வரிசையாக அமர அவர்களுக்கு உணவு படைத்து மகேஸ்வர பூஜை நிகழ்கின்றது. ஏனைய ஊர் இறைவர்கள் சீவிகைகளிலும் இவ்வூர் பஞ்ச மூர்த்திகள் வெள்ளி ரிஷப வாகனம், மூஷிகவாகனம், கமலாசனம் ஆகியவற்றிலும் காட்சி தருகின்றனர்.

ஆறும் நாள் இறைவன் யானை வாகனத்திலும் இறைவி அன்னவாகனத்திலும் காட்சிதருகின்றனர். ஏழாம் நாள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு மாடுகளால் இழுக்கப்படும் கோ ரதக்காட்சி வெகு சிறப்பாக நிகழ்கின்றது.

## தேர்த்திருவிழா

ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழா நிகழ்கின்றது. ஐயாறப்பன் கோயிலில் மூன்று மரத்தேர்கள் உள்ளன. இவை ஐயாறப்பன், அம்மன், சுப்பிரமணியருக்காக ஆனவை. ஏனைய தெய்வங்கள் சகடைகளின் மீது தற்காலிகமாக அமைக்கப்படும் தேர்களில் எழுந்தருளுகின்றன. ஐயாறப்பன் தேர் சுமார் 20' உயரமுடையது. இதனில் பலவித சிற்பங்கள் விளங்குகின்றன. சிவபெருமானின் பலவிதத் தோற்றங்களைக் காட்டும் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை, சிற்பங்களின் உருவ அமைதியையும், சில அரசகுலத்தினர் சிற்பங்களைக் கொண்டும் இத்தேர் கி.பி. 17-ஆம் நூற்றுண்டினதென்றும் தஞ்சை நாயக்க மன்னர்களின் படைப்பு என்றும் கருதலாம்.[1] அம்மன்தேர் சுமார் 15' உயரமுள்ளது. இதில் ஆறு சக்கரங்கள் உள்ளன. இதனில் காளி, மகிஷாசுரமர்த்தினி போன்ற சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. இத்தேர் ஐயாறப்பன் தேருக்குச் சற்று காலத்தால் பிற்பட்டதாகத்

---

1. தஞ்சை நாயக்க மன்னரான ரகுநாத நாயக்கர் (கி.பி. 1600-1634) திருவையாற்றில் தேர்த்திருவிழா நிகழ்த்தியதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

தோன்றுகிறது. தேர்களை தேர்ச்சீலைகளாலும், தொங்கல்களாலும் அலங்கரித்து நீண்ட, பருத்த கயிறுகளால் பக்தர்கள் இழுக்க ஐயாறப்பனும் பஞ்ச மூர்த்திகளும் பவனிவருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

பத்தாம்நாள் அதாவது சித்திரை நட்சத்திரத்தன்று காலையில் நடராஜப் பெருமான் காட்சிதருகின்றார், இறைவன் மணவாளக் கோலத்துடன் மஞ்சள் நீராடி தீர்த்தம் நல்குகின்றார். இரவு கொடியிறக்கம் (துவஜாவரோகணம்) நிகழ்கின்றது. இறைவன் கோயிலினுள் ஏழுமுறை வலம்வர இவ்விழா நிறைவுறுகின்றது. இதன் மறுதினம் காலையில் (பிக்ஷாடனர்) பிச்சை புகும் பெருமான் வலம் வருகின்றார்.[1] இதன் மறுதினம் ஏழூர் திருவிழா நிகழ்கின்றது.

## ஏழூர் திருவிழா

தஞ்சைப் பகுதியில் திருவையாற்றில் நிகழ்கின்ற சப்தஸ்தான விழா என்னும் ஏழூர் திருவிழா மிகச் சிறப்புடையதாகும். தியாகையர் உற்சவத்தைப் போன்றே ஸப்தஸ்தல திருவிழாவும் பெரும் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. திருவையாற்றிற்கு அருகில் உள்ள திருமழபாடியில் பங்குனி மாதத்தில் நந்திதேவர்க்குத் திருமண விழா நிகழ்ந்தபின் சித்திரை மாத பௌர்ணமியை அடுத்து வருகிற விசாக நட்சத்திரத்தில், சித்திரைத் திருவிழாவின் 12ஆம் நாள் விழாவாக இவ்விழா நிகழ்கின்றது. நந்திதேவருக்கு நடந்த திருமணத்தின்போது திருவையாற்றுடன் தொடர்புடைய மற்ற ஊர்களான திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்தானம் ஆகிய ஊர்கள் முறையே பழங்கள், திருவமுது, வேதியர்கள், மகர கண்டிகை முதலிய ஆபரணங்கள், மலர்கள், நெய் முதலியவற்றை அனுப்பி உப

1. பிக்ஷாடனர் செப்புத்திருமேனி முதலாம் இராஜராஜன் காலத்திய கலைப்பாணியில் கம்பீரமாக விளங்குகிறது.

சரித்தனர் என்றும் அவ்வூர் இறைவர்களுக்கு நன்றி சொல்ல நந்தியெம்பெருமானும் ஐயாறப்பனும் ஒவ்வொருவூருக்கும் எழுந்தருளுகின்றனர் என்பதும் புராணம்.

இத்தினத்தில் நந்தியெம்பெருமான் சுயாம்பிகையுடன் மணக்கோலத்தில் வெட்டிவேர்ச்சிவிகையிலும், ஐயாறப்பன், அறம் வளர்த்த நாயகியுடன் கண்ணாடிச்சிவிகையிலும் மேற் சொன்ன ஒவ்வொரு ஊருக்கும் எழுந்தருளுகின்றனர். அவ்வவ்வூர் இறைவர்கள் இவர்களை எதிர்கொண்டு அழைத்துச் சென்று உபசாரம் புரிந்து, இவர்களுடன் சேர்ந்து கொண்டு, அடுத்த ஊர் செல்கின்றனர். இவ்விதம் காலையில் தொடங்கி இரவில் திரு நெய்த்தானத்தை அடைந்து காவிரியாற்றில் ஏழூர் தெய்வங்களும் ஒன்றாகக் காட்சி தருவதும், வாணவேடிக்கைகள் நிகழ்வதும் சிறப்பாக இருக்கும்.

பக்தர்கள் பலர், வேண்டுதலின்பேரில் இறைவனின் பின் னால் ஏழூர்களுக்கும் சென்று வலம் வருகின்றனர். ஆண்டு தவ ராமல் ஏழூர் வலம் வருவதைப் பலர் மிகுந்த பக்தியுடன் கடைப் பிடிக்கின்றனர். பல்லக்கு சுமப்பவர்கள் காவிரி குடமுருட்டி ஆகிய ஆறுகளை இருமுறை கடந்து, நெடுந் தொலைவு சுமந்து செல்லும் களைப்பை மறப்பதற்காகப் பாடல்கள் பல பாடுகின்ற னர். அதனில் ஒன்று;

பங்குனி மாதத்திலே பச்சை இலுப்பைத் தேர் கண்டிக்கதிர்காமம்
பல்லக்குச் செப்பனிட்டு கண்டிக்கதிர்காமம்
பங்குனி மாதத்திலே பயிர் பார்க்கப்போகும் காலம்
உச்சியிலே சடையிருக்க கண்டிக்கதிர்காமம்
உள்ளங்கையிலே வேலிருக்க கண்டிக்கதிர்காமம்
ஆட்கொண்டார் சந்நதிக்கும் ஐயாறப்பன் சந்நதிக்கும்
பூசப்பட்ட துறைக்கும் கண்டிக்கதிர்காமம்
பொஜ்ப மண்டபம் கண்டிக்கதிர்காமம்
ஏழூர் சுற்றலேயே கண்டிக்கதிர்காமம்
எலேப்பாரும் கண்டியூர் கண்டியூரை விட்டிலேயோ
காணநெடுந் திருப்பந்துருத்தி கண்டிக்கதிர்காமம்
திருப்பந்துருத்தி எல்லேயிட்டு கண்டிக்கதிர்காமம்

நீ திரும்பி விடும் தில்லைஸ்தானம்
தில்லைஸ்தானம் எல்லையிட்டு கண்டிக் கதிர்காமம்
நீ திரும்பி விடும் திருவையாறு கண்டிக் கதிர்காமம்
ஆருரோகிய சிதம்பரம் இது ஐயாருகிய பஞ்சமம்.[1]

ஏழூர் இறைவர்களும் ஒன்ருகத் திருவையாற்றினுள் புகும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஏழூர்த் திரு விழாவுடன் சித்திரைப் பெருந்திருவிழா முற்றுப்பெறுகின்றது. விழா நாட்களில், பல ஊர்களிலிருந்து பல்வேறு துறையைச் சேர்ந்த அறிஞர்கள் திருவையாற்றிற்கு வந்து பல அறிய சொற் பொழிவுகள் நிகழ்த்துகின்றனர்.

**பிற விழாக்கள்**

ஆனி மாதத்தில், திருமஞ்சனம், ஆனிமூலம் ஆகிய நாட் நாட்களில் நடராஜப் பெருமானுக்குச் சிறப்பாக அபிஷேக ஆரா தனைகள் நிகழ்கின்றன. ஆடி மாதம் அப்பர் கயிலையைக் கண்ட காட்சி விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. 'கண்டேன் அவர்திருபாதம் கண்டறியாதன கண்டேன்' என்று பக்தர்கள் அப்பர் கயிலைக் காட்சி காணும் தருணத்தில் பாடி மகிழ்வது நம்மைப் பரவசப்படுத்தக் கூடிய ஒன்ருகும். ஆடி மாதத்தில் அறம் வளர்த்த நாச்சியாருக்கு உற்சவம் 10 நாட்கள் நிகழ்கின்றது. அம்மன், விழா நாட்களில் காலையில் பல்லக் கிலும், இரவில் பரி சட்டம், கிளி, அண்ணம், காமதேனு, ரிஷபம், சிம்மம் ஆகிய வாகனங்களிலும் காட்சி தருகின்ருர். கடைசி நாள் தேர்த் திருவிழா நிகழ்கின்றது. இதே மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில் சுந்தரருக்கு வழிபாடும், விழாவும் நிகழ்கின்றன. இவை தவிர நவராத்திரி, கந்தர் சஷ்டி, சூர சம்ஹாரம், சிவ ராத்திரி, விநயகர் சதுர்த்தி, மார்கழிமாத திருவாதிரை உற்சவம், பங்குனி மாதத்தில் நந்திதேவர் திருமணம், கார்த்திகை மாத காளாஷ்டமியில் கால சம்கார மூர்த்தி நல்கும் தீர்த்தத் திருவிழா ஆகியவையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

1. பாடல் வழங்கியவர் ஐயாறப்பன் கோயிலில் பணி செய்யும் பருத்திக்குடி துரைசாமி மூப்பனர்.

# கல்வெட்டுச் செய்திகள்

கல்வெட்டு என்பது கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களையும் அதன் செய்திகளையும் குறிக்கும். கல்லில் எழுத்தைப் பொறிப்பதைத் திருவையாற்றுக் கல்வெட்டுக்கள் 'சிலாலேகை செய்தல்', 'கல்லில் வெட்டுதல்' என்று குறிக்கின்றன. தமிழகத்தில் கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள கல்வெட்டுக்களின் எண்ணிக்கைக்கு ஒப்பாகவும், அவை சிதைந்தது போலவும் வேறு எங்கும் காண முடியாது.

திருவையாறைப் பொருத்த வரை எத்துனை கல்வெட்டுகள் உள்ளன என்பது முடிவாகத் தெரியவில்லை. உத்தேசமாக சுமார் 150 கல்வெட்டுகள் இருக்கலாம். கி.பி. 1894-ல் இந்திய அரசால் 44 கல்வெட்டுகள் படியெடுத்துப் படுக்கப்பட்டு அவற்றின் வாசகங்கள் தென்னிந்திய சாசனங்கள் தொகுதி 5 (South Indian Inscriptions Vol V) ல் 512 முதல் 555 முடியும் எண்களாக வெளி வந்துள்ளன. தென்னிந்திய சாசனங்கள் தொகுதி 13ல் ராஜகேசரிவர்மன் என்ற தலைப்பில் ஒரு கல்வெட்டின் வாசகம் வெளி வந்துள்ளது. கி. பி. 1918-ல் 23 கல்வெட்டுகள் படிக்கப்பட்டு அவற்றின் செய்திக் குறிப்புகள் அவ்வாண்டு அறிக்கை (Annual Report on Epigraphy 1918)யில் 135 முதல் 157 முடியும் எண்களாக வெளிவந்துள்ளன. 1924ல் ஒரு கல்வெட்டு படிக்கப்பட்டு அதன் குறிப்பு அவ்வாண்டறிக்கையில் எண் 426 ஆக வெளிவந்துள்ளது.

மெக்கென்சியின் ஓலைச்சுவடிகளில் காணப்பட்ட கல்வெட்டுகள் தென்னிந்திய கோயிற் சாசனங்கள் தொகுதி 2ல் 608-627 எண்களாக வெளிவந்துள்ளன. தருமபுர ஆதீனத்தார் தங்கள் 2 வது திருமுறை வெளியீட்டில் 2 கல்வெட்டுகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

ஐயாறப்பன் கோயில் நூலகத்தில் உள்ள திரு சுந்தரேச வாண்டையார் அவர்களது 'லோகமாதேவீஸ்வரம்' பற்றியக் கைப் பிரதியில் புதிதாகப் படிக்கப்பட்ட மூன்று கல்வெட்டு களின் வாசகங்கள் உள்ளன. இவை தவிர இந்நூல் எழுதும் போதும் சில கல்வெட்டுகள் புதிதாகப் படிக்கப்பட்டன. பல துண்டு கல்வெட்டுகளும் முடிந்த அளவு சேகரிக்கப்பட்டுள்ளன. இன்னும் வெளி வர வேண்டிய, படிக்கப்படாத கல்வெட்டுகளும் உள்ளன.

திருவையாற்றில் காணப்படும் கல்வெட்டுகளில் பல்லவர், பாண்டியர், சோழர், விஜய நகரர், தஞ்சை நாயக்கர், மராட்டியர் ஆகிய அரச குலத்தினர் குறிக்கப்படுகின்றனர். இக்கல்வெட்டுகள் சுமார் 9-ஆம் நூற்றூண்டு முதல் 14-ஆம் நூற்றூண்டு வரை யிலான காலத்தைச் சேர்ந்தவை. இக்கல்வெட்டுகளில் குறிப் பிடப்படும் செய்திகளை ஒன்று திரட்டினுல் பல அரிய அரசியல், வரலாற்று, கலாசார செய்திகள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இதுவரை வெளி வந்துள்ள கல்வெட்டுகளிலிருந்து மட்டும் செய்திகள் இங்கு கொடுக்கப்படுகின்றன. இக்கோயிலைச் சேர்ந்த எல்லா கல்வெட்டுகளும் வெளிவந்தபின் செய்திகள் விரிவடை யலாம், மாறுபடலாம்.

## மன்னர்கள்

### தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன்

இவனுடைய கல்வெட்டு ஒன்று புதிதாகப் படிக்கப் பட்டுள்ளது. இவன் தெள்ளாறு என்ற இடத்தில் பாண்டிய மன்னனை வென்றதால் இப்பெயர் பெற்றுன். இதைக் குறிப்பிடும் பாரத வெண்பா பாடிய பெருந் தேவனுர்

"தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றுனேடு
யார் வேந்தர் ஏற்பார் எதிர்"

என்கிறுர்.

இம்மன்னனைப் பற்றி இரண்டு கருத்துக்கள் உண்டு. ஒன்று இவன் 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவன், இவனே மூன்றும் நந்திவர்மன் என்பவன். மற்றொன்று இவன் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன் 4வது நந்திவர்மன் என்பது.[1]

## கோபரகேசரிவர்மன்

எப்படிப் பாண்டிய மன்னர்கள் தங்களைச் சடையவர்மன் என்றும், மாறவர்மன் என்றும் மாறி மாறி அழைத்துக் கொண்டார்களோ அப்படியே சோழர்களும் தங்களை பரகேசரி என்றும் ராஜகேசரி என்றும் மாறி மாறி அழைத்துக் கொண்டனர். திருவையாற்றில் கோபரகேசரி என்று துவங்கும் கல்வெட்டுக்கள் நான்கு உள்ளன. இவை 2, 3, 4, 14 ஆகிய ஆட்சி ஆண்டுகளைச் சேர்ந்தவை.[2] இவை யாருடையவை என்று நம்மால் உறுதியாகக் கூறமுடியாது. எனினும் இவற்றின் எழுத்துக்கள் தொன்மையாகவும், பெரியவை யாகவும் இருப்பதைக் கருத்தில் கொண்டு கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் பரகேசரி பட்டம் கொண்ட மன்னர்களுடைய தாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம். அம் மன்னர்கள் விஜயாலயன், பராந்தகன், இராஜாதித்தன், அறிஞ்சயன், உத்தமசோழன் ஆகியோராவர். இவர்களில் பராந்தகன் மதிரை கொண்ட பரகேசரி என்று அழைக்கப் படுவதுண்டு. இக்கோயிலில் மதிரை கொண்ட பரகேசரி என்று பல கல்வெட்டுக்கள் உள்ளதால் மேலே குறிப்பிட்ட கல்வெட்டுக்கள் இவனுடையதல்ல என்றும் ஏனைய மன்னர் களுடையவை என்றும் கருதலாம். விஜயாலயன் சோழப் பேரரசை நிறுவியவன் முத்தரையர்களை வென்று தஞ்சையைக் கைப்பற்றினான். தஞ்சையில் நிசும்பசூதனிக்கு கோயில் எடுத்தான்.

1. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் T. N. சுப்பிரமணியம்
2. S. I. I. Vol. V. 530, 533, 545, 551.

"மீதெலாம் எண் கொண்ட தொண்ணூற்றின்
மேலிருமூன்று புண் கொண்ட வென்றிப் புரவலன்"

என்று ஒட்டக் கூத்தர் இவனைச் சிறப்பித்துப் பாடுகின்றார்.

இராஜாதித்தன் முதலாம் பராந்தகனின் மைந்த தன். தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே போர் களத்தில் உயிர் விட்டவன். இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனுடன் தக்கோலத்தில் பொருதியபோது வீரமரணம் எற்பட்டது. எனினும் இவன் தந்தையின் ஆட்சிக் காலத்தில் தொண்டை மண்டலத்தின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்தான். பரகேசரி பட்டம் உடைய மற்றொரு மன்னனான அறிஞ்சயன் நீண்ட நாள் ஆட்சி புரிந்ததாகச் செய்திகள் இல்லை. இவன் ஆற்றூர் என்ற இடத்தில் மரண மெய்தியதால் ஆற்றூர் துஞ்சிய தேவர் என்று அழைக்கப்படுகின்றான்.

கோராஜகேசரிவர்மன்

இங்கு கோராஜகேசரிவர்மன் என்று துவங்குகின்ற கல்வெட்டுக்கள் 17 உள்ளன. இவை 5 முதல் 26 வரையிலான ஆட்சி ஆண்டுகளைக் கொண்டவை. இக்கல்வெட்டுக்களை எழுத்தமைதி கொண்டு கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்று சொல்லலாம். இந்நூற்றாண்டுகளில் ஆண்ட ராஜகேசரி பட்டமுடைய மன்னர்கள் ஆதித்தன், கண்டராதித்தன் சுந்தரசோழன் ஆகியோர் ஆவர்.

ஆதித்தசோழன் விஜயாலயனால் நிறுவப்பட்ட சோழப் பேரரசைத் தழைத்தோங்கச் செய்தவன். இவன் தொண்டை நாடு வரை வெற்றிகள் கண்டு தன் ஆட்சியைப் பரப்பியதால் தொண்டைநாடு பாவிய ராஜகேசரி என்று சிறப்பித்துப் பேசப்படுகிறான். தமிழக வரலாற்றின் திருப்பு முனையான திருப்புறம்பியம் போரில் இவன் பல்லவர்களை ஆதரித்து தமிழகத்தில் பாண்டியர் ஆட்சியை மறையச் செய்தான். நாளடைவில் பல்லவர்களையும் வெற்றி கண்டு அவர்களது ஆட்சியையும் அஸ்தமிக்கச் செய்தான். காவிரியின் இருமருங்கிலும் சிவனுக்குப் பல கற்றளிகள் எடுத்தான்.

'சோழர்காலக் கலை' என்னும் நூலை எழுதிய திரு. S. R. பாலசுப்பிரமணியம் அவர்கள் இவன் காலத்திய கோயில்களாக மொத்தம் 47 கோயில்களைக் குறிப்பிடுகின்றார். தமிழக சிற்பங்களில் மிகவும் அழகான சிற்பங்கள் உள்ள கும்பகோணம், ஸ்ரீநிவாசநல்லூர், லால்குடி, திருவேதிக்குடி பழுவூர் போன்ற கோயில்கள் இவன் காலத்தியவை.

கண்டராதித்தன் முதலாம் பராந்தகனின் இரண்டாவது மைந்தன். அண்ணன் இராஜாதித்தன் தக்கோலப் போரில் இறந்து விடவே இவன் அரசுக் கட்டிலேறினான். இவனது பட்டத்தரசி 'செம்பியன் மாதேவி' பல்வேறு இடங்களில் சிவாலயங்கள் எடுத்தும், புதுப்பித்தும் தன் சிவபக்திக்கு அழியாத சான்றுகளை விட்டுச் சென்றுள்ளாள். சுந்தரசோழன் தமிழகப் பெருமன்னன் இராஜராஜனின் தந்தை, இவன் காஞ்சி மாளிகையில் இறந்ததால் பொன் மாளிகைத் துஞ்சிய தேவர் என்று பெயர் பெற்றான்.

### மதுரை கொண்ட பரகேசரி

முதலாம் பராந்தக சோழனே மதிரை கொண்ட பரகேசரி என அழைக்கப்படுபவன். மதுரை வரை சென்று பாண்டியன் இரண்டாம் இராஜசிம்மனைத் தோற்கடித்து இலங்கைக்கு ஓடச் செய்தான். இவ்வெற்றியின் காரணமாக இவன் மதுரை கொண்ட பரகேசரி என்ற பட்டம் பெற்றான். திருவையாற்றில் இப்பட்டத்துடன் தொடங்கும் கல்வெட்டுக்கள் சுமார் 9 உள்ளன. இவை 14 முதல் 40-வது ஆட்சி ஆண்டு வரையிலானவை.[1]

### வீரபாண்டியன் தலை கொண்ட கோபரகேசரி

இவன் முதலாம் இராஜராஜனின் அண்ணன். ஆதித்த கரிகாலன் என்று அழைக்கப்பட்டவன். இவன் பல இடங்களிலும் வீரபாண்டியன் தலை கொண்ட கோபரகேசரி என்றே அழைக்கப்

1. S. I. I. Vol V 522, 524, 525, 526, 531, 532, 540, 541, 547

படுகின்றான். சிறந்த வெற்றி வீரன். பகைவர்களின் சூழ்ச்சிக்கு ஆளாகி வஞ்சகமாக கொல்லப்பட்டான். இங்குள்ள வீர பாண்டியன் தலை கொண்ட கோபரகேசரி என்று துவங்கும் கல்வெட்டில்[1] ஆட்சியாண்டுப் பகுதி கிடைக்கவில்லை.

## முதலாம் இராஜராஜன்

இவனது கல்வெட்டுக்கள் 'திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூண்டமை' என்ற மெய்க்கீர்த்தியுடன் துவங்குகின்றன. திருவையாற்றில் இச்சிறப்பு வாய்ந்த மன்னனின் கல்வெட்டுக்கள் 21-வது ஆட்சி ஆண்டு முதல் 29-வது ஆட்சியாண்டு வரை காணப்படுகின்றன. தனது ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் பல போர்க்களங்களில் வெற்றிகளைக் குவிப்பதிலும், ஆட்சி முறையில் பல சிறப்புக்களைச் செய்வதிலுமாகக் கவனத்தைச் செலுத்திய இம்மன்னனின் பிற்காலக் கல்வெட்டுக்கள் கோயில்களை முடித்துச் சிறப்புச் செய்ததைக் குறிக்கின்றன. இவனது பட்டத்தரசி லோகமாதேவி தன் கணவன் தஞ்சையில் பெரிய கோயிலை எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் தானும் ஒரு கோயிலைத் திருவையாற்றில் எடுத்துள்ளாள். அதுவே இன்று வடகயிலாயம் எனப்படும் ஒலோக மாதேவீஸ்வர மாகும்.

## முதலாம் இராஜேந்திரன் (கி.பி. 1012-1044)

இவன் முதலாம் இராஜராஜனின் மைந்தன். இவனது கல்வெட்டுக்கள் 'திருமன்னி வளர' என்ற மெய்க்கீர்த்தியுடன் துவங்குகின்றன. ஐயாறப்பன் கோயிலில் இவனது கல்வெட்டுகளை வடகயிலாயம், தென்கயிலாயம் ஆகிய கோயில்களில் காணலாம். இவை இவனது 3வது ஆட்சியாண்டு முதல் 31வது ஆட்சியாண்டு வரையிலானவை. இவனது அரசியார் பஞ்சவன் மாதேவியார் எடுப்பித்தத் திருக்கற்றளியே 'தென்கயிலாய' மாகும்.

---

1. S. I. I. Vol V 529.

### இராஜாதிராஜன் (கி.பி. 1018-54)

முதலாம் இராஜேந்திரனின் மூத்த மைந்தன். இவனது கல்வெட்டு ஒன்று வடகயிலாயத்தில் காணப்படுகின்றது. இது 'திங்களேர் தருதன்ருேங்கல் வெண்குடை' என்று துவங்கும் மெய்க்கீர்த்தியுடன் கூடிய 32வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகும்.[1] இதனில் இவனது வெற்றிகளும், சிறப்புகளும் ஆண், பெண் அதிகாரிகளும், பிள்ளேயார் ஸ்ரீவிஷ்ணுவர்த்தன தேவரும் குறிப்பிடப்படுகின்றனர்.

### இரண்டாம் இராஜேந்திரன் (கி.பி. 1051-63)

இவன் முதலாம் இராஜேந்திரனின் இரண்டாவது மைந்தன். முதலாம் மைந்தன் இராஜாதிராஜன் கொப்பத்தில் சாளுக்கியருடன் இட்ட கடும்போரில் யானேமீது மரணம் எய்தவே சிதறி ஓடிய சோழர்படைகளே ஒன்று திரட்டி, வரவிருந்த தோல்வியை வெற்றியாக மாற்றிய பெருமை இவனுக்குண்டு. இவனது வெற்றிகளேக் கூறும் சிதைந்த மெய்க்கீர்த்தியுடன் ஒரு கல்வெட்டு தென்கயிலாயத்தில் உள்ளது.[2] இது இவனது 3வது ஆட்சியாண்டைச் சேர்ந்தது.

### விக்ரம சோழன் (கி.பி. 1118-1135)

இவன் உட்கீழைக்கோபுரத்தை எடுத்தான் என்பதை உணர்த்தும் வண்ணம் அக்கோபுரத்தில் 'இத்திருக்கோபுரம் விக்ரமசோழனதே' என்ருெரு கல்வெட்டு உள்ளது.

### மூன்ரும் குலோத்துங்கன் (கி.பி. 1178-1219)

"புயல் பெருக வளம் பெருக பொய்யாத நான்மறையின்" என்று துவங்கும் மெய்க்கீர்த்தியுடன் கல்வெட்டு ஒன்று இங்குள்ளது.[3] இம்மெய்க்கீர்த்தி 3ஆம் குலோத்துங்க சோழனு

---

1. S. I. I. Vol. V, 520.
2. S. I. I. Vol. V, 512.
3. A. R. E. 142/1918. ஐயாறப்பன் கோயில் திருச்சுற்று மாளிகை மேல் அதிட்டானப் பகுதியில் உள்ளது.

டையதாகும். இவன் கி. பி. 1178 முதல் 1218 வரை ஆட்சி புரிந்தான். இங்குள்ள கல்வெட்டு இவனது 3ஆம் ஆட்சியாண் டைச் சார்ந்ததாகும். இவன் சிறந்த வெற்றி வீரன். பாண்டி யர்களை வென்று மதுரையிலும், சேரரை வென்று கருவூரிலும் முடிசூட்டிக் கொண்டு திரிபுவனதேவன் என்ற பெயர் பெற்றான். இப்பெயரின் நினைவாக கும்பகோணம் அருகில் திரிபுவனவீரேச் வரம் என்ற ஒப்பெரும் கோயிலை எடுப்பித்தான்.

*மூன்றும் இராசராசன் (கி.பி. 1218-1256)*

சோழர்களது வீழ்ச்சிக் காலத்தில் ஆட்சி புரிந்தவன். இவன் காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கனால் சிறைபிடிக்கப்பட்டு சேந்தமங்கலத்தில் சிறை வைக்கப்பட்டான். பிறகு போசள (Hoysala) மன்னன் சோமேஸ்வரனால் சிறை மீட்கப்பட்டான். ஒரு கல்வெட்டு[1] இவனது 'சீர்மன்னி' என்று துவங்கும் மெய்க் கீர்த்தியுடன் உள்ளது. ஆட்சியாண்டு தெரியவில்லை.

*பாண்டியர்*

சோழப்பேரரசு மெல்லமெல்ல வீழ்ச்சியடையவே தமிழ் நாட்டில் பாண்டியப் பேரரசு எழுச்சியுற்றது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி. 1251ல் முடிசூட்டப்பட்டு, பெரும்படை யெடுப்புக்கள் நிகழ்த்தி, பல இடங்களையும் அடிப்படுத்தினன் தளர்ச்சியடைந்திருந்த சோழப்பேரரசு வீழ்ச்சியடைந்து அவனது ஆளுகைக்குட்பட்டது. இவன் பிற்காலப் பாண்டிய மன்னர்க ளில் சிறந்தவன். இவன் ஆட்சி குமரி முதல் நெல்லூர் மாவட் டம் வரை பரவியிருந்தமையை இவனது கல்வெட்டுக்கள் அப் பகுதிகளில் பரவியிருந்தமையால் அறியலாம். இங்கு ஒரு கல் வெட்டு[2] 'கோச்சடையபன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டியதேவர்' என்று இவனைக் குறிப்பிடுகிறது. இதில் இவனது 2வது ஆட்சி ஆண்டு குறிப்பிடப்படுகிறது.

---

1. A. R. E. 145/1918
2. S. I. I. Vol V 553

## விஜயநகர மன்னர்கள்

தமிழகத்தில் பாண்டியப் பேரரசும் நலிவுற்றபோது விஜய நகர மன்னர்களது ஆளுகைக்குத் தமிழகம் இலக்காகியது. இவர்கள் தென்னகத்தின் இந்துமதக் காவலர்கள் எனப்படு வார்கள். துக்ளக் வம்சத்திற்கு அடிமையாக இருந்த ஹரிஹரர், புக்கர் என்ற இருவர் தாங்கள் கட்டாயத்தின்பேரில் தழுவியிருந்த இஸ்லாம் மதத்தை விடுத்துத் தங்களது இந்து மதத்திற்கு திரும்பி வந்து இந்து ராஜ்யத்தை ஏற்படுத்தினர். இவ்விதம் இவ்விரு வரால் தோற்றுவிக்கப்பட்டதே விஜயநகரப் பேரரசாகும். திருவையாற்றில் விஜயநகர மன்னர்களது மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன.[1] இவை சகவருடம் *1303, 1350 1480* ஆகியவற்றைக் குறிக்கின்றன. இவை கி. பி. *1381*, கி.பி. *1428*, கி.பி. *1558* ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்தவையாகும். முதற்கல்வெட்டு வீரபுக்கண்ண உடையாரின் குமாரர் வீரஸரவண உடையாருடையது. 2வது கல்வெட்டு வீரப்பிர தாப தேவராயருடையது. 3வது கல்வெட்டு சதாசிவராய ருடையது.

## தஞ்சை நாயக்கர்கள்

விஜயநகரப்பேரரசு தளர்ச்சியுற்ற காலத்தில் அதன் ஆளுநர்களாக ஏற்படுத்தப்பட்ட மதுரை, செஞ்சி, வேலூர் போன்ற மகாமண்டலேஸ்வரர்கள் பேரரசுக்கு கட்டுப்படாது சுயாட்சி நிறுவினர். ஆனல் தஞ்சை நாயக்கர்கள் விஜயநகர அரசர்களுக்கு விசுவாசம் உடையவர்களாகவே இருந்தனர். தஞ்சை நாயக்க மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சேவப்ப நாயக்கர் (கி.பி. *1530-60*) அச்சுத நாயக்கர் (கி.பி. *1560-1614*) ரகுநாத நாயக்கர் (கி.பி. *1600-1634*), விஜயராகவ நாயக்கர் (கி.பி. *1633-1673*) ஆகியோராவார்.

இவர்கள் தஞ்சைப்பகுதியில் பல்வேறு திருப்பணிகள் செய்துள்ளனர். திருவையாறு பூசப்படித்துறை மண்டபத்தில்

1. S. I. I. Vol V 552, 554, 555

உள்ள வடமொழிக் கல்வெட்டு[1] அச்சுதராயர் காலத்தியது. இந்நாயக்கர்களின் மந்திரியாக இருந்த கோவிந்தப்ப தீட்சிதர் திருவையாற்றுத் தலபுராணத்தைத் தமிழில் மொழி பெயர்க்க அதரவு நல்கியிருந்தார் என்று முன்பு கண்டோம்.

**மராட்டியர்**

திருவையாற்றுக் கல்வெட்டுக்கள் முற்றிலும் படியெடுக்கப்பட்டபின் இவர்களது கல்வெட்டுக்கள் பற்றி அறிய வாய்ப்புண்டு. திருவையாற்றில் காவிரியின் மீதுள்ள பாலம் மராட்டிய மன்னன் சிவாஜியின் செலவில் கட்டப்பட்டது.[2]

## அரச குடும்பத்தினர்

'சங்க காலத்தில் மன்னர்களும் அவர்களது குடும்பத்தினரும் வேள்விவேட்டல்' தானம் கொடுத்தல் போன்ற சமயச் சடங்குகளையே பெரிதும் மதித்தனர். முற்காலத் தமிழக மன்னர்களும் துலாபாரம், இரண்யகர்பம், கோசகஸ்ரதானம் போன்ற தானங்களில் கருத்து செலுத்தினர். ஆனல் பிற்காலத்தில் வேள்வி வேட்டல், தானமளித்தல் போன்றவற்றைக் காட்டிலும் கோயில்களுக்கு பெரும் பரிசுகள் வழங்குவதையே சிறப்பாகக் கருதினர்.[3] திருவையாறு சோழர் தலைநகரான தஞ்சைக்கு அருகில், காவிரிக் கரையில் அமைந்து, நாயன்மார்களால் சிறப்பிக்கப்பட்டு, ஒரு சிறந்த சிவஸ்தலமாக விளங்கியதால், அரச குடும்பத்தினரில்

1. A. R. E. 426/1924
2. "This Bridge was erected at the expense of His Highness Maharaja Sivagee. Raja of Tonjore A. D. 1846-47. Sir H. C. Montgomery Bart and J. E. Bishop Esq. offering residents Captain E. Lawford, Civil Engineer. His Highness has thus by tour bridge completed the communication between Tanjore and Triviar for the puplic good at an expense of 71,000 Rupees".
3. 'யாவரும் கேளிர்'—டாக்டர் இரா. நாகசாமி.

பெரும் பகுதியினர் இக்கோயிலுக்குக் கொடைகள் பல நல்கியுள்ளனர். அவர்கள் பொறித்த கல்வெட்டுக்களால் நாம் இன்று அரச குடும்பத்தினர் பலரை அறியும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

### ஆதித்தன் காலம்

இங்குள்ள இராஜகேசரி என்ற பட்டத்துடன் தொடங்கும் கல்வெட்டுக்கள் இவனுடையவைதான் என்று முடிவாகக் குறிக்க இயலவில்லை. 'சோழர் கலை'யைப் பற்றி எழுதிய திரு. S. R. பாலசுப்பிரமணியம் அவர்கள் சில கல்வெட்டுக்களை ஆதித்தனுடையவை என்று குறிக்கின்றார். ஆனால் K. A. நீலகண்டசாஸ்திரி அவர்கள் இவற்றை ராஜகேசரி என்ற தலைப்பின் கீழ் குறிக்கின்றார். அக்கல்வெட்டுக்கள் ஆதித்தனுடையவை என்று கொண்டால் சிறிது தெளிவாக இருக்கும்.

### அரசியர் இருவர்

இவனது 16வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் 'கச்சிப்பட்டு குதிரைச்சேரி அம்மாக்கனார் மகளார் சோழப் பெருமானடிகள் தேவியார் அழிசி காட்டடிகள்' என்பவர் குறிக்கப்படுகின்றார் (537/5). இவர் ஐயாறப்பனுக்கு ஒரு நொந்தா விளக்கிற்காக 30 கழஞ்சு பொன்னுக்கு ஒரு நிலத்தை விலைக்குப் பெற்று நன்கொடை கொடுத்துள்ளார். கச்சிப்பட்டு என்பது காஞ்சிபுரத்தைக் குறிக்கும். ஆதித்தசோழன் தொண்டை நாடு பாவிய ராஜகேசரி என்று அழைக்கப்படுகிறான். காஞ்சீபுரம் தொண்டை நாட்டில் அமைந்தது என்பதும், எனவே இவன் காஞ்சிபுரத்து மாப்பிள்ளை என்பதும் நோக்கத் தக்கவையாகும். இவனது 19வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் 'சோழப் பெருமானடிகள் தேவியார் . . . . . . அழுந்தூர் திருநாரண மகாதேவியார்' என்பவர் குறிக்கப்படுகிறார். இவர் ஐயாறப்பனுக்கும், சேஷ்டைக்கும், நந்தாவிளக்குகள் எரிப்பதற்காக ஆடுகள் கொடுத்துள்ளார் (538/5). இவர் ஆதித்தனின் மற்றொரு அரசி போலும்!

**காமக்கிழத்தி**

இராஜகேசரியின் 17வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு 'சோழப் பெருமானடிகள் போகியார் நியமத்து இராசமார்த் தாண்டபுரத்து நக்கன் ஐயாறடிகள்' ஐயாறப்பனுக்கு நந்தாவிளக்குக்காக முப்பது கழஞ்சு பொன் கொடுத்த தைக் குறிக்கிறது. 'சோழப் பெருமானடிகள் போகியார்' என்பது சோழ மன்னரின் ஆசை நாயகி என்று பொருள்படும் (543/5).

**மைந்தனின் தாதி**

20வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, 'கன்னரதேவரின் தாதி யாயின குறுங்கை நாட்டுக் காவிரி மங்கலத்துக் கடம்ப(ன்) விடரி' என்பவரைக் குறிக்கிறது (550/5). கன்னரதேவன் ஆதித் தனின் மைந்தனும் முதலாம் பராந்தகனின் சகோதரனும் ஆவான். இந்தத் தாதி ஐயாறப்பனுக்கு ஒரு நொந்தா விளக்கிற் காக 20 கழஞ்சு பொன்னிற்கு ஒரு நிலம் வாங்கிக் கொடுத்துள் ளார், இந்நிலம் முன் குறிப்பிட்ட அரசி அழிசி காட்டடிகள் வழங்கிய நிலத்திற்கு அருகிலேயே அமைந்திருந்தது என்பதை 'இப்பொன்னல் மயக்கிக் குடுத்த நிலத்திற்கெல்லை அழிசி காட்ட டிகள் விளக்கூச் செய்க்கு வடக்கிழக்கும்' என்ற கல்வெட்டடியால் (537/5) அறியலாம்.

**பராந்தகன் கால அரசியர்**

மதுரை கொண்டபரகேசரி என்று துவங்கும் கல்வெட்டுக் களிலிருந்து இவனது 5 அரசியர்களின் பெயர்களையும், அவர் களது சுற்றத்தார்களையும், அளித்த கொடைகளையும் அறியலாம். 1. நம்பிராட்டியார் சோழமாதேவியார் (524/5) 2. சோழப் பெருமானடிகள் தேவியார் சோழ சிகாமணியார் (525/5). 3. நம்பிராட்டியார் திரிபுவன மாதேவியார் (541/5) 4. சோழப் பெருமானடிகள் தேவியார் வளவன் மாதேவி (547/5). 5. இலாடராயர் மகளார் அறிஞ்சிகை (144/1918) ஒரு மன்னனுக்கு 5 மனைவியர் என்பது இன்றைய சூழ்நிலையில் வியப்பளிக்கலாம். ஆனல் அன்று மன்னர்கள் பல்வேறு

அரசியல் காரணங்களுக்காகப் பல அரசகுலப்பெண்களை மணந்து கொண்டனர்.

*மாமியார்கள்*

சோழசிகாமணியார் என்ற அரசியார் 'நங்குரிநங்கையார் மகளார் சோழப் பெருமானடிகள் தேவியார் சோழசிகாமணியார்' (525/5) என்று குறிப்பிடப்படுகின்றார். எனவே நங்குரிநங்கையார் என்பவர் பராந்தகனுடைய மாமியார் என்பது வெளிப்படை. 'நம்பிராட்டியார் சோழமாதேவியார் தங்களாச்சி பெருமாள் திருவரங்கி' என்று (524/5) மற்றொருவர் குறிக்கப்படுகின்றார். 'தங்களாச்சி' என்பதற்கு திருநீலகண்ட சாஸ்திரி அவர்கள் தாயார் என்று பொருள் காண்கிறார்கள். (Colms. Vol. I page 421),

*மாமனார்கள்*

அரசி வளவன் மாதேவியார் 'நிறநாயப் பாடியார் மகளார் சோழப் பெருமானடிகள் தேவியார் வளவன் மாதேவி' என்று குறிக்கப்படுகின்றார். அரசி அறிஞ்சிகை 'இலாடமாராயர் மகளார் அறிஞ்சிகை' எனக் குறிக்கப்படுகின்றார். எனவே நிறநாயப் பாடியாரும், இலாடமாராயரும் பராந்தகனின் மாமனார்கள் என்பது வெளிப்படை.

*படைத் தலைவன்*

கோபரகேசரி 14வது ஆண்டுக் கல்வெட்டில் பழுவேட்டரையன் கண்டன அமுதன் என்ற ஒருவன் ஐயாறப்பனுக்கு விளக்கு கொடுத்தச் செய்தி குறிக்கப்படுகிறது. இவன் மதுரை கொண்ட பரகேசரியான பராந்தகனின் படைத் தலைவன். பராந்தகன் இரண்டாவது முறையாக மதுரைமீது படையெடுத்த போது பாண்டியன் இலங்கை மன்னனுடைய துணையுடன் எதிர்த்து நின்றான். வெள்ளூர் என்ற இடத்தில் போர் நிகழ்ந்தது. அப்போரில் சோழர் படையைநடத்திச் சென்ற பழுவேட்டரையன் கண்டன் அமுதனால் வெற்றி கிட்டியது. இதனை கீழப்பழுவூர் கல்வெட்டின் மூலம் அறியலாம். இது மதுரைகொண்ட

பரகேசரியின் 12வது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டதாகும். பழுவேட்டரையர்கள் சோழர்களின் சிற்றரசர்கள். இவர்களது உதவியைப் பலகாலம் சோழர்கள் பெற்றிருந்தனர்.

## இரண்டு அரசியர்

யாருடையவை என்று தெளிவாக நிர்ணயிக்க முடியாத இரண்டு இராஜகேசரி கல்வெட்டுக்களில் இரு அரசிகள் குறிக்கப்படுகின்றனர். 12வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் (549/5) 'சோழப்பெருமான் பட்டகள் தேவியார் செம்பியன் மாதேவியாரான குலமாணிக்க நம்பிராட்டியார்' என்பவர் ஐயாறப்பனுக்கு ஒரு நந்தா விளக்கும், ஆடுகள் 90ம் கொடுத்தச் செய்தி குறிக்கப்படுகிறது. இவர் யார் என்பது தெரியவில்லை. கண்டராதித்த 'சோழனின் அரசி செம்பியன் மாதேவி ஆவார். ஆனால் அவருக்கு குலமாணிக்க நம்பிராட்டியார் என்று பெயர் உண்டா என்பது தெரியவில்லை. இராஜகேசரி 17வது ஆண்டுக் கல்வெட்டில் 'தேவியார் . . . . . . . . . கோலாலியார்' என்பவர் குறிக்கப்படுகின்றார் (544/5). இவரும் யாருடைய அரசியார் என்பது தெரியவில்லை. எனினும் இவர்கள் கி. பி. 9,10-ஆம் நூற்றாண்டில் ஆண்ட சோழ மன்னர்களின் அரசியர் என்பது தெளிவு.

## முதலாம் இராஜராஜன் காலம்

*பஞ்சவன்மாதேவி:* மும்முடிச்சோழன் என்றழைக்கப்பட்ட முதலாம் இராஜராஜனின் 3வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் இவனது மனைவி பஞ்சவன் மாதேவியார் ஐயாறப்பனுக்கு ஒரு வெண்சாமரம் கொடுத்தச் செய்தி குறிக்கப்படுகிறது [147/1918]. இராஜராஜசோழனின் அரசியராக தமிழகக் கல்வெட்டுக்களில் சுமார் 11 பேர் குறிக்கப்பட்டுள்ளனர்.[1]

*லோகமாதேவி:* இவள் இராஜராஜனின் அரசியருள் சிறந்தவள். இவளே இவனுடையப் பட்டத்தரசி. இவரது இயற்பெயர் தந்திசத்திவிடங்கி என்பதாகும். இவள் கங்க நாட்டைச் சேர்ந்த தெலுங்கு மன்னர் மகளாக இருக்கக்கூடும்.

1 'இராஜராஜன்' தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

தஞ்சையில் இராஜராஜன் பெரியகோயிலைக் கட்டிய காலத்தி லேயே இவளும் திருவையாற்றில் வடகயிலாயம் என்கிற லோக மாதேவீஸ்வரத்தைக் கட்டுவித்தாள். இது முழுக்க முழுக்க கற்களால் கட்டிய கற்றளி. எப்படி ராஜராஜன் கட்டிய பெரிய கோயில் அவனது பெருமைக்குத் தக்கவாறு கம்பீரத் தோற்றம் தருகிறதோ, அப்படியே பெண்மைக்கு ஏற்ற அழகோடு இக்கோ யில் விளங்குகிறது. இங்கு இவள், இராஜராஜ சோழன் காலக் கல்வெட்டுக்களிலும் இராஜேந்திர சோழன் காலக் கல்வெட்டுக் களிலும் குறிப்பிடப்படுகின்றாள்.

தஞ்சைக் கல்வெட்டில் இராஜராஜன் "தஞ்சாவூர் கூற்றத் துத் தஞ்சாவூர் நாம்எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீஸ்வர முடையார்" என்று தான் எடுத்த கோயிலைக் குறிப்பிடுவான். அதேபோல லோகமாதேவி தான் எடுப்பித்த கோயிலை "ஸ்ரீ ராஜராஜதேவர் நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியரான ஒலோகமாதேவியார் வடகரை ராஜேந்திர ஸிம்ஹ வளநாட்டுப் பொய்கை நாட்டு திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்த திருக் கற்றளி ஸ்ரீ ஒலோகமாதேவீஸ்வரம் உடையார்" என்று குறிப் பிடுகின்றார் (521/5).

இவருக்கு ஆணைகள் இடும் உரிமை இருந்தது. இதனை ". . . . திருமேனிகளுக்கும் செய்வித்த பொற்கொள்கை முதலிய திருவாபரணங்களும், திருப்பரிகலண்களும் கல்லிலே வெட்டு விக்க வென்று உடன் கூட்டத்து அதிகாரம் செய்கின்ற கோவலூ ருடையான் காடந் னூற்றெண்மனையும் அதிகாரிச்சி எருதந் குஞ்சிர மல்லியையும் அருளிச்செய்ய வெட்டின" என்ற கல்வெட்டு அடிகளால் அறியலாம் (521/5). இராஜேந்திர சோழன் காலத் திலும் இவள் அதிகாரம் செய்கின்ற அளவு மதிப்புப் பெற்றி ருந்தாள். இவனது 3வது ஆண்டு கல்வெட்டில் "ஒலோகமாதேவீஸ் வரத்து தட்டாரப்பணி செய்காணி தட்டான் சக்கடி சமுதைய னை செம்பியன் மாதேவிப் பெருந்தட்டானுக்கே கல்லில் வெட்டுக" என்று ஆணையிடுவதைப் பார்க்கலாம் (515/5).

இவர் கற்றளியை எடுத்ததோடு நில்லாது அக்கோயி லுக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்துள்ளார். அன்றாடம்

நிகழும் பூசைக்கான திருப்பரிகலன்கள், விழாக் காலங்களில் எழுந்தருள மூர்த்திகள், இறைவனுக்கு வேண்டிய பல்வேறு ஆபரணங்கள், விளக்குகள், பூசை செய்வது, கோயிலில் பல்வேறு பணிகள் செய்வது, இசைக் கருவிகள் வாசிப்பது போன்றனவற்றிற்கு பல்வேறு பணியாட்கள், கோயில் நடப்புச் செலவிற்குத் தேவையான பொருளுக்காக, நிவந்தமாகப் பல நிலங்கள் முதலியவற்றைக் கொடுத்துள்ளாள். தன் கணவன் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாட விரும்பிய இவர் லோகமாதேவீஸ்வரர்க்கு அம்மாதத்தில் 12 தினங்களை விழாக்காலமாக்கி அதற்கான 'நிவந்தமும் அளித்துள்ளதை "உடையார் திங்கள் சதய விழாப் பண்ணிரண்டினுக்கு நெல் நூற்றிருபதின் கலத்துக்கு பங்கு இரண்டும்" என்ற கல்வெட்டு வரிகளால் உணரலாம் (156/1918).[1] இவர் இக்கோயிலில் செய்து வைத்த உற்சவ மூர்த்திக்கு ஒலோகவிடங்கதேவர் (521/5) என்று பெயர். இககோயிலில் தங்கம், மணிகளை நிறுக்க உதவிய துலாக்கோலுக்கு 'ஒலோக விடங்கன்' என்று பெயர். அளக்க உதவிய உழக்கின் பெயர் "ஒலோக விடங்கன் என்னும் நாழி" (516/5).

தன்தேவி எடுத்த கோயில் ஒலோக மாதேவிஸ்வரம் ஆதலால் இராஜராஜனே இக்கோயிலுக்கு கணக்கர்கள், பண்டாரிகள், பரிசாரகம் செய்வோரான மாணிகள் ஆகியவர்களை தன் ஆணை மூலம் பல பிரம்மதேயங்களிலிருந்து அமர்த்தியுள்ளான். "திருவையாற்று ஒலோகமாதேவீஸ்வரமுடைய மகாதேவர்க்கு பண்டாரமிரண்டும் கணக்கிரண்டும் பரிசாரகஞ் செய்யும் மாணும் இந்நாட்டு பிரம்ம தேயங்களிலே இட்டுக் கொடுக்க வென்று உடையார் ராஜராஜதேவர் மொழிந்தருள"[2]

*மாமியார் கோயிலில் மருமகன் :* இராஜராஜசோழனின் பெண் மக்களில் ஒருத்தி குந்தவை. இவள் கீழைச் சாளுக்கிய மன்னன் விமலாதித்ததேவனுக்கு மணமுடிக்கப்பட்டாள். இந்த

1, 2. 'ஒலோகமாதேவீஸ்வரம்' திரு சுந்தரேசவாண்டையார்-கைப் பிரதி-கருவறை மேற்புற அதிட்டானக் கல்வெட்டுகள்.

விமலாதித்ததேவன் ஒலோகமாதேவீஸ்வரத்து மகா தேவர்க்கு கொடைகள் கொடுத்துள்ளான். இதனை "ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு 29ஆவது ஸ்ரீ விஷ்ணுவர்த்தன மஹா ராஜராகிய விமலா தித்ததேவர் வடகரை இராஜேந்த்ர ஸிம்ஹ வளநாட்டுப் பொய்கை நாட்டுத் தேவதானம் திருவையாற்று மகாதேவர்க்கு குடுத்த வெள்ளிக்கவசம் . . . . . . '(514/5) என்ற வரிகள் உணர்த்து கின்றன.

இராஜராஜனின் மகள் : இராஜராஜனுக்கு 3 பெண் மக்கள் உண்டு. திரு. K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் ஒரு கல்வெட்டைக் (663/1902) குறிப்பிட்டுக் கடைசி மகளும் இடை மகளும் குறிப்பிடப்படுவதால் இன்னொரு மகள் உண்டு என்பார்.[1] அவள் யார் என்பதற்கு இவனுடைய 22வது ஆண்டுக் கல்வெட்டு விடையளிக்கிறது. 'உடையார் ஸ்ரீராஜ ராஜதேவர் திருமகளார் அருமொழி சந்திரமல்லியரான கங்க மாதேவி ஒலோகமாதேவீஸ்வரமுடையார்க்கு குடுத்த பொன் னின் ஈச்சொப்பி'.[2] இதில் மற்றொரு செய்தியும் பொதிந்து கிடக்கிறது. எப்படிக் குந்தவை சாளுக்கிய விமலாதித்தனுக்கு மணமுடிக்கப் பட்டாளோ அப்படியே இந்த அருமொழி சந்திர மல்லி ஒரு கங்க மன்னனுக்கு மணமுடிக்கப்பட்டுள்ளாள். இதனை உணர்த்துவதே 'கங்கமாதேவி' என்பது.

சளுக்கி விமயன் : இராஜராஜனது 22-வது ஆண்டுக் கல்வெட்டு ஒன்று சளுக்கி வீமயன் என்பவனின் தேவி ஒலோக மாதேவீஸ்வரத்துக்கு நந்தா விளக்கு கொடுத்ததைக் குறிக் கிறது. இவன் யார் என்று தெரியவில்லை. முதலாம் பராந்தகன்

---

1. 'Raja Raja must have at least three daughters, because an inscription from Thiruvalanjuli mentions besides the younger Kundavai, the queen of Calukya - Vimaladitya, a middle daughter of the king called Madevadigal'.
2. 'ஒலோக மாதேவீஸ்வரம்' திரு. சுந்தரேசவாண்டையார்-கைப் பிரதி கருவறை மேற்புற அதிட்டானக் கல்வெட்டு.

காலத்தில் அடிபணிந்த, வைதும்பர்கள், பாணர்கள் எப்படி சோழர் நிர்வாகத்தில் அதிகாரிகளாகப் பங்கு பெற்ருர்களோ அப்படியே தோற்று, பங்கு பெற்ற சிற்றரசர்களின் வழி வந்ததனுக இவன் இருக்கக் கூடும். (Colas Vol. I, page 229). '. . . சளுக்கி வீ[ம]யன்றேவி வஜயன் பெற்றப்பை வீமயந் [வ]ம்ப[வைய்] திருநொந்தா விளக்கு ஒன்றுக்கு வைத்த ஆடு . . .' *(516/5).*

## முதலாம் இராஜேந்திரன் காலம்

*அரசி:* எப்படி இராஜராஜனின் தேவி ஒலோக மாதேவீஸ்வரத்தை திருவையாற்றில் எடுப்பித்தாளோ அவ்வண்ணமே அவனது மகன் இராஜேந்திரனின் தேவியான பஞ்சவன் மாதேவியும் அதே திருவையாற்றில் தென்கயிலாயம் என்ற கோயிலே எடுத்துள்ளாள். இக்கோயிலிலுள்ள இராசேந்திரனின் *31*வது ஆண்டு கல்வெட்டு ஒன்று, 'வடகரை இராசேந்திர சிங்க வள நாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்று நம்பிராட்டியார் பஞ்சவன் மாதேவி . . . . . . . . யாற்று எடுப்பித்தருளுகின்ற திருக்கற்றளி தென்கயிலாய முடையார் கோயில்' என்று குறிக்கிறது.

*மருமகன்:* இராஜேந்திரன் மைந்தன் இராஜாதிராஜன் *32*ம் ஆண்டுக் கல்வெட்டில் "பிள்ளையார் ஸ்ரீ விஷ்ணுவத்தனதேவர் தஙருளின இராஜராஜன் மாடை முந்நூறிநால் செய்த ஆறிதக்கன் செங்கழுநீர் பொற்பூ ஒன்றிஞல் பொன் இரு கழஞ்சே காலாக சேத செங்கழுநீர் பொற்பூ நூற்றைம்பதி நால் . . . " *(520/5)* என்று குறிக்கப்படுகிறது. பிள்ளையார் ஸ்ரீ விஷ்ணுவர்த்தனன் என்பவன் முதலாம் இராஜேந்திரனின் மகள் அங்கமாதேவியை மணந்தவன். இவன் கீழைச் சாளுக்கிய நாட்டு முதலாம் இராஜராஜன் எனப்படுவான். (Colas vol. I page 313) இவன் தன்நாட்டில் நிலவிய இராஜராஜன் மாடை என்ற பொற்காசுகள் *300* கொண்டு செய்த ஒரு செங்கழுநீர் பூவைத் திருத்தி *150* பூக்களாகச் செய்து கொடுத்துள்ளான்.

## இரண்டாம் இராஜேந்திரன் காலம்

அரசியும், அதிகாரிச்சியும்: இரண்டாம் இராஜேந்திரனின் 3வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (512/5) "தென்கயிலாயமுடையார் கோயில் ஆடவல்லார்க்கு நம்பிராட்டியார் த்ரைலோக்கிய முடையார் அதிகாரிச்சி முத்தான பொன்நங்கை சாத்தியருள ..." என்று குறிக்கின்றது. இதனுல் இரண்டாம் இராஜேந்திரனின் அரசி திரைலோக்கிய முடையார் என்பதும், இவளுக்கென்று பெண் அதிகாரிகள் பணிபுரிந்தனர் என்பதும், இவளுக்குத் தனி ஆணையிடும் உரிமை இருந்தது என்பதும் வெளிப்படை.

## குலோத்துங்கன் காலம்

தென்கயிலாமுடையாருக்கு ஒருவிளக்குகிற்காக 20 காசுகள் கொடுத்து அம்மங்கை நாச்சியார் ஆகிய புவனமுழுதுடையாள் வழிபட்டதை ஒரு கல்வெட்டு குறிக்கிறது (150/1918). இவர் வடசாதமங்கலத்தைச் சேர்ந்தவர் என்றும் குறிப்புள்ளது. இக்கல்வெட்டு குலோத்துங்கனின் 6வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டாகும்.

இவ்விதமாகத் திருவையாற்றில் அரச குடும்பத்தினர் மாறி, மாறி கொடைகள் நல்கி வழிபட்டு வந்ததை நோக்கின் திருவையாறு, அரச குடும்பத்தினரிடம் பெற்றிருந்த சிறப்பிடம் நன்கு விளங்குகிறது. திருவையாற்றுக் கல்வெட்டுக்கள் பல அரச குடும்பத்தினரின் பெயர்களேக் காட்டுவதால் அரச குடும்ப உறவுகள் பற்றியும் நன்கு அறிய முடிகிறது.

## ஊரும் நாட்டுப்பிரிவும்

ஒரு அரசு சிறப்பாக ஆட்சி புரிகிறது, மக்களுக்குப் பல விதத்திலும் நண்மைகள் புரிகிறது, எனின், அதன் நாடு பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பல அதிகாரிகளேக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது என்று பொருள். இப்படி நாட்டைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரிப்பதால் நிர்வாக யந்திரம் எளிதாகவும், சிறப்பாகவும் இயங்க இயலும்.

சோழப்பேரரசு கி.பி. 9ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் தோன்றி படிப்படியாகத் தனதாட்சியை தமிழகம், மற்றும் தமிழகத்திற்கு வெளியிலும் பரப்பியது. இதனுல் சோழப் பேரரசின் துவக்கத்தில் மிகக்குறைவாக இருந்த நாட்டுப் பிரிவுகள் பேரரசின் இடைக்காலத்திலும், இறுதியிலும் எண்ணிக்கையில் அதிகமாயின. புதிதாகத் தோன்றிய பிரிவுகளுக்கு அரசர்களின் பட்டங்களும், அரச குடும்பத்தினரின் பெயர்களும், பெயர்களாக வைக்கப்பட்டன.

கோட்டம், கூற்றம் அல்லது வளநாடு என்பவை ஒரு பெரிய பிரிவு. இதனுள் பல நாடுகள் அடங்கின. ஒவ்வொரு நாட்டிலும் பல ஊர்கள் அடங்கின. இவை தவிர பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் என்ற அமைப்புகள் அந்தனர்களுக்கு வழங்கிய பகுதிகளாக விளங்கின. கோயிலுக்குச் சொந்தமானவை தேவதானம் என்றழைக்கப்பட்டு விளங்கின. வணிகர்கள் வாழ்ந்த பகுதிகள் நகரங்கள் என்றழைக்கப்பட்டன. ஒரு ஊரினுள் அடங்கிய சிறு ஊர்கள் பிடாகை எனப்பட்டன.

## திருவையாறும் பிரிவும்

கி.பி. 9, 10-ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டுக்களில் திருவையாறு எவ்விதப் பிரிவிலும் குறிப்படவில்லை. "திருவையாறு" "தேவதானம் திருவையாறு" என்றுமட்டும் குறிப்பிடப்படுகிறது. முதலாம் இராஜராஜன் காலம் தொடங்கி குலோத்துங்க சோழன் காலம் வரை 'வடகரை இராஜேந்திரஸிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டுத் தேவதானம் திருவையாறு' என்று குறிப்பிடப்படுகிறது. சில கல்வெட்டுகளில் வடகரை என்பதும் தேவதானம் என்பதும் விடப்பட்டும் காணப்படுகின்றன.

குலோத்துங்கன் (1 ?) காலத்தில் இவ்வளநாட்டின் பெயர் மாற்றப்படுகிறது. 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் (150/1918) 'உலகமுழுதுடைய வளநாட்டுத் திருவையாறு என்றும், 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் 'திரிபுவன முழுதுடைய வளநாட்டு பொய்கைநாட்டுத் திருவையாறு' என்றும் குறிப்பிடப்படுகிறது.

கோச்சடையன் சுந்தரபாண்டியன் கல்வெட்டிலும், சகம் 1303ஐச் (கி. பி. 1381) சேர்ந்த வீரபுக்கண்ண உடையார் கல் வெட்டிலும் திருவையாறு 'ராஜ ராஜ வளநாட்டு பொய்கை நாட்டு தேவதானம்' என்று குறிப்பிடப்படுகின்றது.

இவ்விதம் வளநாட்டின் பெயர்கள் மாறி மாறி வந்த போதிலும் பொய்கைநாடு என்பதும், திருவையாறு என்பதும் மாறாது வழங்கி வந்தமை நோக்கற்பாலது. சுமார் கி. பி. 1596ஐச் சேர்ந்த தஞ்சை நாயக்கர் கல்வெட்டில் (426/1924) வடமொழியில் திருவையாறு 'பஞ்சநதி' என்று குறிக்கப்படுகிறது. மராட்டியர் காலத்தில் ஒரு தனி 'சுபா'வாக விளங்கிய திருவை யாறு இன்று தஞ்சை மாவட்டத்துத், தஞ்சை வட்டத்துத் திருவை யாறாக விளங்குகிறது.

## குறிக்கப்படும் பிற ஊர்களும், பிரிவுகளும்

கோப்பரகேசரி கல்வெட்டில் தென் கரை பனங்காட்டு நாட்டு ஆற்றூர் குறிக்கப்படுகிறது.

ராஜகேசரி கல்வெட்டுக்களில், ஆர்காட்டுக் கூற்றத்து கீழ் பிலாற்று பரிவண்டதுறை, தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் காளியன் கோயில், பாண்டி நாட்டு வடவூர், முருங்கை நாட்டு காவிரி மங்கலம் ஆகியவையும், நியமத்து ராஜமார்த் தாண்டபுரம், சிவபுரிநகரம், பெரும்புலியூர், ஆதபுலிகுடி, அந்தனூர் ஆகிய ஊர்களும் குறிக்கப்படுகின்றன.

மதுரை கொண்ட பரகேசரி கல்வெட்டுக்களில் திருவை யாற்றுத் தேவதானமான மருதூரும், வாணகப்பாடி தென் பெண்ணை இருங்கண்டபுரமும் (வடஆர்காடு மாவட்டம்) குறிக் கப்படுகின்றன.

முதலாம் ராஜராஜன் கல்வெட்டுக்களில் ராஜசிம்ஹ வள நாட்டுப் பொய்கை நாட்டைச் சேர்ந்த பிரம்மதேயம் ஓலோக நித்தச் சதுர்வேதிமங்கலம், நித்தவிநோதச் சதுர்வேதி

மங்கலத்து பிடாகை திருப்பத்தூர், பிரம்மதேயம் பனையூரிழைச் சேரி, பிரம்மதேயம் ஆலையூர், பிரம்மதேயம் பணிவத மங்கலம் ஆகியவையும், தேவதானம் திருமழபாடி, திருநெத்தானம் ஆகிய வையும் குறிப்பிடப்படுகின்றன. மேலும் ராசேந்திர சிம்ஹ வள நாட்டைச் சேர்ந்த தனியூர் கண்டராதித்த சதுர்வேதி மங்கலத்து பள்ளித்துறை, இவ்வளநாட்டு வெண்ணையூர், மிறை கூற்றத்து திருப்பழனம், கலவாத்தலை ஆகியவையும். இவ்வளநாட்டைச் சார்ந்த மண்ணிநாட்டு வேப்பற்றூர், விளத்தூர் நாட்டு காட்டூர் ஆகியவையும் குறிக்கப்படுகின்றன.

இவற்றில் பொய்கை நாடு என்பது இன்றைய தஞ்சை, உடையார்பாளையம் ஆகிய வட்டங்கள் அடங்கிய பகுதியாகும். மண்ணி நாடு என்பது இன்றைய கும்பகோணம் வட்டத்தில் அடங்கியது. விளத்தூர் நாடும் இன்றைய கும்பகோண வட்டத்தில் அடங்கிய பகுதியாகும்.

குலோத்துங்கன் காலக் கல்வெட்டுக்களில் விக்கிரமசோழ வள நாட்டு ஞான சமுத்திர சதுர்வேதி மங்கலம், அநபாய நல்லூர் *(146, 156/1918)* ஆகியவைகளும் கோச்சடையன் சுந்தர பாண்டியன் கல்வெட்டுக்களில் சுத்தமலி வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து பாம்புணியும், சகம் 1303 ஆண்டுக் கல்வெட்டில் பண்டிய குலாசனி வளநாட்டுச் சந்தலைக் கருப்பூரும் குறிக்கப் படுகின்றன.

## கல்வெட்டுக்களில் இறைவன் பெயர்

கல்வெட்டுக்களில் திருவையாற்று இறைவனது பெயர் திருவையாற்று மகாதேவர், திருவையாற்று மகாதேவ பட்டாரகர், திருவையாற்றடிகள், ஐய்யாறடிகள், திருவையாற்றுப் பரம மகா தேவர், பஞ்சநதிவாணன், திருவையாற்று நயினர் என்று பல வாறுகக் குறிப்பிடப்படுகின்றது.

லோகமாதேவீஸ்வரத்து இறைவனது பெயர் லோமாதே வீஸ்வரமுடைய மகாதேவர், லோகமாதேவீஸ்வரமுடையார்

என்று பெரும்பாலான கல்வெட்டுகளில் அழைக்கப்படுகிறது. இக் கோயிலைச் சேர்ந்த சோமாஸ்கந்தர் செப்புத் திருமேனி, 'ஒலோக விடங்க தேவர்' என்றும், இதன் தேவி 'ஒலோக விடங்க தேவர் நம்பிராட்டியார்' என்றும், இவர்கள் இடையில் உள்ள கந்தன், பிள்ளையார் சுப்ரமணிய தேவர் என்றும் அழைக்கப்படுகின்றனர் (521/5).

தென் கயிலாயமுடைய இறைவன் தென்கயிலாய முடையார் என்றே அழைக்கப்படுகின்றார். இங்குள்ள கல்வெட்டு அஞ்சலை உமையார், பஞ்சநதிவாணன் ஆகிய தெய்வங்களை வேவாசலைச் சேர்ந்த வாணவன் மாறயன் மீட்டதாகக் குறிக் கிறது (149/1918). இவை இக்கோயிலைச் சேர்ந்தனவா? அல்லது ஐயாறப்பன் கோயிலைச் சார்ந்தனவா? என்பது தெளிவில்லை. இக்கோயிலில் இருந்த நடராஜர் திருமேனி ஒன்றை 'ஆடவல்லான்' என்றும், இதன் அருகில் இருந்த தேவியை 'இவர் நம்பிராட்டியார்' என்றும் ஒரு கல்வெட்டுக் குறிக்கிறது (512/5)

ஐயாறப்பன் கோயிலில் இருந்த ஜேஷ்டையார் ஒரு கல் வெட்டில் குறிக்கப்படுகின்றார் (538/5). குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டுக்கள் (157/1918, 142/1918) ஆளுடைய நாச்சியார், திரிபுவன மாதேவீஸ்வரமுடையார், திருக் காமக் கோட்டமுடைய உலகுடைய நாச்சியார் ஆகிய தெய்வங்களைக் குறிக்கின்றன. இவை எவை என்பது தெரியவில்லை. இடிந்து இன்று இல்லாது போன கோயிலில் உறைந்த தெய்வங்களைக் குறிப்பவையாக இருக்கலாம்.

ஒலோகமாதேவீஸ்வரக் கல்வெட்டில் பொற் கொள்கைத் தேவர் குறிக்கப்படுகின்றார். இது சூல தேவரின் உருவம். இது முற்றிலும் பொன்னால் செய்யப்பட்டு விளங்கியது. மேலும் இக்கோயில் கல்வெட்டுக்களில் ஆடவல்லான் சண்டேசுவரர் முதலிய தெய்வங்கள் குறிக்கப்படுகின்றன (520/5).

ஐயாறப்பன் கோயிலில் உள்ள கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு (523/5) திருவையாற்று

விஷ்ணு பட்டாரகர்க்கு நொந்தா விளக்கு கொடுத்ததைக் குறிக்கிறது.

## கொடைகள்

கோயில் என்றதும் நமது நினைவிற்குத் தீபம், திருவிளக்குகள், பூஜை, அலங்காரம் முதலியவை வருகின்றன. தமிழகக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் கொடைகள் பெரும் பகுதி இவற்றிற்காக வழங்கப்பட்டவையே ஆகும். பெரும்பாலான தமிழகக் கல்வெட்டுக்கள் பூஜைக்கான செலவிற்காகத் தக்க வருவாய் உடைய நிலங்களும், தீபத்திற்குவேண்டிய நெய்க்கான கால்நடைகளும், இறைவனை அழகுபடுத்துவதற்காக அணிகலன்களும், திருப்பரிகலன்களும் கொடுக்கப்பட்டதையே குறிக்கின்றன. திருவையாற்றுக் கல்வெட்டுக்களிலும் இத்தகைய கொடைகளைக் காணலாம்.

திருவிளக்குகள் : கோயில்களில் விளக்கேற்றுவது என்பது ஒரு புனித்மான சிறப்பு மிக்க பணி. திருவையாற்றுக் கல்வெட்டுக்களில் பல்வேறு விளக்குகள் கொடையளிக்கப்பட்ட செய்திகள் காணப்படுகின்றன. நொந்தா விளக்கு, இது என்றென்றும் குறையாது எரியும் விளக்கு. இதை தூண்டா விளக்கு என்று இப்பொழுது குறிப்பிடுகின்றனர். சில கல்வெட்டுக்கள், விளக்குகள் வெள்ளியாலும், தராவாலும் செய்துகொடுக்கப்பட்டதைக் குறிக்கின்றன. 57 பலம் எடையில் ஒரு வெள்ளி விளக்கு செய்துகொடுக்கப்பட்டுள்ளது (547/5). தராநிலை விளக்குகள் 95, 300, 800 பலம் எடையில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. (525, 536, 539/5). இராஜராஜனின் தேவி லோகமாதேவி விதவிதமான விளக்குகளைக் கொடுத்துள்ளாள் (521/5). அவை 200 பலம் வரை எடையுள்ள 'ஈழச்சியில் விளக்குகள்', 320 பலம் வரை எடையுள்ள 'மலையாண்சியல் விளக்குகள்', 500 பலம் வரை எடையுள்ள 'சோழச்சியல் விளக்குகள்', 189 பலம் எடையுள்.ள 'ஆர்க்குட விளக்கு', 360 பலம் எடை

யுள்ள 'அனந்தலை விளக்கு' போன்றவையாகும். இவை அனைத்தும் தராவால் செய்யப்பட்டவை.

மலையாண்சியல், ஈழச்சியல் போன்ற வெளி நாட்டு விளக்குகளும் இராஜராஜன் பெற்ற வெற்றிகளால் சோழ நாட்டில் வழக்கத்திற்கு வந்ததை நாம் இங்கு காண்கிறோம். சோழச்சியல் விளக்கு உள் நாட்டு விளக்கு போலும். அனந்தலை விளக்கு என்பது பாம்பு தலையுடைய விளக்கு போலும். இவை தவிர மற்றொரு கல்வெட்டில் 'பஞ்சாரத்தி திருவிளக்கு' ஒன்றும் (527/5) குறிப்பிடப்படுகிறது. பஞ்சரத் திருவிளக்கு என்பது கூடுபோன்ற அமைப்புடையது.[1]

பண்டைய மக்கள் கோயிலுக்கு விளக்குகளைக் கொடுத்ததோடு மட்டும் அமையவில்லை. அவற்றை எரிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். பொதுவாக விளக்குகள் நெய்யால் எரிக்கப்பட்டன. நெய்க்காக கால் நடைகள் வழங்கப் பட்டன. திருவையாற்றுக் கல்வெட்டுக்களில், கால்நடைகளில் ஆடுகளே குறிக்கப்படுகின்றன. பெரும்பாலும் ஒரு நொந்தா விளக்கிற்காக 90, 96 ஆடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. சில கல்வெட்டுக்கள் ஒரு நொந்தா விளக்கிற்கு 23, 100, 120 ஆடுகள் கொடுக்கப்பட்டதையும் குறிக்கின்றன.

இவ்விதம் கொடுக்கப்பட்ட ஆடுகள் அனைத்தையும் கோயிலிலேயே பராமரிப்பது என்பது இயலாத ஒன்று. இவைகள் இடையர்களிடம் கொடுக்கப்படும். அவர்கள் நாள் தோறும் உழக்கு நெய் கோயிலுக்குக் கொடுத்து வருவர். விளக்கு என்றென்றும் எரிய வேண்டுமாதலால் ஆடு பெற்ற இடையன் இறந்து போனாலும், அவனது சந்ததியினர் அதைத் தொடர்ந்து செய்ய கடமைப் பட்டவர்கள் ஆவர். ஆடுகள் இறந்தோ, மூப்படைந்தோ போகலாம். அதே சமயத்தில் அவை

---

1. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் T. N. சுப்பிரமணியன் பாகம் 3 பகுதி 2.

விருத்தியும் அடையலாம். ஆனால் கொடை கொடுத்தவருக்கு அவை பொருட்டல்ல. அவர்கள் கொடுத்த ஆடுகளிலிருந்து கிடைக்கும் ஒரு குறிப்பட்ட அளவு நெய் என்றென்றும் கோயிலுக்குக் கொடுக்கப்பட வேண்டும். எனவே தான் ஆடுகள் 'சாவா மூவா பேராடு' என்று குறிக்கப்படுகின்றன.

சில கல்வெட்டுக்கள் ஆடுகளுக்குப் பதிலாகப் பொன் கொடுக்கப்பட்டதைக் குறிக்கின்றன. இப்படி கொடுக்கப்பட்ட பொன்னைக் கொண்டு ஒரு நிலம் வாங்கி அதிலிருந்து வரும் வருவாயில் நெய் வாங்கிக் கொடுத்து வந்தனர். தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் 12 கழஞ்சு பொன் கொடுத்தான். இதற்கு 10 மா நிலம் விலைக்கு வாங்கப்பட்டு, தினமும் 'மாமாத்தாண்டம்' என்ற உழக்கால் ஒரு உழக்கு நெய் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. இக்கல்வெட்டில் ஒரு நொந்தா விளக்கிற்கு 12 கழஞ்சு பொன் குறிப்பிடப்பட்ட போதிலும் பெரும்பாலான கல்வெட்டுக்களில் 30 கழஞ்சு பொன்னே கொடுக்கப்பட்டுள்ளது.

கொடுக்கப்பட்ட பொன்னுக்கு நிலம் வாங்கிக் கொடுப்பது போல இப்பொன்னை வணிகர்கள் பெற்றுக்கொண்டு அதற்குரிய வட்டிப் பணத்தில் தினமும் நெய் கொடுத்து வருவதும் ஒரு மரபு. திருவையாற்றுக் கல்வெட்டுக்கள் சில 30 கழஞ்சு பொன்னை, சிவபுரி நகரத்தார் (வணிகர்) பெற்றுக்கொண்ட செய்திகளைக் குறிக்கின்றன.

கோச்சடையன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு திருவிளக்கிற்காக நிலம் கோயிலுக்கே கொடுக்கப்பட்டதை 'திருவிளக்குப் புறமாகத் திருநாமத்துக் காணியாக குடுத்தமைக்கு . . . .' (553/5) என்று குறிக்கிறது.

அணிகலன்கள் : திருவையாற்றில் ஐயாறப்பனுக்கு வழங்கப்பட்ட அணிகலன்கள் பற்றியச் செய்திகள் கிடைக்கவில்லை. லோகமாதேவீஸ்வரத்திலும், தென் கயிலாயமுடையார் கோயிலிலும் வழங்கப்பட்ட அணிகலன்கள் பற்றிக் கல்வெட்டு

PUBLIC LIB

களில் செய்திகள் உள்ளன. லோகமாதேவீஸ்வரத்தில், லோக மாதேவி வழங்கிய அணிகலன்கள் பல அக்கோயில் கல்வெட்டால் அறியக் கிடைக்கின்றன (521/5). இவற்றில் லோகமாதேவீஸ்வர முடையாருக்கு வழங்கப்பட்டவை பின்வருமாறு :

பொற்கொள்கைத் தேவர் : இது 3723 கழஞ்சு பொன்னுல் செய்யப்பட்டிருந்தது. இரு வளையில்கள் இதனில் சேர்ந்து இருந்தன. இதனை சூலதேவர் என்று சொல்வர்.

பட்டம் : இது நெற்றியில் அணியும் மூன்று வரிகள் உள்ள திருநீற்றுப்பட்டம். 89 கழஞ்சு பொன் எடை உள்ளது.

பொற்தாமரைப் பூ : இது பத்து கழஞ்சு பொன்னுல் செய்யப்பட்டிருந்தது.

ஒலோகவிடங்க தேவர் என்னும் சோமாஸ்கந்தர் செப்புத்திரு மேனியில் உள்ள ஒலோகவிடங்கர் என்னும் சிவனுக்கு வழங்கப் பட்டவை பின்வருமாறு :

முடி : தலையில் அணியும் முடி. 108 கழஞ்சு பொன்னுல் செய்யப்பட்டிருந்தது. இதனில் மாணிக்கம் 21ம், வயிரம் 102ம், நீலம் 1ம், தருப்பு[1] 64ம், பொத்தி 79ம், வைடூரியம் 240ம், கட்டப்பட்டிருந்தன. 573 முத்துக்கள் கோர்க்கப்பட்டிருந்தன. இவற்றைக் கட்டவும், கோர்க்கவும் முறையே தங்கமும், வெள்ளியும் தகடாகவும், கம்பியாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

குதம்பைகள் : குதம்பைகள் எனப்படும் காதணிகள் இரண்டு கொடுக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் இரு கழஞ்சு பொன்னுல் செய்யப்பட்டு அவற்றில் மாணிக்கம் ஒன்றும், தருப்பு 23ம், வைடூரியம் 17ம், முத்துக்கள் 27ம் கட்டப்பட் டிருந்தன.

---

1. தருப்பு : குறைந்த விலையுள்ள ஒரு வகை வெள்ளைக்கல். தென்னிந்திய கோயிற் சாசனங்கள் T. N. சுப்பிரமணியன்.

*நாழ்க்கூட்டு :* இது ‘கம்பி ஒரணையினால் துண்டமிரண்டும் ஆணி இரண்டும் உட்படப் பொன்’ சுமார் $3\frac{1}{2}$ கழஞ்சில் செய்யப்பட்டிருந்தது.

*மாலை :* இது 27 தாலிகளுடனும், இரண்டு கண்டப் பலகையுடனும் (கழுத்தருகில் வரும் பட்டையான பகுதி), $28\frac{1}{4}$ கழஞ்சு பொன்னால் செய்யப்பட்டு அதனில் 5·7 வைரமோமங்களும், 461 தருப்புகளும், 27 பொத்திகளும் கட்டப்பட்டிருந்தன. இவற்றைக் கட்டுவதற்காக தகட்டுப் பொன் சுமார் $1\frac{3}{4}$ கழஞ்சு பயன்படுத்தப்பட்டது. இதனில் 70 முத்துக்கள் கோர்க்கப் பட்டிருந்தன.

*தனிவடம் :* 42 முத்துக்கள் கோர்த்துச் செய்யப்பட்டிருந்தது.

*திரிசரம் :* இது சரம் எனப்படுவதால் வடத்தை விட மெலிவானது எனக் கருதலாம். 308 முத்துக்கள் மூன்று சரங்களாகச் கோர்க்கப்பட்டு, இவை ஒன்று சேர்ந்து சுருண்டு விடாமல் இருக்க ‘மூன்றொன்றாக அடுக்கி விளக்கிக் கட்டின தாளிம்பம்’ இரண்டு இதில் இருந்தன. இதனில் ‘படுகண்’ ஒன்றும் இரு நுனிகளைச் சேர்க்குமிடத்தில் ‘கொக்குவாய்’ (கொக்கி) ஒன்றும் இருந்தன.

*பஞ்சசரி :* இது ஐந்து சரங்களை உடையது. இதில் 214 முத்துக்கள் கோர்க்கப்பட்டிருந்தன. இடையில் பொன்னாலாகிய இடைக் கட்டுகள் இரண்டும் ‘அஞ்சொன்றாக அடுத்து விளக்கின தாளிம்பம் இரண்டும்,’ படுகண், கொக்கு வாய்களும் இருந்தன.

*ஸ்ரீச்சந்தம் :* ஸ்ரீ சந்தம். இதனில் முகம் ஒன்றும் இடைக் கட்டு நாலும், தவளைவாய் ஒன்றும் இருந்தன. 2 கழஞ்சு, 6 மஞ்சாடி, 6 மாவில் செய்யப்பட்டது. இதில் உள்ள முகத்தில் சுமார் $\frac{1}{2}$ கழஞ்சு எடையுள்ள ‘நாயக மாணிக்கம்’ கட்டப்பட்டிருந்தது. இதில் மூன்று திருச்சனவடங்களாக 1278 முத்துக்கள் கோர்க்கப்பட்டிருந்தன.

*முத்துப்பட்டிகை:* இடையில் அணியும் முத்தால் ஆன அணி. இதில் 6 பொற் பூக்களும், நடுவில் ஒரு முகமும் இருந்தன முகத்தில் 5 பருத்த முத்துக்கள் தைக்கப்பட்டிருந்தன. இம் முத்துக்களையும் சேர்த்து இதனில் மொத்தம் 1335 முத்துக்கள் இருந்தன.

*பொற்காற்காறை:* காலில் அணியும் அணி இது கிட்டத்தட்ட 20 கழஞ்சு பொன்னால் ஆகியது.

சோமாஸ்கந்தர் செப்புத் திருமேனியில் உள்ள உமைய வளான ஒலோகவிடங்கதேவர் நம்பிராட்டியாருக்குக் கீழ் கண்ட அணிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

*முடி:* 48 கழஞ்சு பொன்னால் செய்யப்பட்டு 1 மாணிக்கம் 86 ஸ்ஃபடியோமம், 249 தருப்பு, 14 பொத்தி முதலியவைகள் கட்டப்பட்டு 799 முத்துக்கள் கோர்க்கப்பட்டிருந்தன. இவற்றைக் கட்டவும் கோர்க்கவும் பொற்தகடும், வெள்ளியும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தன.

*குதம்பைகள்:* இரண்டு காதணிகள் ஒவ்வொன்றும் சுமார் 1 கழஞ்சு பொன்னால் செய்யப்பட்டு, இதனில் 1 மாணிக்கம், 9 தருப்பு, 9 ஸ்ஃபடியோமம், 4 பொத்தி, 2 முத்துகள் இழைக்கப்பட்டிருந்தன.

*நீலத்தாலான நுழுத்து:* ஒரணையாக $1\frac{1}{2}$ கழஞ்சு அளவு பொன்னால் 2 நீலம், 5 ஸ்ஃபடியோமம், 10 தருப்பு கொண்டிருந்தது.

*முத்தின் நுழுத்து:* 2 முத்துக்களால் $1\frac{1}{2}$ கழஞ்சு பொன்னால் செய்யப்பட்டது.

*திரு:* ஒரு நாணில் 21 படுகண்கள், ஒரு கள்ளிப்பூ, திரு ஆகியவை கோர்க்கப்பட்டு இரு நுணிகள் கொக்குவாயால் பிணைக்கப்பட்டிருந்தது. இதன் எடை $2\frac{3}{4}$ கழஞ்சாகும்.

மாலை : இது 21 தாலிகளும், தாளிம்பம் 2-ம் உட்பட $18\frac{1}{4}$ கழஞ்சு பொன்னல் செய்யப்பட்டு இதனில் ஸ்வயோமம், தருப்பு, பொத்தி முதலியன கட்டப்பட்டு 57 முத்துக்கள் கோர்க்கப்பட்டிருந்தது.

தனிவடம்: 31 முத்துக்களுடன் கூடியது.

திரிசரம்: 86 முத்துக்களும், மூன்று சரங்களையும் இணைத்து அடுக்கி விளக்கிய தாளிம்பம் 2ம், படுகன் 2ம், சேர்ப்ப தற்கான கொக்கியாக கொக்குவாய் ஒன்றும் இருந்தன.

பஞ்சசரி: 5 சரங்கள், 2 தாளிம்பம், 2 படுகண்களால் இணைக்கப்பட்டு அகலமாக விளக்கிக் காட்டப்பட்டும், 186 முத்துக் களுடனும் ஒரு கொக்குவாயுடனும் இருத்தது.

முத்துவளையல் : 207, 126 முத்துக்கள் தைக்கப்பட்டு 10, 8 கழஞ்சு பொன்னல் செய்யப்பட்ட இரண்டு வளையல்கள்.

முத்துப்பட்டிகை: இது பொற்பூக்களுடன் 2 கழஞ்சு பொன்னில் செய்யப்பட்டு, 267 முத்துக்கள் கோர்க்கப்பட்டு விளங்கியது.

காற்காறை: 91 முத்துக்கள் பதித்து 7 கழஞ்சு பொன் னல் செய்யப்பட்டது.

ஓலோக விடங்கர் செப்புத் திருமேனியில் நடுவில் உள்ள கந்தரான, பிள்ளையார் சுப்ரமண்ய தேவருக்குச் செய்யப்பட்ட அணிகள் பின்வருமாறு:

முடி: சுமார் 4 கழஞ்சு பொன்னல் ஆகியது.

சுட்டி: நெற்றியில் அணியும் இது முத்துக் கோர்க்கப் பட்டது.

சூலம்: இவருக்குச் சாத்தும் சூலம் $\frac{1}{2}$ கழஞ்சு பொன்னல் ஆகியது.

இடுக்குவளையல்: இரு இடுக்கு வளையல்கள் மொத்தம் 3 கழஞ்சு பொன்னால் செய்யப்பட்டிருந்தன. சுந்தர் உருவம் மிகச்சிறியது ஆதலால் அணிகள் குறைவாகவும், வளையல் அணிய இயலாது ஆதலால் அது இடுக்கி வைக்கிற வளைய லாகவும் இருந்தது. இவை தவிர லோகமாதேவீஸ்வரரை வழி படுவதற்காக நூற்றுக்கு மேற்பட்ட பொற் பூக்களையும் லோக மாதேவி கொடுத்துள்ளார் (519/5).

சாளுக்கிய விஷ்ணுவர்த்தனதேவர் லோகமாதேவீஸ்வர முடையாருக்கு சுமார் 3 கழஞ்சு பொன்னால் செய்யப்பட்ட 150 செங்கழுநீர் பூக்களும், சண்டேஸ்வரருக்கு அணிவதற்காக $6\frac{1}{2}$ கழஞ்சு எடையில் ஒரு வஜ்ரயோகம் இணைத்து ஒரு திருவடிக் காறையும், ஆடவல்லார்க்கு 2 திருக்கால்காறை, 2 திருக்கை வளையல்களும், 1109 முத்துக்கள் கோர்த்த சரணம் முதலியவை யும் கொடுத்துள்ளார். இவை இராஜாதிராஜனின் 32, 31 ஆட்சியாண்டுகளிலும் பூர்வதேசமும், கங்கையும் கொண்ட பெரிய தேவரின் 27 வது ஆண்டிலும் கொடுக்கப்பட்டவை. தென்கயிலாயமுடையார் கோயிலில் 2ம் இராசேந்திரனின் மனைவி யின் அதிகாரிச்சியான முத்தான பொந்நங்கை என்பவர் ஆட வல்லானுக்கு திருக்கழுத்துக்கு சண்பங்காறை, திருக்கைக்கு காறை, ஆடவல்லானின் நம்பிராட்டியாருக்கு படுகண், கொக்குவாய், நாண் முதலியவை இணைந்த ஒற்றைத் தாலிமணி முதலியவை கொடுத்துள்ளார்.

19-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று மகாலட்சுமி சந் நதியில் உள்ளது. இக்கல்வெட்டில் மங்களவிலாசம் மீனாபாய் அம்மாள் கல்லிழைத்த கிள்ளட்டி, ஒட்டியானம், பொன் வங்கி முதலியவை கொடுத்ததாகச் செய்திகள் உள்ளன.

## திருப்பரிகலன்கள்

சோழர் காலத்தில் நிலவிய திருப்பரிகலன்களின் பெயர் கள் பல கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. பொன்னாலும்

வெள்ளியாலும், தராவாலும்[1] பல பரிகலன்கள் லோகமாதேவியால் லோகமாதேவீஸ்வரத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளன (521/5).

பொன்னால் ஆகியவை

*பொற்தளிகை:* படையல் பொருள்கள் வைப்பதற்காக சில அடுக்குகளேயும். அறைகளேயும் உடைய பாத்திரம். இது 448 கழஞ்சு பொன் எடையில் செய்யப்பட்டுக் கொடுக்கப்பட்டது.

*ஒட்டு வட்டில்:* தட்டு 200 கழஞ்சு எடையுள்ளது.

*மடல்:* 50 கழஞ்சு எடையுள்ளது. விபூதி வைப்பது.

*மாநவட்டில் :* முகத்தல் அளவிற்கான பாத்திரம்[2] 15 கழஞ்சு எடையில் செய்யப்பட்டது.

*சாமரக்கை:* சாமரத்தின் கைப்பிடிகள் இரண்டு 30 கழஞ்சு எடையில் செய்யப்பட்டிருந்தன.

*ஈச்சொப்பிக்கை :* இரண்டு விசிறி போன்ற அமைப்புகளின் கைப்பிடிகள். 30 கழஞ்சு பொன்னால் செய்யப்பட்டிருந்தன.

*பள்ளித்தொங்கல் மகுடம் :* அலங்காரத்திற்காகப் பயன்படும் தொங்கல் அமைப்பின் மேல், மகுடம் போல் உள்ளது. செம்பால் ஆகிய இதன் மேல் பொற் தகடு பொருத்தப்பட்டது அப்பொன்னின் எடை 120 கழஞ்சு.

வெள்ளியால் ஆனவை

*தளிகை :* படையல் பாத்திரம் 161 கழஞ்சு எடை. *மண்டை :* ஒரு பாத்திரம் 195 கழஞ்சு எடை. வெள்ளி கலசம் 1 : 100

1. எட்டுப் பாகம் செம்பும், ஐந்து பாகம் காரீயமும் சேர்த்து செய்த உலோகம் பித்தளே. — தென்னிந்திய கோயிற் சாசனங்கள். T. N. சுப்பிரமணியம்.

2. Ibid.

கழஞ்சு எடையுள்ளது. வெள்ளி கலசம் 8 : இவை விமாலாதித்தன் கொடுத்தவை. 1148 கழஞ்சு எடையுள்ளவை (514/5). சட்டுவம் : $98\frac{1}{2}$ கழஞ்சு எடை உள்ளது. கைச்சோலம் : 38 கழஞ்சு எடை உள்ளது.

**செம்பால் ஆனவை :**

தளிகை 6: 10லிருந்து 28 பலம் வரை எடையுள்ளவை, பலித்தாலம்: பூசைக்கான தாம்பாளம், 54 பலம் எடை உள்ளது. மூக்கில்லாத கை வட்டகை, செப்பு, காளம் இரண்டு, துத்துரு, கலசம், பாவைக் கண்ணடி : இக்கண்ணடி செம்பால் செய்யப்பட்டு பொன் தகடு பொருத்தப்பட்டது. இதில் பாவைகள் ஆடுவது போலவும், உடுக்கை வாசிப்பது போலவும், மத்தளம் கொட்டுவது போலவும், பாடுவது போலவும், அழகு வேலைகள் பார்க்கப்பட்டிருந்தன. இதன் எடை 80 பலமாகும்.

**தராவால் செய்யப்பட்டவை :**

கெண்டி, சங்கு கால்கள், சட்டிகால்கள், அட்டனைக்கால்கள், ஆக்கு பானைக்கால்கள் , தூப்பாத்திரம், திருச்சத்திரம், சருவம், சருவச்சட்டிகள், இலைத் தட்டுகள், சட்டுவம், காக முகிழ், தூபமணி, சேகண்டிகை, கை மணி, ஏறிமணி முதலியவையாகும்.

லோகமாதேவீஸ்வரத்தில் வழங்கப்பட்ட திருப்பரிகலன்களின் எடையை மொத்தமாகக் கண்டால்; பொன்னல் செய்யப்பட்டவையின் மொத்த எடை 953 கழஞ்சு பொன் என்றும், வெள்ளியால் ஆகியவை 1741 கழஞ்சு என்றும், செம்பால் ஆகியவை 381 பலம் என்றும், தராவால் ஆகியவை 5343 பலம் என்று அறியலாம்.

**நிலங்கள் :**

நிலக்கொடைகள் நொந்தா விளக்கிற்காகவும், திருவமுது படிக்காகவும், பிராமணர்களை உண்பிப்பதற்காகவும், பணியாளர்களுக்கு வழங்குவதற்காகவும், கோயில்களுக்கு கொடுக்கப்பட்

டன. பிராமணர்களை உண்பிப்பதற்காகக் கொடுத்த நிலக் கொடைகள் திருவையாற்றுக் கல்வெட்டுக்களில் காணப்படு கின்றன. கோராஜகேசரியின் 10-வது ஆண்டு கல்வெட்டு இறை வனுக்கு திருவமிர்துக்கும், ஒரு பிராமணனை என்றென்றும் உண்பிப்பதற்கும் கொடையாக 6 மாக்காணி நீர் நிலம் கொடுக் கப்பட்டதைக் குறிக்கிறது (523/5). கோப்பரகேசரியின் 4-வது ஆண்டுக் கல்வெட்டு தஞ்சை மாடிகை வாணிகன் ஒருவன், இரு பிராமணர்களை உண்பிப்பதற்காக நிலம் கொடுத்ததைக் குறிக் கிறது (530/5). முதலாம் பராந்தகனின் 40-வது ஆண்டுக் கல் வெட்டில் அறிஞ்சிகை என்ற இவனது தேவி ஒரு பிராமணரை உண்பிப்பதற்காக நிலம் கொடுத்ததைக் குறிப்பிடப்படுகின்றது (144/1918).

லோகமாதேவீஸ்வரத்துக் கல்வெட்டுக்கள் லோகமாதேவி பலவாருகத் திருவமுதுக்கும், பலவழிபாடுகளுக்கும், பணியாளர் களுக்கும் கொடுத்த நிலக்கொடைகளைக் குறிக்கின்றன. சில கல்வெட்டுக்களில் நிலங்கள் திருத்தியும், மாற்றியும் கொடுக்கப் பட்ட செய்திகள் காணப்படுகின்றன.

'நெய்யட்டுவதற்கு மயக்கி குடுத்த நிலம்' (527/5), 'புன் செய் திடல் கல்லி அகழி திருத்தி மயக்கி குடுத்த நிலத்திற் கெல்லை' (533/5), 'மருஊர்பாற் கொம்பல் ஏறி கல்லி கரை சுட்டு காடு வெட்டி வயக்கின நிலம் ரு வேலி' (540/5), 'மணலூர்ந்து திருவையாற்று மகாதேவர்கு . . . . . . குடுத்த நிலன் பத்துமா'. இவை தவிர சில நிலங்கள் அந்நிலங்களால் வரும் வரிகளை உட்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. 'இப்பொன் முப்பதின் கழஞ்சுக்கு இறையிலி விற்றுக் குடுத்த நிலம்' (544/5), 'இந்நிலம் எழு மாவும் எப்பேர்பட்ட இறையும் எச் சோறும் வெட்டி வேதினையும் செந்நாவெட்டியும் தேச . . . . . . . . வெட்டியும் காத்துக் குடுப்போமானோம்' (544/5). கோச் சடையன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு பலரிடம் நிலங்கள் விலைக்கு வாங்கப்பட்டு மொத்தமாக திருநாமத்துக் காணியாகக் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது (553/5).

## இறைவனுக்குப் பணிசெய்த ஊழியர்கள்

ஒலோக மாதேவீஸ்வரத்தை எடுப்பித்த ஒலோகமாதேவி கோயிலுக்கு வேண்டிய எல்லாத் தேவைகளையும் செய்துள்ளார். இவற்றைக் கல்வெட்டுக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அவ்விதம் அவளது கல்வெட்டில் ஊழியர்களும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்கும் தெளிவாகக் குறிக்கப்படுகின்றன. ஒரு பங்கு என்பது $\frac{1}{2}$ வேலி 2 மா (12 மா) என்று குறிக்கப்பட்டுள்ளது. ஊழியர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களது பங்குகள் அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ளன.

ஆர்யபோகம் (4), மாணிகள் ஆறு பேர் ($\frac{1}{2} \times 6 = 3$), திருக்கள் ($\frac{1}{2}$), பதியிலார் 32 பேர் ($1\frac{1}{2} \times 32 = 48$), நட்டுவர் (4) கரணர் (2), மெய்மட்டு (2), மோர்வியன் (2), வங்கியன் (2), வீணைக்காரன் (2), உடுக்கை வாசிப்பவன் (2), உவச்சு, தலைப் பறை, மத்தளம் 8 பேர், தாளம், கறடிகை, கண்டை 6 பேர், திமிலை, கைம்மணி, (இவர்கள் எல்லோருக்கும் $13\frac{1}{2}$), குசவன் ($\frac{1}{2}$), வண்ணத்தான் ($\frac{1}{2}$), வண்ணான் ($\frac{1}{2}$), காச்சுவன் ($\frac{1}{2}$), கொல்லன் ($\frac{1}{2}$), மரத்தச்சன் ($\frac{1}{2}$), ஊர் பறையன் ($\frac{1}{4}$), திருவாராதனை செய்வார் ($1\frac{1}{2}$).

தேவகரணத்தானுக்கு தினமும் பதக்கு நெல்லுக்காக ஒரு பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. பின் வருபவர்களுக்கு ஊதியம் நெல்லாகவே குறிக்கப்பட்டுள்ளது. நந்தவானக்குடிகள் 6 பேர், நீர் மாலிய நீர் போகட்டுவான், திருப்பள்ளித் தாமம் 3 பேர், திருமெழுகிடுவார் 4 பேர், நாயகம் செய்வான், விறகிடுவான், திருமெய்க்காப்பாளர் 2 பேர், கவரிப்பிணா 16 பேர், ஆசாரிய போகம், திருவிளக்குச் சீலையிடும் வண்ணான். இவர்களில் இசைக் கருவிகள் வாசிப்பவர்கள், நட்டவம் செய்வோர் போன்றவர்கள் காந்தர்வர்கள் என்று மொத்தமாக அழைக்கப்படுகின்றனர்.

இதுவரை மேலே குறிப்பிட்டவற்றில் ஊழியர்களின் பெயர்கள் எதுவும் குறிப்பிடவில்லை. இவர்கள் தவிர சில ஊழியர்களின் பெயரும், அவர்கள் செய்த ஊழியமும் கல்வெட்டுக்களில்

காணப்படுகின்றன. அவையாவன: ஸ்ரீகார்யம் - உடையார் உடையான் கள்வன் சோழன். தலைக்கோலி-நக்கன் அல்லியான ராஜ சூளாமணி தலைக்கோலி, நட்டுவன்-கணவதி, அரையன் அநிமொழி, வங்கிபன்-ஐயாறன் பொற்கண்டன், மோர்வியன்-விணைபாபரணன் ஐயாற்று..... சோழ குலசுந்தர பாண்டியப் பேரரையன், இக்கற்றளி செய்த தச்சாசாரியன்-எழுவடியான் காரோணனனபுவனி மாணிக்க ஆசாரியன், இக்கற்றளி செய்த தச்சன்-நக்கனச்சனன கலியுக ரம்பைப் பெருந்தச்சன், தட்டான் - சக்கடி சமுதைபனன செம்பியன் மாதேவிப் பெருந்தட்டான்.*

## பூசைகள், விழாக்கள், செலவுகள்

பூசைகளும், வழிபாடுகளும் இன்று எவ்விதம் நிகழ்கின்றன என்பதை முன்பு கண்டோம். சோழர் காலத்தில் நிகழ்ந்த பூசை முறைகளையும், விழாக்களையும், அவற்றிற்கு தேவைப்பட்ட பொருட்களுக்கான நிவந்தத்தையும் லோகமாதேவீஸ்வரத்தில் உள்ள கல்வெட்டு தெளிவாகக் குறிப்பிடுகின்றது (156/1918). இவை லோகமாதேவியால் கொடுக்கப்பட்டவையாகும்.

*நித்திய செலவுகளும், பூசைகளும்:* திருமேனிகள், திருப்பரிகலன்கள் விளக்குவதற்கான புளிக்கு தினமும்—1 நாழி நெல்.

---

*இன்று கோயிலில் பணிபுரியும் ஊழியர்கள் பின்வருமாறு:

உள்துறை: பூஜா குருக்கள், உக்கிராண கணக்கு, உள்துறை மணியம், உள்துறை உதவி மணியம், அர்ச்சனை சாஸ்திரி, ஜோஸ்யம்-அத்தியாயனம், பரிஜாரகம், பிராமண பிள்ளை, திருமஞ்சனம், திருமுறை ஆசிரியர், ஓதுவார், மெய்க்காவல், பரிவட்டம், திருமாலை-சந்தனம், புஷ்பம் சப்ளையர், விளக்கு, திருச்சன்னம், சுவாமி கோயில் காவல், அம்மன் கோயில் காவல், மணி அடித்தல், சங்கிலிவட்டா, உஷத்கால மணியம், இராக்காவல், திருவலகு, பாத்திரம் விளக்கி, மேளம், நட்டுவம், கொத்தன் நகரு.

வெளித்துறை: தண்டல் மணியம், வசூல் மணியம், தண்டல் சைக்கிள் பியூன், பட்டிக்காவல், தோட்டக்காரன், வண்டிக்காரன், யானைப்பாகன், காவாடிக்காரன் (யானைக்குத் தீனி கொண்டு வருபவன்).

அடைக்காய் அமுதுக்கு தினம் 50 வெறுங்காயாக ஆண்டுக்கு— 18,000 காய்கள், வெற்றிலைப் பாக்குக்கு தினம் $2\frac{1}{2}$ ஆக ஆண்டுக்கு 900 (இவை இரண்டிற்கும் ஆண்டுக்கு 3 காசு), பூச்சுக்கும், சீதாரிக்கும் தினமும் சந்தனம் 3 பலம், உடையார்க்குத் திருவமிர்தரிசி வேளைக்கு 1 குறுணியாக 4 வேளைக்கு (1 நாள்) 1 தூணி அரிசி, ஒலோகவிடங்கதேவர்க்கு வேளைக்கு 4 நாழியாக 3 வேளைக்கு நிசதம்—1 குறுணி 4 நாழி அரிசி, கணபதிக்கு திருவமிர்தரிசி வேளைக்கு 2 நாழியாக 3 வேளைக்கு—6 நாழி அரிசி, அப்ப அமிர்துக்கு நிசதம்—1 நாழி அரிசி, பருப்பமிர்துக்கு வேளைக்கு 1 உறியாக 4 வேளைக்கு நிசதம்—4 உறி, கறியமுது 1 வேளைக்கு 2 தூணியாக 4 வேளைக்கு நிசதம்—1 குறுணி, போனகம், பொறிக்கறியமுதுக்கு நெய் நிசதம்—1 நாழி, மிளகு—1 ஆழக்கு 2 செவிடு, தயிரமுதுக்கு தயிர்—4 நாழி, சக்கரை அமுது, அப்ப அமிர்துக்கு சக்கரை— 1 பலம், வாழைப்பழம்—8, மஞ்சள் காப்புக்கு மஞ்சள்—$\frac{1}{2}$ பலம், 20 நொந்தா விளக்குகளுக்கு —5 நாழி எண்ணெய், 40 சந்தி விளக்குகளுக்கு 3 வேளைக்கு—3 நாழி எண்ணெய், 'ஸ்ரீபலி ஒலகத்துக்கு'—4 நாழி எண்ணெய்.

மேலேகண்ட நித்திய செலவுகளை நோக்கி ஒலோகமாதேவீஸ்வரர்க்கு 4 கால பூஜையும், ஒலோகவிடங்கர், கணபதி முதலியவர்களுக்கு 3 கால பூஜையும் நிகழ்ந்ததையும், பூஜையில் சந்தனம், மஞ்சள், வெற்றிலை, அடைக்காய்அமுது, அப்ப அமிர்து, பருப்பமிர்து, போனகம், பொறிகறியமுது, தயிரமுது, சக்கரையமுது முதலியன படைக்கப்பட்டதையும் உணரலாம்.

நைமத்திக பூஜைகளும், விழாக்களும்: சங்கிரானம் தோறும் 108 கலச நீர் நீராட்டப்பட்டு வழிபடப்பட்டது. இதற்கு 60 கலம் நெல் மாணியமாக கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஸங்கிரமத்துக்கு 3 கலம் நெல்லாக 8 ஸங்கிரமங்கள் நிகழ்ந்தன. கார்த்திகை தோறும் தனித் திருவிளக்குகள் ஏற்றப்பட்டன. இதற்கு 15 கலம் நெல் மாணியமாக கொடுக்கப்பட்டுள்ளது. சித்திரை மாதத்தில் பெருவிழா நிகழ்ந்தது இதற்கு 32 காசுகள் மாணியமளிக்கப்பட்டுள்ளன. சித்திரைப் பெரு

விழாவில் கணபதியார் எழுந்தருளுவதற்காக பொறியமுதுக்காக அவல் 3 தூணி கொடுக்கப்பட்டுள்ளது. லோகமாதேவீஸ்வரம் இராஜராஜனின் தேவியால் எடுக்கப்பட்டது. ஆதலால் இராஜ ராஜன் பிறந்த திங்களில் அவனது நட்சித்திரமான சதய நட்சத்திரத்தைக் கருத்தில் கொண்டு சதயப் பெருவிழா 12 நாட்களுக்கு நிகழ்த்தப்பட்டது. இதற்காக 120 கலம் நெல் மாணியமாக வழங்கப்பட்டுள்ளது.

லோகமாதேவீஸ்வரர் கல்வெட்டுக்கள் தவிர வேறு கல்வெட்டுக்களும் சில நடைமுறைகளைக் குறிக்கின்றன. மூன்றும் இராஜராஜனின் கல்வெட்டு (145/1918) திருப்பள்ளி எழுச்சிக்காக நிவந்தம் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது. சக ஆண்டு 1480ஐச் சேர்ந்த (கி.பி. 1558) கல்வெட்டு காளத்தீஸ்வரன் பூஜைக்காக $\frac{1}{8}$ பணம் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது.

### ஓடிய வாய்க்கால்களும், நிலவகைகளும்

திருவையாறு செழிப்புள்ள ஆற்றுப் பகுதியில் அமைந்திருப்பதால் இவ்வூர்க் கல்வெட்டுக்களில் நிலங்களைப்பற்றியும், அவற்றின் எல்லைகளைப்பற்றியும் குறிக்கும்போது பல்வேறு வாய்க்கால்களின் பெயர்கள் தெரிய வருகின்றன. இவை சோழர் காலத்தில் நிலவிய நீர்பாசன வசதியைச் சிறப்புறக் காட்டுகின்றன.

இராஜகேசரியின் 17-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் இறையான் வாய்க்கால் ஒன்று குறிக்கப்படுகின்றது (544/5). 19-வது ஆண்டு கல்வெட்டில் 'அந்தனூர் பாய்ந்த தியாக முக வாய்க்கால் நின்றுபோந்த வாய்க்கால்கள்' குறிக்கப்படுகின்றன (537/5). அந்தனூர் என்ற ஊர் இப்பொழுது திருவையாற்றின் அருகில் உள்ள 'அந்தனக்குரிச்சி' என்பதாக இருக்கலாம். 20-வது ஆண்டுக் கல்வெட்டில் '(கீ)ழையாற்று குடி' வாய்க்காலும் (550/5), 21-வது ஆண்டுக் கல்வெட்டில் இடைபனங்காட்டு வாய்க்கால், மதளின் கீழ் வாய்க்கால் ஆகியவையும் குறிக்கப்படுகின்றன (535/5). கோப்பரகேசரி 3-வது ஆண்டுக் கல்வெட்டில் சத்திரம் புறத்தார் வாய்க்கால், அகக்கியான் வேலிக்கு கிழக்கோடிய வாய்க்கால்

ஆகிய இரு வாய்க்கால்கள் குறிக்கப்படுகின்றன (533/5). முதல் இராஜராஜன் 24-வது ஆண்டுக் கல்வெட்டில் ஸ்ரீகுஞ்சர மல்லி வாய்க்கால் குறிக்கப்படுகின்றது (156/1918).

நிலங்கள் : இவ்வூர்க் கல்வெட்டுக்களில் பல்வேறு வித மான நிலங்கள் குறிக்கப்படுகின்றன. அவை யாவன, நீர் நிலம் (நன்செய்), மாச்செய், விளக்குச்செய் (திருவிளக்கிற்காகக் கொடுக்கப்பட்ட கொடை நிலம்), நாற்றங்கால், தோட்டம், தெற்றி, திடல் (பொட்டல்), மணலூர்ந்து மயக்கிக் கொடுத்த நிலம், கருங்குழிசெய், மூங்கிற்செய் (மூங்கில் நிறைந்தது), ஏரி கல்லி கரை கட்டி காடு வெட்டி வயக்கின நிலம், புஞ்சை திடலை அகழி திருத்தி மயக்கிய நிலம், மசக்கல்-(பழுவேட்டரை யன் மசக்கல் என்று குறிக்கப்படுகிறது).

## அளவுகளும், பொருள் மதிப்பும்

கல்வெட்டுக்கள் பொருட்களையும், நிலங்களையும் குறிப் பிடும்பொழுது அன்று நிலவிய அளவுகளும் பொருட்களின் மதிப்புகளும் அறியக் கிடைக்கின்றன.

தங்கம், வெள்ளி, மணிகள் முதலியவை கழஞ்சு, மஞ்சாடி, மா, குன்றி போன்ற அளவுகளாலும் குடிஞைக்கல் என்றொரு கல்லாலும் நிறுக்கப்பட்டுள்ளன. ஒலோகமாதேவீஸ்வரத்தில் இவற்றை நிறுக்கப் பயன்படுத்தப்பட்ட துலாக்கோல் ஒலோக விடங்கன் என்ற பெயருடன் விளங்கியிருக்கிறது.

முகத்தல் அளவினைப் பொருத்தவரை கலம் என்பது பெரிய அளவாகத் தெரிகிறது. இது தவிர தூணி, குறுணி, செவிடு, நாழி, ஆழாக்கு, உழக்கு, உறி ஆகிய அளவுகளும் நிலவின. ஐயாறப்பன் கோயிலில் அளக்கப்பட்ட நாழி 'திருவை யாறன்' என்ற பெயருடனும், ஒலோகமாதேவீஸ்வரத்தில் 'ஒலோக விடங்கன்' என்றும் விளங்கின கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் 'மாமாத்தாண்டம்' என்று ஒரு ஆழாக்கு நிலவி யதை தெள்ளாற்றெறிந்த நந்தி கல்வெட்டால் அறிகின்றோம்.

நிலங்களை அளவிட கோல்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஒலோகமாதேவீஸ்வரக் கல்வெட்டு 'உலகளந்த கோல்' என்று அதைக் குறிப்பிடுகிறது. விஜய நகரக் கல்வெட்டு 'இராஜ விபாடன் என்னும் 18 அடிகோல்' ஒன்றைக் குறிப்பிடுகின்றது. நில அளவுகள் பற்றி ஒரு தெளிவான வாய்ப்பாடு ஒலோக மாதேவிஸ்வர கல்வெட்டிலிருந்து கிடைக்கின்றது (156/1918).

| | | |
|---|---|---|
| 100 குழி | — | 1 மா |
| 2000 குழி | — | 1 வேலி |
| 20 மா | — | 1 வேலி (அ) நிலம் |

இதே கல்வெட்டில் முகத்தல் அளவிற்கு

| | | |
|---|---|---|
| 8 நாழி | — | 1 குறுணி |
| 4 குறுணி | — | 1 தூணி |
| 3 தூணி | — | 1 கலம் |

என்ற முகத்தலளவு வாய்ப்பாட்டையும் கணக்கிட்டு அறியலாம்.

பொருள் மதிப்பு : கல்வெட்டுக்களில் வரும் செய்திகள் கொடைகள் பற்றியன ஆதலால் பொருள் மதிப்புகளும் உத்தேசமாகவும், சிறிது தாராளப் போக்குடனும் கணிக்கப்படுவது இயல்பு. எனவே பொருட்களின் மிகச்சரியான மதிப்புகள் கிடைக்காது என்ருலும் அன்று நிலவிய உத்தேசமான மதிப்புக்கள் கிடைக்கும்.

1 நொந்தா விளக்கு தினமும் எரிவதற்கு 1 உழக்கு நெய் கொடுக்கப்படுகிறது. இந்நெய்க்காக 90 ஆடுகளும் 96 ஆடுகளும், சில சமயங்களில் 100 ஆடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. சுமார் 100 ஆடுகளிலிருந்து அவற்றின் பராமரிப்புச் செலவு போக தினமும் ஒரு உழக்கு நெய் கொடுப்பது, இடையர்களுக்குக் கட்டுபடியாயிற்று என்று எண்ணலாம். ஆடுகளுக்குப் பதிலாக 30 கழஞ்சு பொன் கொடுக்கப்பட்டுள்ளது. இது கொண்டு 90 அல்லது 96 ஆடுகளின் மதிப்பு 30 கழஞ்சு பொன் என்று கருதலாம். ஒரு நந்தாவிளக்கு நாள் முழுதும் எரிவதற்கு எவ்வளவு எண்ணெய் தேவை என்பதற்கு ஒரு கல்வெட்டில்

$\frac{1}{4}$ நாழி எண்ணெய் வேண்டும் என்று குறிப்பு கிடைக்கிறது.

முப்பது கழஞ்சு பொன் கொடுக்கப்பட்ட இடங்களில் அற்காக 10 மா நீர்நிலம் கொடுக்கப்பட்டுள்ளன. இது கொண்டு 1 மா நிலம் 3 கழஞ்சு பொன்விலே என்று அறியலாம் (375/5). சில கல்வெட்டுக்களில் 30 கழஞ்சு பொன்னுக்கு 6 மா நிலமும், (544/5) $\frac{1}{4}$ நிலமும் (கி.பி. 937) குறிக்கப்படுகின்றன. இவை நிலத்தின் தரத்தைப் பொருத்து விலே மாற்றமாகவோ அல்லது பொன்னின் மதிப்பைப் பொருத்து மாற்றமாகவோ இருக்கவேண்டும். தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் கல்வெட்டில் 12 கழஞ்சு பொன்னுக்கு 10 மா நிலம் குறிக்கப்படுகிறது.

லோகமாதேவீஸ்வர கல்வெட்டுக்களில் பொருட்களின் மதிப்பு பற்றிய நல்ல விபரங்கள் கிடைக்கின்றன. ஆண்டுக்கு 750 கலம் நெல் செலவிற்காக, சுமார் $7\frac{1}{2}$ வேலி நிலம் கொடையளிக்கப்பட்டுள்ளது. 1 வேலி நிலத்தில் 100 கலம் நெல் எதிர் பார்க்கப்பட்டுள்ளது. இது 1 வேலி நிலத்தின் விளேச்சல் என்று கொள்ள முடியாது. பயிர் செய்தவருக்குப் போக மீதி கோயிலுக்கு வந்ததாக இருக்கவேண்டும். அதாவது 1 வேலி நிலத்தின் ஆண்டுக் குத்தகை 100 கலம் நெல் என்று சொல்லலாம்.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் மேலும் சில பொருள் மதிப்புகள்.

| | |
|---|---|
| 1 நாழி பருப்பு | — 3 நாழி நெல் |
| 1 ஆழாக்கு மிளகு | — 4 நாழி நெல் |
| 1 நாழி நெய் | — 1 தூணி நெல் |
| 1 நாழி தயிர் | — $2\frac{1}{4}$ நாழி நெல் |
| 1 வாழைப்பழம்1 | — $\frac{1}{2}$ நாழி நெல் |
| 1 நாழி எண்ணெய் | — 1 தூணிநெல் |
| 1 பலம் மஞ்சள் | — 2 நாழி நெல் |
| 1 காசு | — 8 கலம் நெல் |
| 1 காசு | — 60 பலம் சந்தனம் |

1. இராஜராஜனின் தஞ்சைப் பெருவுடையார் கல்வெட்டு (S I.I. Vol. II, 37) காசுக்கு 1200 வாழைப்பழங்கள் குறிப்பிடுகிறது. இங்கு 1536 வாழைப்பழங்கள் கிடைக்கின்றன.

நடைமுறையில் காசு, பொன் போன்றவைகள் நாணயங்களாக இருந்ததுபோல 'மாடை'களும் இருந்தன. இங்கு ஒரு கல்வெட்டில் ராஜராஜன் மாடை குறிக்கப்படுகின்றது (520/5). திரு K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் இது சாளுக்கிய நாட்டு மாடை என்றும் வேறுநாட்டு நாணயங்களும் சோழநாட்டில் புழக்கத்தில் இருந்தன என்றும் குறிப்பிடுகின்றார். (Colas vol. II part I page 451) இவர் குறிப்பிடுவதுபோல சோழ நாட்டு மாடை குடிஞைகல்லால் 1 கழஞ்சு பொன் எடையுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் சாளுக்கிய நாட்டு ராஜராஜன் மாடை 1·38 கழஞ்சு எடை உள்ளது. விமலாதித்ததேவனுக்கு இராஜராஜன் என்ற பெயர் உண்டு.

கி.பி. 1428 ஐச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் வரிவிகிதம் குறிப்பிடப்படுகிறது. கார் பாசனம் பயிர் செய்யும் நிலத்துக்கு கடமை காசு 15 வராகன் பொன். கடமை காணிக்கைக்கு 40 கலம் நெல் (554/5). மற்றொரு விஜயநகரக் கல்வெட்டில் பணம், மாப்பணம், பொன் முதலிய நாணயங்கள் குறிக்கப்படுகின்றன. சுமார் கி.பி. 1001ல் நிலத்தின் விலை என்ன? என்பதனை ஒரு கல்வெட்டுக் குறிக்கின்றது (518/5). 'விலைப்பொருள் வேலி நூற்றுக் கழஞ்சு பொன்னாக'. அதாவது 1 வேலியின் விலை 100 கழஞ்சு பொன்.

## சிறப்புச் செய்திகள்

*நிலவிற்பனை :* ஓலோக மாதேவி ஐயாறப்பன் கோயிலுக்குச் சொந்தமான நிலம் ஒன்றை விலைக்கு வாங்கி லோகமாதேவீஸ்வரத்துக்குக் கொடுத்துள்ளார். நிலம் வாங்கிய விதம் நிலம் விற்ற விபரமும் மிகத் தெளிவாக இன்றைய நடைமுறையில் உள்ள பதிவுப் பத்திரங்களைப் போல காணப்படுகின்றன (518/5). நிலம் ஒரு கோயிலிலிருந்து மற்றொரு கோயிலுக்கு விற்கப்படுவதால் இரு கோயில்களைச் சேர்ந்த சண்டிகேஸ்வரர்களிடையே இந்த விற்பனை நிகழ்கிறது. கணக்குகள் சிவன் கோயில்களில் சண்டிகேஸ்வரராலும் திருமால் கோயில்

களில் சேனுபதியாலும் நிர்வகிக்கப்படுவது மரபு. இவர்கள் பெயர்களாலேயே கொடைகள் கொடுக்கப்பட்டன. இக்கல்வெட்டில் "திருவையாற்று இருந்தருளின திரிபுவனசண்டே . . . . . . . தேவகன்மிகளோம் விற்றுக் குடுத்த நில விலையாவனம்" என்றும் "ஒலோகமாதேவீஸ்வரத்து மஹாதேவகந்மிகளுக்கு விற்றுக்குக் குடுத்த நிலமாவது" என்றும் குறிப்பிடப்படுவதிலிருந்து இதனை உணரலாம். நிலத்தின் எல்லைகள் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றன. கல்வெட்டுப் பகுதியிலிருந்து அந்த நிலத்தின் சுற்றுப்புரத்தைத் தெளிவாக அறியலாம். நிலத்தை விற்கும்போது அந்நிலத்திற்குரிய உரிமைகள் அனைத்தும் சேர்த்துக் கொடுக்கப்படுகின்றன.

"உண்ணிலம் ஒழிவின்றி இந்நிலத்தில் அகப்பட்ட மேனேக்கின மரமும் கீனேக்கிய கிணறும், உடும்போடி ஆமை தவழ்ந்ததெப்பெறபட்டதும் காராண்மை மீகாட்சியும் புகுவழி புகவும், பொது வழி போதவும், பாயும் வழி பாயவும், வரும் வழி வரவும் இந்த நிலத்தால் வந்த கன்று மெய் பாழும் பெறுவதாகவும் குலையும் குரம்பும் செய்யாததாகவும் இந் நிலத்தில் வந்தது மணம் புகுதவும் பிணம் போகவும் சுடுகாடு பெறுவதாகவும்" என்று அந்நிலம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சொல்லப்படுகின்றன.

நிலத்தின் விலை: "விலைப்பொருள் வேலி நூற்றுக் கழஞ்சு பொன்னல் இந்நிலத்தால் வந்த பொன் முன்னூற்று எழு கழஞ்சே ஒன்பது மஞ்சாடி". "இப்பொன் முன்னூற்றெழுகழஞ்சே ஒன்பது மஞ்சாடி பொன்னும் ஆவணக்களறியே கைச்செல்ல அறம் கொண்டு விலைக்கு அறவிற்று பொருள் அறக் கொண்டு விலையாவனம் செய்து குடுத்தோம்". இந்த உறுதி மொழி மூலையல்லாது வேறெதுவும் செல்லாது என்பதை "இதுவேய் பொருள் மாவுறுதிப் பொருட் சில வோலை", "வேறுகாட்டக் கடவரல்லாதாராகவும்". இப்படி எழுதிய சாசனத்தில் இது என் எழுத்து என்று சிலரும், இபபடி அறிவேன் என்று சாட்சியாகச் சிலரும் கையெழுத்திட்டுள்ளனர்.

*நயமதநஸ்வாமிகள் :* முதலாம் பராந்தகனது *31, 40*வது ஆண்டுக் கல்வெட்டுக்களில் "திருவையாற்று பிரானுர் நயமதன ஸ்வாமிகள்" சிஷ்யர்கள் குறிக்கப்படுகின்றனர். இவரது பெயரில் ஏதாவது ஒரு நிறுவனம் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இவரது சிஷ்ய பிரசிஷ்ய வர்க்கத்தாரிடம் ஐயாறப்ப னுக்குத் திருவமிர்துக்குப் போக மீதி 5 வேலி நிலத்திலிருந்து வரும் வருவாய் கொடுக்கப்பட்டு 'சிவஜோமி(கி)களை' உண்பிக்கச் செய்யப்பட்டுள்ளது *(540, 531/5.)*

*பெண் அதிகாரிகள் :* சோழர் காலத்தில் பெண்கள் சம உரிமை பெற்றிருந்தனர் என்பதோடு அவர்கள் அதிகாரி களாகவும் அரசிற்குப் பணியாற்றியுள்ளார்கள் என்பதனையும் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். ஓலோகமாதேவி இட்ட ஆணையை எருதன் குஞ்சரமல்லி என்ற அதிகாரிச்சி நிறை வேற்றியுள்ளாள் *(521/5)*. இரண்டாம் இராசேந்திரனின் தேவி திரைலோக்கிய முடையாளுக்கு 'முத்தான பொந் நங்கை' என்று ஒரு அதிகாரிச்சி இருந்திருக்கின்றாள் *(512/5)*. இராஜாதிராஜனின் *32* வது ஆண்டில் 'சோமயன் அமித்திரவல்லி' என்றொரு அதிகாரிச்சி இருந்திருக்கிறாள் *(520/5)*. இப்படிப் பெண் அதிகாரி கள் தொடர்ந்து இருந்திருப்பது தமிழக நிர்வாக வரலாற் றிலும், சமுதாய அமைப்பிலும் ஒரு சிறப்பு மிக்கச் செய்தி யாகும்.

*நம்பிகாடன் நம்பி:* இராஜாதித்தன் கல்வெட்டில் *(520/5)* "ஸ்தானமுடைய கேத்திர சிவபண்டிதர்க்காக திருவாராதனை செய்யும் ஆத்திரையன் நம்பி காட நம்பி" என்று ஒருவர் குறிப் பிடப்படுகின்றார். திரு K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் இவரே திருவாரூரிலும், கோயில் என்கிற சிதம்பரத்திலும் ஒவ் வொரு பாடல்கள் பாடியுள்ள நம்பிகாடன் நம்பி என்று எண்ணுகின்றார்கள் (Colas vol. II part I page 538).

*வலங்கை, இடங்கை :* கி. பி. *1428* ஐச் சார்ந்த கல் வெட்டு ஒன்று *(554/5)*, 'பொய்கை நாட்டு தென்கால சபை யாரும் வலங்கை தொண்ணூற்றெட்டு சாதியும் இடங்கை

தொண்ணூற்றெட்டு சாதியும் நிறைவர நிறைந்து குறைவர குவிந்து' என்று குறிக்கின்றது. வலங்கை, இடங்கை பற்றி விளக்கம் தருகின்ற திரு நாகசாமி அவர்கள், 'வலங்கை, இடங்கை என்னும் பாகுபாடு எவ்வாறு தோன்றியது என்று தெளிவாகத் தெரியவில்லை. பெரும்பாலும் படை அரசனின் வலக்கை புறத்தும், இடக்கை புறத்தும் வகுத்து நிறுத்தப் பட்டதிலிருந்து இது தோன்றியிருக்கலாம் என்று கொள்ளலாம். ஏனாதிநாதர் தன் படையை பாகுபடுத்தி நிறுத்தியதை 'கை வகுத்தல்' என்று பெரிய புராணம் கூறுகின்றது. சிறந்த திறன் மிக்கப் போர் புரிவோர் அரசனின் வலப்புறத்தும், அவர் களுக்கு களத்தில் படைக்கலங்களை நீட்டித்தருதல் முதலிய பணிகள் புரிவோர் இடப்புறத்தும் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்.' 'எல்லா சாதியினரும் போர் வீரர்களாகப் பணிபுரிந்திருக்கின்றனர். ஆதலின் எல்லா சாதியிலும் வலங்கை இடங்கை என்னும் பாகுபாடு காணப்பட்டது. ஆனால் பிராமணருக்குள் இப்பாகுபாடு காணப்படவில்லை.' 'சக வருடம் 1350-இல் (கி.பி. 1428) திருவையாற்றில் வலங்கை சாதி 98-ம் இடங்கை சாதி 98-ம் குறிக்கப்படுகின்றன'. 'இதிலிருந்து கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் சற்றேறக் குறைய 98 ஜாதிகள் வலங்கையிலும், இடங்கையிலும் இருந்ததாக அறியலாம்' என்று குறிப்பிடுகின்றார்கள் (யாவரும் கேளீர் பக். 140-141).

தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்களிலும் வலங்கை வேளைக்காரரர் என்று பலர் குறிப்பிடப்படுவதும் நோக்கத்தக்கது. ஸ்ரீரங்கத்திலுள்ள முதலாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு (31/1937) வலங்கை, இடங்கை சாதிகள் இடையே ஒரு பெரிய பூசல் ஏற்பட்டதாகவும், இதனால் ஊர் தீக்கிரையாக்கப்பட்டது, புனிதமான இடங்கள் அழிக்கப்பட்டன என்றும்; கள்ளர்கள் கோயில் பொக்கிஷத்தைக் கொள்ளை யடித்தனர் என்றும் அதற்காகப் பரிகாரங்கள் செய்யபப்பட்டன என்றும் குறிக்கிறது.

*தலைக்கோலி:* இராஜேந்திர சோழனின் 3வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் 'நக்கன் அல்லியான ராஜசூளாமணித்

தலைக் கோலி' என்பவள் குறிக்கப்படுகின்றாள். இராஜாதி ராஜனின் 32 வது ஆண்டுக் கல்வெட்டில் 'பதியிலாள் நக்கன் அரங்கமான ஜயங்கொண்ட சோழத்தலைக்கோலி', 'நக்கன் பூமியாந பரமாக்க விடங்கத் தலைக்கோலி', 'நக்கந் சோழ விச் சாதிரியாந ஒலோகமாதேவித் தலைக்கோலி', 'நக்கன் பவழக் குன்றான மதுராந்தகத் தலைக்கோலி', என்ற தலைக்கோலிகள் குறிக்கப்படுகின்றனர்.

தலைக்கோல் என்பது பெரிய புகழுடைய மன்னன் மாற்றரசனை வெற்றி கொண்டு, அவனது வெண்கொற்றக் குடையின் காம்பைக் கொண்டோ அல்லது மாற்றாரது எயில் புறத்தில் வெட்டிக் கொண்டு வந்த மூங்கிலைக் கொண்டோ செய்யப்பட்டிருக்கும். இதில் தங்கத் தகடு போர்த்தி ஒவ்வொரு கணுவிலும் நவமணிகள் கட்டப்பட்டிருக்கும் (யாவரும் கேளிர் பக் 256).

ஆடல் மகள் கலையரங்கு ஏறி அரங்கேற்றம் செய்யும் போது அவளைச் சிறப்பித்துத் தலைக்கோல் அளிக்கப்பட்டுத் தலைக் கோலி என்ற பட்டம் கொடுக்கப்படும். இவ்விதம் பட்டம் பெற்றவர்களே இங்கு குறிக்கப்படுகின்ற தலைக்கோலிகள் ஆவர்.

## தஞ்சைக் கல்வெட்டுக்களில் திருவையாறு

பெருமன்னன் இராஜராஜன் தான் எடுப்பித்த பெருவுடையார் கோயிலில். ஆடலும், பாடலும் சிறப்புற நிகழச் சோழ மண்டலத்தில் பல்வேறு இடங்களிலிருந்தும் 400 ஆடல் மகளிரை வரவழைத்துத் தஞ்சையில் குடியேற்றினான். இக்குடியிருப்பு தளிச்சேரி என்றும், இதனில் தென் தளிச்சேரி, வட தளிச்சேரி என்று இருபிரிவுகள் இருந்தன என்றும், ஒவ்வொன்றிலும் தென் சிறகு, வட சிறகு என்று இரு வரிசைகள் இருந்தன என்றும் அறிகின்றோம். கல்வெட்டில் முதலில் குறிப்பிடப்படும் சிறகு தெற்குத் தளிச்சேரியைச் சேர்ந்த தென் சிறகு. இதனில் முதல் ஏழு வீடுகள் ஒலோகமாதேவீஸ்வரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட தளிச்சேரிப் பெண்டிர்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. இதனை நோக்கி தன் பட்டத்தரசி லோகமாதேவி

காரணமாகத் திருவையாற்றிற்கு அவன் கொடுத்த சிறப் பிடத்தை அறியலாம். 'தெற்குத் தளிச்சேரித் தென்சிறகு தலே வீடு திருவையாற்று ஒலோகமாதேவீஸ்வரத்து நக்கன் சேர மங்கைக்குப் பங்கு ஒன்றும், இரண்டாம் வீடு இத்தளி நக்கன் இரணமுகராமிக்குப் பங்கு ஒன்றும், மூன்ரும் வீடு இத்தளி நக்கன் உதாரத்துக்குப் பங்கு . . .' என்ற முறையில், மேலும் பட்டாலி, எடுத்த பாதம், சோழகுலசுந்தரி, ஏகவீரி என்ற ஆடல் மகளிர்களும் குறிப்பிடப்படுகின்றனர். வடசிறகிலும் முதல் வீட்டில் ஒலோகமாதேவீஸ்வரத்து நக்கன் விக்கிரம தொங்கியும், இரண்டாம் வீட்டில் நக்கன் புகழியும் குறிப்பிடப்படுகின்றனர். ஒலோகமாதேவீஸ்வரக் கோயிலில் மட்டுமல்லாது திருவையாற்றி லிருந்த பிற ஆடல் மகளிரான நக்கன் திருவெண்ணுவல், அரவம் நக்கன் அம்பலக்கூத்தி, நக்கன் பொன்னு, நக்கன் அருமொழி, நக்கன் பூவனம் ஆகியோரும் தஞ்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். வடக்குத் தளிச்சேரியில் ஒலோகமாதேவீஸ்வரத்துப் பெண்கள் இருவர் 64, 73-ஆம் வீடுகளில் குறிக்கப்படுகின்றனர். இராஜ ராஜன் அமர்த்திய 400 தளிச்சேரிப் பெண்டிர்களில் சுமார் 20 பேர் திருவையாற்றிலிருந்து வந்தவர்கள் என்பது ஒரு சிறந்த செய்தியாகும். இராஜராஜனின் இக்கோயில் கல்வெட்டுக்களில் ஐயாறப்பன் நினைவாக ஐயாறன், ஐயாறு என்று பெயருடைய வர்களையும் காணலாம்.

# இலக்கியச் செய்திகள்

திருவையாற்றைப் பற்றிப் பேசுகின்ற இலக்கியங்கள் பெரும்பாலும் சைவ இலக்கியங்களாகவேஉள்ளன. திருஞான சம்பந்தர் தொடங்கி, அன்மைக் காலம் வரை திருவையாறு பலவாறு இலக்கியங்களில் காட்டப்பட்டிருக்கின்றது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஐயடிகள் காடவர்கோன், அருணகிரிநாதர், பட்டினத்தார் ஆகிய அனைவரும் திருவையாறு பற்றிய பதிகங்கள் தந்து சென்றுள்ளனர். இவை தவிர திருவையாற்றுப் பதிற்றுப்பத்து அந்தாதி, தியாகராஜர் கீர்த்தனைகள், திருவையாற்றுப் புராணம் முதலியனவும் உள்ளன.

## திருஞானசம்பந்தர்

திருவையாற்று இறைவன் மீது ஐந்து பதிகங்கள் பாடியுள்ளார். இவை முதல் இரு திருமுறைகளில் காணப்படுகின்றன. இவற்றில் ஈசனது பல தோற்றங்கள், கூத்து, இசை முதலியன சுவையாகக் தரப்படுகின்றன. மருத நிலப்பகுதியான திருவையாற்றின் இயற்கை வளம் கூறுமிடத்தில் குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகியவற்றின் கருப்பொருள்கள் குறிப்பிடப்படுகின்றன.

'குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச
மலர் பாய்ந்து வாசமல்கு
தென்றலாரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளரும் திருவையாறே'[1]

என்ற வரிகளில் குன்றுகள் குறிக்கப்படுகின்றன.

'மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய'[2]

என்ற அடிகளில் முல்லை நிலக் கருப்பொருளான மான் மருத நிலத்தில் பாய்கின்றது.

கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன் வந்து கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்துங்
கீன்றலைக்குந் திருவையாறே'[3]

என்ற அடிகளில் நெய்தலுக்குச் சொந்தமான சங்கமும், முத்தும் திருவையாற்றில் காணப்படுகின்றன.

## இசையும் கூத்தும்

ஆடலும் பாடலும், அன்று திருவையாற்றில் சிறப்புற விளங்கியமையை திருஞானசம்பந்தரது பாடல்களில் நன்கு காணலாம்.

"காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார் வீதித்
தேந்தா மென்றரங் கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே'4

என்ற அடிகளிலிருந்து திருவையாற்றுப் பெண்கள் இசை நுட்பம் தெரிந்து பண் பாடினர் என்பதையும், நடமாட அரங்கங்கள் அமைக்கப்பட்டுச் சிறந்து விளங்கின என்பதையும் நன்கு உணரலாம்.

"கமழ்தார் வீதித் தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே"5

என்ற அடிகளில் திருவையாற்றுத் தேரோடும் வீதியில் அரங்கங்கள் இருந்தன என்பதும், அவற்றில் பெண்களுக்கு நடனம் பயில்விக்கப்பட்டது என்பதும் தெரியவருகிறது.

"கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே"6

என்ற அடிகளில் கூத்தும், நடனமும் பேசப்படுகின்றன.

"வலம் வந்த மடவார் கணடமாட முழவதிர"7

என்ற அடிகளில் முரசத்திற்கு ஏற்ப நடமாடினர் என்பதும் தெரிகின்றது.

---

1–7 திருஞானசம்பந்தர் தேவாரம், முதல் திருமுறை, பதிகம் 130 தருமபுர ஆதீனம் வெளியீடு

"பூதமொடு பேய்கள் பல பாட நடமாடி
பாதமுதல் பையரவு கொண்டணி பெறுத்தி"[8]

திருவையாற்று ஈசன் விளங்கினான்.

'பாடல் வீணை முழவங்குழன் மொந்தை பண்ணாகவே
யாடுமாறு வல்லானும் ஐயாறுடையையனே"[9]

என்ற வரிகளில் எவ்விதமான இசைக்கருவிகள் இணைந்து, பண் பாடப்பட்டு, இறைவன் ஆடினான் என்பதைத் தெளிவாக உணர்கின்றோம்.

இறைவன் பாடல்கள் கேட்டு மகிழ்ந்திருந்ததைக் கூற வருமிடத்து, யார் பாடினார், எவ்வண்ணம் பாடினார் என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றார்.

"பண்ணினல்ல மொழியார் பவளத்துவர்வாயினா
ரெண்ணி நல்ல குணத்தாரிணைவேல் வென்றிக்கண்ணினார்
வண்ணம்பாடி வலிபாடித்தம் வாய் மொழி பாடவே
யண்ணல் கேட்டு கந்தானுமையாறுடையையனே"[10]

பிறசெய்திகள்

திருஞானசம்பந்தர் திருவையாற்றை "வளநகரம் திருவையாறு"[11] என்று ஒரு பதிகத்தில் அழைக்கின்றார். மற்றொரு பதிகத்தில் 'வண் திருவையாறு[12] என்று அழைக்கின்றார். இவற்றின் மூலம் அன்றைய திருவையாற்றின் சிறப்பும், செழிப்பும், நகரமாக விளங்கியமையும் நன்கு அறியலாம். மேலும் பிற மதத்தினரைப் பற்றிய குறிப்புகளும் இவரது பதிகங்களில் தெரியவருகின்றன. பிறமதத்தினரை இவர் சாடுகின்ற பாங்கினையும் அறிகின்றோம்.

---

8 தேவார அடங்கன் முறை, பக்கம் 222
மணி. திருநாவுக்கரசு முதலியார் 1928
9–10 Ibid பக்கம் 189
11 Ibid பக்கம் 158
12 Ibid பக்கம் 222

திருஞானசம்பந்தரின் இசை வளத்திற்கு ஒரு பாடலைச் சொல்லலாம். அப்பாடல்

"கட்டுவட மெட்டுமுறுவட்ட முழவத்திற்
கொட்டுகர மிட்ட வொலி தட்டும் வகை நந்திக்
கிட்டமிக நட்டமவையிட்ட வரிடஞ்சீர்
வட்டமதி லுட்டி கழும் வண்டிருவையாறே"[13]

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் திருவையாற்றைப் பற்றி 12 பதிகங்கள் தந்துள்ளார். நான்காம் திருமுறையில் எட்டு பதிகங்களும், ஐந்தாம் திருமுறையில் இரண்டு பதிகங்களும், ஆறும் திருமுறையில் இரண்டு பதிகங்களும் உள்ளன. இப்பாடல்களில் திருநாவுக்கரசர் தரும் இலக்கியச் சுவையை நன்கு அனுபவிக்கலாம். அன்றைய திருவையாற்றின் கலை, இயற்கை மற்றும் பல செய்திகளைப் பெறலாம். அவர் என்ன நிலையில் திருவையாற்று இறைவன் மீது பக்தி கொண்டு பரவசமடைந்தார் என்பதனையும் நாம் நன்கு காணலாம்.

'மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடி'

என்று துவங்குகின்ற பதிகத்தில்[14] அவர் திருவையாறு வருகின்ற காட்சியைத் தெளிவாகக் காட்டுகின்றார். ஒவ்வொரு பாடலிலும் அவர் ஈசனை, தேவியுடன் சேர்த்துப் பாடி, தான் பக்தர்களுடன் திருவையாறு அடைவதையும், அப்பொழுது அங்கு எல்லா உயிரினங்களையும் சக்தி சிவமாக கண்டதையும், இறைவனது திருவடிகளை தரிசித்து இவையே நான் கண்டறியாதவை என்று மகிழ்ச்சியடைவதையும், சுவையாகச் சொல்கின்றார். இப்பதிகப் பாடல்கள் அனைத்தும் "கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்' என்று முடிவடைகின்றன. ஒவ்வொரு பாடலிலும் அவர் வரிக்குயில், மயில், நாரை, சேவல், பைங்கிளி, களிறு ஆகியவை தங்கள், தங்கள் பெட்டைகளோடு இணைந்து வரும் காட்சிகளைக் காட்டுகின்றார்.

---

13 Ibid பக்கம் 222

''விடகிலேனடி நாயேன் வேண்டியக் கலியாதொன்று'

என்ற பதிகத்தில்[15] ஒவ்வொரு பாடலிலும் திருவையாற்று இறைவனைப் போற்றித் தான் அவனது அடிமை ஆகிவிட்டதால் இனி உய்வுற்றேன் என்பதை 'ஐயாறர்க்காளாய் நானுய்ந் தேனே'[16] என்று சொல்கின்றார்.

'கங்கையைச் சடையுள் வைத்தார்'[17] என்று துவங்கும் பதிகத்தில் இறைவனது திருக்கோலத்தின் பாங்குகளையும், அவர் தரித்திருந்த அணிகலன்கள், ஆடை போன்றவைகளையும் இறைவன் எவ்வண்ணங்களில் அருள்புரிந்தான் என்ற கருத்துக் களையும் நன்கு விளக்குகின்றார்.

''குண்டனாய் சமணரோடே கூடி நான் கொண்டமாலை''[18]

என்று துவங்கும் பதிகத்தில் தான் சமணமதத்தில் இருந்து காலத்தை வீணடித்து விட்டதால் என்றோ அடையவேண்டிய இன்பத்தை இன்று தானே அடைகின்றேன் என்று மிகநொந்து சமணத்தை வெறுத்துப்பாடுகின்றார். இதனில் நாம் சமணர்கள் பற்றி அவர்தரும் கருத்துக்களை அறியலாம்.

தமிழகத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத் திற்கு முன்னதாக சமணமதம் மிகச் செழிப்புற்று இருந்தது. சைவம் அவ்வளவு செழிப்புற்று இருந்ததற்கான சான்றுகள் மிகக் குறைவாக உள்ளன. சைவ சமயத்தை செழிப்புறச் செய்த பெருமை திருநாவுக்கரசர்க்கும், திருஞானசம்பந்தருக்கும் உண்டு. திருநாவுக்கரசர் தன் வாழ்நாளின் முற்பகுதியில் சமணமதத்தில் சிறந்துவிளங்கினார். 'மருள் நீக்கியார்' என்ற சிறப்புப் பெயர் அவருக்குண்டு. பிறகு தீராத வயிற்று வலி ஏற்படவே அவரது தமக்கையார் திலகவதியாரால் சமயம் மாற்றப்பட்டார். எனவே இங்கு சமண மதம் பற்றி அவர் தருகின்ற கருத்துக்கள் வெறுப்பில் வெளி வந்தவை என்றாலும் அவற்றில் உள்ள உண்மைகளை நாம் மறுக்க முடியாது.

'குண்டனாய்ச் சமணரோடே நான்' மயக்கம் கொண்டு திரிந்தேன் என்பதின் மூலம் சமணர்களை மூர்க்கர்கள் என்கின்றார்.

சமணர்கள் மயிற்பீலிகையை இடுக்கிக் கொண்டு திரிவார்கள் என்பதை

'பீலிகையிடுக்கி நாளும் பெரியதோர் தவமென்றெண்ணி
வாலியதறிகள் போல மதியிலார் பட்டதென்னே'[19]

என்ற வரிகளால் உணரலாம்.

சமணர்கள் பனை ஓலையாலான தடுக்குகளை வைத்திருப்பர் என்பதை 'தட்டிடு சமணரோடே தருக்கி நான்றவமென் றெண்ணி'[20] என்ற வரிகளால் உணரலாம். சமணர்கள் பல் துலக்கமாட்டார்கள், உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்ள மாட்டார்கள், விரதமிருப்பதால் உடல் வலிவின்றிக் காணப் படுவர் என்பதை,

'பாசிப்பல் மாசுமெய்யர் பலமிலாச் சமணரோடு'[21]

என்ற வரிகள் காட்டுகின்றன. சமணர்கள் கடுப் பொடியை மேனியில் அப்பிக்கொள்வர். பலவிதமான வாதங்களைச் செய்வர் என்பதனை,

'கடுப்பொடி யட்டி மெய்யிற் கருதியோர் தவமென் றெண்ணி'[22]

'பல்லுரைச் சமணரோடே பலபல காலமெல்லாஞ்
சொல்லிய செலவு செய்தேன்'[23]

என்ற அடிகளால் நன்கு அறியலாம்.

## ஐயடிகள் காடவர்கோன்

ஐயடிகள் காடவர்கோன் நாயனர் அருளிய தலப் பாடல்கள் 11ஆம் திருமுறையில் காணப்படுகின்றன. இவரே பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு என்று கருதப்படுகின்ருர். இவரது பாடல் மிக அழகானது.

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமு னெஞ்சமே
ஐயாறு வாயாலழை.[24]

---

14-23 திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (தலமுறை) பக்கங்கள் 103-110, குமரகுருபரன் சங்கம் 1961

24 ஐயடிகள் காடவர்கோன் அருளிய க்ஷேத்திரத் திருவெண்பா 11-ஆம் திருமுறை பாடல் 3 ஸ்ரீ குமரகுருபரன் சங்கம் 1963

இப்பாடலில் முதுமைப் பருவத்தின் தோற்றம் தெளிவாகக் காட்டப்படுவது சிறப்பாகவுள்ளது.

**பட்டினத்தடிகள்**

'தன்வினை தன்னைச் சுடும், ஓட்டையப்பம் வீட்டைச் சுடும்' "காது அறுந்த ஊசியும் வராதுகாண் கடைவழிக்கே" என்று பொன் மொழிகள் உதிர்த்து இன்றளவும் காவிரிப் பூம்பட்டினத்தில் விழாக்கண்டு வரும் பட்டினத்தடிகளும் திருவையாற்றின் மீது ஒரு பாடல் பாடியுள்ளார்.

மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாயுமிளைப்பாறப்—பண்ணுமயன்
கையாற வும்மடியேன் காலாறவுங் காண்பார்
ஐயா! திருவையாறு![25]

**மாணிக்கவாசகர்**

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகாதார்' எண்ணுமளவிற்கு தேன் சிந்தும் பாடல்கள் தந்த மாணிக்க வாசகப் பெருமான் திருவையாற்றின் மீது அம்மானைப் பாடல் ஒன்று பாடியுள்ளார்.

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீறணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயாறமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய்.[26]

**அருணகிரிநாதர்**

அருணகிரிநாதரும் தனது திருப்புகழில் திருவையாற்று முருகனைப் பரவசத்தோடு பாடுகின்றார்.[27] பாடலின் துவக்கத்தில் குழல், விழி, மொழி, இடை, நடை, முலை ஆகியவற்றிற்கு அவர் தரும் உவமைகள் சுவையானவை.

---

**25–27** திருவையாற்றுதல வரலாறு தருமபுர ஆதீன வெளியீடு
**29–30** **43, 1964**

சொரியும் மாமுகிலோ இருளோ குழல்
சுடர் கொள் வாள் இணையோ பிணையோ விழி
சுரர்தம் ஆரமுதோ குயிலோ மொழி இதழ் கோவை
துவரதோ இலவோ தெரியா இடை
துகளிலாவனமோ பிடியோ நடை
துணை கொள் மாமலையோ முலைதானென உரையாடி

என்று இனிமையாகப் பாடலைத் துவங்கி

திரிபுராதிகள் தூளெழ வானவர்
திகழ வேமுனி யாவருள் கூர்பவர்
தெரிவை பாதியர் சாதியிலாதவர் தருசேயே
சிகர பூதரம் நீறுசெய் வேலவ
திமிர மோகர வீர திவாகர
திருவையாறுறை வேக்ருபாகர பெருமாளே

என்று முடிக்கின்றார்.

திருவையாற்றில் நிகழும் ஏழூர் விழா சிறப்பானது. வழிபாட்டில் ஏழூர்களும் இணைந்து விளங்குகின்றன. அருணகிரிநாதர் ஏழூர்களையும் ஒரு பாடலில் குறிக்கின்றார். அப்பாடல் "மருவுலா விடுமோதி இலைப்பவர்"[28] என்று துவங்குகின்றது. அதனில்

" திருவின் மாமரமார் பழனப்பதி
அயிலு சோறவையாளு துறைப்பதி
திசையினன் மறை தேடிய முற்குடிவிதியாதிச்
சிரமு மாநிலம் வீழ்தரு மெய்ப்பதி
பதுமநாயகன் வாழ்பதி நெய்பதி
திருவையாறுடனேழு திருப்பதி பெருமானே"

திருவையாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதியிலிருந்து ஒரு பாடல்; இறைவனை 'கருணை மழை பொழியு முகிலே' என்று விழித்துச் சிறப்புக்களைப் பேசுகின்றது.

"புனிதவையாற்று வளர் அண்ணனினையன்றியே
புகலிடம் பிறிது முளதோ
தனியனேன் செய்தபிழை யாவும் பொறுத்தாண்ட
சம்புவே யகலாக் கொடுந்
துனிவுசேர் பிறவியாகிய கடல் கடக்கநின்
றுணையடிக்கலனருளுவாய்

கனிவுமெய்ஞ் ஞானவடியார் குழாந் தழைவுறக்
கருணை மழை பொழியுமுகிலே. ''29

திருவையாற்றுப் புராணத்தில் ஒரு பாடல் ஆறுகள் பல சொல்லி 'அவனியெலாமொரு குடைக்கீழ்' ஆளும் வழி சொல்கின்றது.

மெய்யாறு புடைபுரளத் திங்களோட
மேலோடப் பெரும்பாம்பு கிடந்து சீறக்
கையாறு காலேறிக் கீதம் பாடுங்
கடிகமழுந் திருமுடிமேற் கன்னலாறு
நெய்யாறும் பாலாறும் பசுந்தேறலாறு
நிறைபசுவின் றயிராறு நிறையவாட்டி
யையாறரை யாறரென்பார்க் கன்றே
அவனியெலாமொரு குடைக் கீழாளலாமே. ''30

---

*28–30* திருப்புகழ்ப் பாடல் *896* கழக வெளியீடு *1974*

23 MAR 1977

## உதவிய நூல்கள்

1. A Manual of the District of Tanjore in the Madras persidency; By T. Venkasami Row 1883 A.D.

2. Madras District Gazetters Tanjore; Vol. I; By F. R. Hemingway 1906 A.D.

3. The Cōlās; Vol. I; K. A. Nilakanta Sastri M.A., 1935.

4. 5000 years of The Art of India; By Mario-Bussagli & Calembus Sivaramamurti.

5. Early Chola Art; By S. R. Balasubrahmanyam 1966.

6. The Nayakas of Tanjore; By V. Vridhigirison M.A.; M.Lit. Reprinted from the Journal of the Annamalai University Vol. IX No. 3.

7. A Descriptive Cataloque of the Tamil Manuscripts in the Tanjore Sarasvathi Mahal Library Vol. I 1964.

8. Sri Panchnathiswaraswami Temple, Tiruvaiyaru Adhinam publication No 309.

9. Early Chola Architecture & Sculpture 866 A.D. 1014 A.D. Dougles Barrett; Faber and Faber Limited Landon.

10. South Indian Inscriptions Volumes.

11. Annual Reports on Epigraphy.

12. *வேங்கடம் முதல் குமரி வரை; காவிரிக்கரையிலே; தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் 1961.*

13. *இரண்டாவது திருமுறை, தருமபுர ஆதீனம் வெளியீடு எண் 317 1954.*

14. *தஞ்சைப் பெருவுடையார் கோவில் கல்வெட்டுகள் (முதற் பகுதி) தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1969.*

15. *இராஜராஜனின்தேவி எடுத்த கோயில்; இரா. நாகசாமி எம்.ஏ. கலைக்கதிர் வெள்ளிவிழா மலர் 1974.*

16. தியாகராஜ ஸ்வாமிகள் சரித்திரம்; S. K. சீதாதேவி செல்லம் ஐயர், கானாம்ருதப்ரசுரம்.

17 திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா மலர் 1971. தருமபுர ஆதீனம் வெளியீடு எண். 632.

18. திருவையாற்றுத் தலவரலாறு, தருமபுர ஆதீனம் வெளியீடு எண். 43.

19. மதுரை நாயக்கர் வரலாறு; அ. கி. பரந்தாமனார் எம். ஏ., 1966.

20. ஒலோகமாதேவீஸ்வரம் கல்வெட்டுகள்-கைப்பிரதி சுந்தரேச வாண்டையார் (ஐயாறப்பன் கோயில் நூலகத்தில் உள்ளது).

21. தமிழகக் கோயிற் கலைகள் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.

22. பிற்காலச்சோழர் வரலாறு; பகுதி 1; சதாசிவ பண்டாரத்தார்.

23. 'யாவரும் கேளீர்' இரா. நாகசாமி, வாசகர் வட்டம்.



மேற்குக் கோபுரம், கி.பி. 17-ஆம் நூற்றுண்டு.



சண்டிகேஸ்வரர் ஆலயமும் மேற்குக் கோபுரமும்,
கி. பி. 10-ஆம் நூற்றுண்டு.



ஒலோகமாதேவீஸ்வரம், கி.பி. 1006.





துவாரபாலகர்கள், ஐயாறப்பன் கோயில், கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.



சப்தமாதர்கள், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு தொடக்கம்.



சிவனும் அஷ்டமாதர்களும், கி.பி. 9-ஆம் நூற்றாண்டு இறுதி.



ஆலமர்ச்செல்வன், ஒலோகமாதேவீஸ்வரம்,
கி.பி. 1006.



நான்முகன், ஒலோகமாதேவீஸ்வரம்,
கி.பி. 1006.



பைரவர், கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டு.



மணக்கோலம், திருச்சுற்றுமாளிகை
கி.பி 17-ஆம் நூற்றாண்டு.



ஆடவல்லான் செப்புத்திருமேனி.
கி.பி. 12-ஆம் நூற்றுண்டு.



சிவகாமி, கி.பி. 12-ஆம் நூற்றுண்டு.



பிட்சைபுகும் பெருமான்,
கி.பி 10, 11-ஆம் நூற்றுண்டு.



காளி, கி.பி. 11-ஆம் நூற்றுண்டு.



திரிபுராந்தகர், கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.



அதிகாரநந்தி, கி.பி. 16-ஆம் நூற்றாண்டு.



ஸ்ரீ விளக்கு சிவர், கி.பி. 19-ஆம் நூற்றுண்டு.



பாவை விளக்கு, கி.பி. 19-ஆம் நூற்றுண்டு



நுளம்பர் தூண்கள், தென்கயிலாயம்,
கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.